# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMARA PUBLIC LIBRARY
4 - DEC 1961
MADRAS

பழனி பெரியாவுடையார் கோயில்—உருத்திரர்

மாலை 4] பிலவ, கார்த்திகை டிசம்பர் 1961 [மணி 3

சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்புத் துறை வெளியீடு.

13-11-61-ல் வைத்தீசுவரன் கோயிலில் (தருமை ஆதீனம்) இலவச சித்த வைத்தியசாலையை அமைச்சர் துவக்கிவைத்தல்

---

## பொருளடக்கம்

1. கீழ்வேளூர்
2. சிவலிங்க விளக்கம்
3. திருமீயச்சூர்
4. திருஅம்பர்
5. மலைநாட்டுத் திருப்பதியநுபவம்
6. திருவீழிமிழலை
7. ஸ்ரீவைஷ்ணவ குருபரம்பரை
8. சிவஞானபோதம்
9. திருநாவலூர்க் கல்வெட்டு வரலாறு
10. திருக்கொண்டீச்சரம்
11. நால்வர் நான்மணி மாலை

---

# திருக்கோயில்

ஆண்டுக் கையொப்பம் : ரூபாய் பத்து

அறநிலையப் பாதுகாப்பு ஆட்சி அலுவலகம்,
நுங்கம்பாக்கம் ஹைரோடு,
சென்னை-34.

திருக்கோயில்
திங்கள் வெளியீடு

மாலை 4] பிலவ கார்த்திகை - டிசம்பர் 1961 [மணி 3

# கீழ்வேளூர்

வெண்ணி லாமிகு விரிசடை யரவொடு
வெள்ளெருக் கலர்மத்தம்
பண்ணி லாவிய பாடலோ டாடலர்
பயில்வுறு கீழ்வேளூர்ப்
பெண்ணி லாவிய பாகனைப் பெருந்திருக்
கோயிலெம் பெருமானை
உண்ணி லாவிநின் றுள்கிய சிந்தையார்
உலகினில் உள்ளாரே

—திருஞானசம்பந்தர்.

சொற்பாவும் பொருள்தெரிந்து தூய்மைநோக்கித் தூங்காதார்
மனத்திருளை வாங்காதானை
நற்பான்மை அறியாத நாயினேனை நன்னெறிக்கே
செலும்வண்ணம் நல்கினானைப்
பற்பாவும் வாயாரப் பாடியாடிப் பணிந்தெழுந்து
குறைந்தடைந்தார் பாவம்போக்க
கிற்பானைக் கீழ்வேளூ ராளுங்கோவைக் கேடிலியை
நாடுமவர் கேடிலாரே

—திருநாவுக்கரசர்.

சிவத்தலங்கள் சிலவற்றில் முருகப் பெருமான் சிவபிரானை வழிபட்டதாக வரலாறுகள் உண்டு. கீழ்வேளூர் அத்தகைய பதிகளில் ஒன்று. திருச்சேய்ஞலூர், திருப்புள்ளிருக்குவேளூர் (வைத்தீசுவரன் கோயில்) என்பவை அவ்வகையைச் சார்ந்தனவே. கீழ்வேளூர் என்னும் தலம், திருவாரூர்—நாகூர் இருப்புப்பாதையில் கீழ்வேளூர் என்னும் புகைவண்டி நிலையத்திலிருந்து அரைகல் தொலைவிலிருக்கின்றது. ஓடம்போக்கியாற்றின் தென்கரையில் அமைந்துள்ளது. திருவாரூர்—நாகப்பட்டினம் செல்லும் பஸ்கள் இவ்வழியே செல்கின்றன.

வேள் என்றால் முருகனைக் குறிக்கும். தேவலோகத்தில் முருகனிருக்கும் தேவகந்தபுரம் மேல்வேளூர். பூலோகத்தில் இருக்கும் அவனுடைய திருவூருக்குக் கீழ் வேளூர் என்றுபெயர். சூரபதுமனைக் கொன்றபழி நீங்க முருகக்கடவுள் சிவபெருமானை இங்கு வழிபட்டதால் பூசரணியபுரம் என்றும், இலந்தை, தலவிருட்சமானபடியால் தட்சிணபதரிகாரணியம் எனவும், கோயில்கட்டு மலைமேல் இருப்பதால் சித்திரகூடபருவதம் என்றும் இத்தலத்திற்குப் பெயர்கள் உண்டு என்பதைப் புராணம் கூறுகிறது. மக்கள், கீவளூர் என்று வழங்கி வருகின்றனர்.

கீழ்வேளூர்க் கோயில் கிழக்குநோக்கியிருக்கிறது. நான்கு புறங்களிலும் வாயில்கள் உள்ளன. கிழக்கு இராஜகோபுரம் பெரியதும் அழகிய சுதை வேலைப்பாடுடையதுமாகும். கோயிலுக்குள் இரண்டு பிரகாரங்கள் உள்ளன. இவைகளுக்கு உயர்ந்த அழகிய மதில்கள் இருக்கின்றன. இராஜகோபுரத்தைத் தாண்டி உள்ளே சென்றதும் வெளிப்பிரகாரம். அதைக் கடந்து மெய்காவல் கோபுரத்தின் வழியாக

உள் பிரகாரத்துக்குச் செல்லவேண்டும். சுதைவேலையால் செய்யப்பட்ட மகாநந்தி முன்னர் தோன்றுகிறது. இது சந்நிதியை விட்டு சிறிது தென்பக்கம் விலகியிருப்பது குறிக்கத்தக்கது. கற்புடைய பெண் ஒருத்திக்காக இறைவன் நந்தியைச் சிறிது விலகியிருக்க ஆணையிட்டதாகத் தலபுராணம் கூறுகிறது. நந்திக்கு வடபுறம் மூவர் மண்டபமும், முருகன், சபாநாயகர் சந்நிதிகளும் இருக்கின்றன. தென்புறம் கட்டுமலைக்குப் போகும் வழியில் அணியொட்டிக்கால் மண்டபம் இருக்கிறது; உயரமுடையதாகவும், சிறந்த சிற்பவேலைப்பாடுடையதாகவும் திகழ்கிறது. மலைக்கேறும் படிக்கட்டுகளின் இருமருங்கும் கொடுங்கை விநாயகர் சந்நிதிகள் உள்ளன. படிக்கட்டு தொடங்குமிடத்தின் தென்புறம் வடக்கு நோக்கி பாலசுப்பிரமணியன் தவக்கோலத்துடன் காட்சியளிக்கிறார். மலைப்படிகள் சந்நிதிக்கு நேராக இல்லாமல் தென்புறமே அமைந்திருக்கின்றன. அதுவே மாடக் கோயில்களுக்கு அடையாளம். கோச்செங்கட் சோழன் என்ற மன்னன் யானை புகமுடியாத மாடக்கோயில்கள் கட்டினன் என்பது யாவருமறிந்ததே. "எண்டோளீசற்கு எழில்மாடம் எழுபது செய்துலகாண்டான்" என்று திருமங்கையாழ்வார் புகழ்ந்து பேசுகிறார். திருநாவுக்கரசர், "பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும் பெருங்கோயில் எழுபதினோடெட்டும்" என்று அடைவுத் திருத்தாண்டகத்தில் அருளியிருக்கிறார். சிக்கல், தேவூர், வலிவலம் முதலிய தலங்களிலுள்ள கோயில்களும் மாடக் கோயில்களே.

கீழ்வேளூர் மாடக்கோயிலில் படிகள் மேல் ஏறிச்சென்றதும் எதிரில் கிழக்கு நோக்கி **தேவநாயகர்** (சோமாஸ்கந்தமூர்த்தி) சந்நிதி இருக்கிறது. அதற்கு வடபுறம் தான் கர்ப்பக்கிரகத்தில் மூலலிங்கமூர்த்தி எழுந்தருளியுள்ளார். **அட்சயலிங்கர், கேடிலியப்பர்** என்பவை இறைவனுடைய திருநாமங்கள். அட்சயம் என்றால் கேடு இல்லை என்று பொருள். கட்டுமலையின் பேரிலேயே கர்ப்பக்கிரக விமானத்தைச் சுற்றிவர ஒருசிறு பிரகாரம் இருக்கிறது.

தெற்கு உட்பிரகாரத்தில் விசுவநாதர், அறுபத்துமூவர் சந்நிதிகள் இருக்கின்றன. கோஷ்டத்தில் தென்முகக் கடவுள் எழுந்தருளியுள்ளார். மேற்கு உட்பிரகாரத்தில் அகத்தீசுவரர், ஆளுங்கோவேசுவரர், விசுவநாதர், மகாலட்சுமி, ஜம்புகேசுவரர், கைலாசநாதர் முதலியோருடைய சந்நிதிகள் இருக்கின்றன. தென்மேற்கு மூலையில் மதிற்சுவரில் துளஜாஜி மன்னர், வெங்கடபதியாபிள்ளை, இடபாரூடர் இவர்களது அழகிய உருவங்கள் கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. மேற்குப் பிரகாரத்திலேயே தலவிருட்சமான **இலந்தை** (பதரி) இருக்கிறது. வடபுறம் கோஷ்டத்தில் **துர்க்கை** காணப்படும். வடக்கு உட்பிரகாரத்தில் ஏகாம்பரேசுவரர், அண்ணாமலை ஈசுவரர், பிரகதீசர், சண்டேசுரர், சோளீசுவரர், குபேரன், காயாரோகணேசர், காளத்தீசர் முதலியவர்களுடைய தனிச் சந்நிதிகளும் இருக்கின்றன. குபேரனுக்குக் கோயிலிருப்பது தனிச் சிறப்புடையது. இவையேயன்றி வடமேற்கு மூலையில் அம்பிகையின் தனிக்கோயில் இருக்கிறது. **சுந்தரகுசாம்பாள், வனமுலைநாயகி, பதரிவனமூலநாயகி** என்பவை தேவியின் திருப்பெயர்கள். இறைவி கிழக்குநோக்கிக் காட்சியளிக்கிறாள்.

உட்பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில் வடக்கு நோக்கி பத்திரகாளியம்மன் சந்நிதி இருக்கிறது. முருகன் இத்தலத்தில் இறைவனை நோக்கித் தவம் செய்தபோது அம்பிகை மேலிருந்து நான்குதிக்குகளிலும் அவருக்கு யாதொரு இடையூறும் நேராமல் காத்துக்கொண்டிருந்ததாகவும், அதனால் அம்மைக்கு அஞ்சுவட்டத்தம்மன் என்ற பெயர் ஏற்பட்டதென்றும் புராணம் கூறுகிறது. இத்தலத்திற்கு இந்த சந்நிதி மிகவும் சிறப்புடையது. மிகவும் சக்தியுடைய தெய்வம். மக்கள் மிகவும் பயபக்தியுடன் வழிபடுகின்றனர். சுதையினால் செய்யப்பட்ட திருவுருவம். சாம்பிராணித் தைலம் சாத்தப்படுகிறது. மூலவருக்கு மேல்புறம் உற்சவமூர்த்தி சந்நிதியும் இருக்கிறது.

வெளிப் பிரகாரத்தில் தென்கிழக்கு மூலையில் விநாயகர் கோயில் ஒன்றும், தென்மேற்கு மூலையில் சுந்தரகணபதி சந்நிதியும் இருக்கின்றன.

தலபுராணத்தில் இத்தலத்திற்கு ஒன்பது தீர்த்தங்கள் சொல்லப்படுகின்றன

(1) **சுவாமிகுண்டம்**—இது மாடக் கோயிலுக்கு மேல்பக்கம் தலவிருட்சமான இலந்தை மரத்துக்கு அண்மையில் இருக்கிறது. (2) **சரவணதீர்த்தம்** கோயிலுக்கு வெளியில் கீழ்க் கோபுரவாயிலுக்குத் தென்புறமுள்ள திருக்குளம். முருகப்பெருமானும் நவ வீரர்களும் இந்த தீர்த்தத்தில் நீராடி இறைவனை வழிபட்டு அசுரர்களைக் கொன்ற வீரஹத்தி நீங்கப்பெற்றுர் என்று கூறப்படுகிறது., (3) **இந்திர தீர்த்தம்** சரவண தீர்த்தத்தின் பக்கமுள்ள தேவேந்திரப் பிள்ளையார் கோயிலருகே உள்ளது. மார்கழியில் இந்திரவிழா நடைபெறும்போது இந்த தீர்த்தக் கரையில் சுவாமி தீர்த்தம் கொடுப்பார். (4) **அக்கினி தீர்த்தம்**. (5) **யம தீர்த்தம்** கோயிலுக்குவெளியில்தென்மேற்கு மூலையில் இவையிரண்டும் **அரசாணிக்குளம்** என்று வழங்கப்பட்டு வருகிறது. (6) **சேஷ தீர்த்தம்** என்பது மேலவீதியில் அனந்தேசுவரலிங்கத்தின் முன்னுலிருக்கிறது. பிரமோற்சவத்தில் சுவாமிஎழுந்தருளி இங்கேதான் தீர்த்தம் கொடுப்பர். (7) **பிரமதீர்த்தம்** இது வடக்கு கோபுரவாயிலின் பக்கமிருக்கும் திருமஞ்சனக் குளம். (8) **சூரியதீர்த்தம்** கோயிலுக்கு வடகிழக்கிலுள்ள தொண்டமான் குளம் என்பது. (9) **சந்திர தீர்த்தம்** கோயிலுக்கெதிரிலுள்ள தேரடிக்குளம். கிழக்குக் கோபுரவாயிலுக்கு வடபுறம் உள்ளே உள்ள கிணற்றினின்றும் நல்ல தண்ணீர் எடுத்துத் தேக்கம் கட்டி மக்கட்குப் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த தலத்தில் அஞ்சுவட்டத்தம்மன் கோயில், நந்தி சந்நிதியைவிட்டு விலகியிருப்பது, சிவபெருமான் வலது காலைத் தூக்கி மாறியாடி அகத்திய முனிவருக்குக் காட்சி கொடுக்கும் வலதுபாத தாண்டவம், குபேரன் தனிக்கோயில் இவை சிறப்பானவை. முருகக்கடவுள் வழிபட்டது, முரகரன், பிரமன் பூசனை புரிந்தது, இந்திரன் சாபவிமோசனம் பெற்றது, அக்கினி தேவன் சித்தியடைந்தது, எமன் பூசனை செய்தது, சந்திரன் வரம்பெற்றது, அகத்தியர், சிவபெருமான் திருமணக்கோலம், கால்மாறியாடியது இவை கண்டது, வசிட்டமுனிவர் வரமடைந்தது, மார்க்கண்டர் பூசித்தது, துன்மதி முத்தியடைந்தது, சந்திரகுப்தன் தனம்பெற்றது, சவ்வீரன் சாபம் நீங்கியது, விதுர்மன் வழிபட்டது, தர்மக்ஞன் முத்தியெய்தியது, கழுதை சாபம் நீங்கியது, இறைவன் ஒரு அந்தணன் மனைவி கற்பைக் காத்தது, ஆடு ஒன்று நிகழ்த்திய அற்புதம் முதலியவை இத்தலத்தில் நடைபெற்றதாகத் தலபுராணத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இத்தலத்து எம்பெருமான்மீது திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் ஒவ்வொரு பதிகம் பாடியருளியிருக்கின்றனர். **சம்பந்தப்பெருந்தகையார்** இப்பதியில் இறைவன் எழுந்தருளியிருப்பதைப் **பெருந்திருக்கோயில்** என்று புகழ்கிருர். ஒரு பாடலில் அம்பிகையின் பெயரான **வனமுலையவள்** என்பதைக் குறிக்கிருர். **அப்பரடிகள்** ஒவ்வொரு பாடலிலும் "கீழ்வேளூராளுங் கோவைக் **கேடிலியை** நாடுமவர் கேடிலாரே" என்று கூறுகிருர். அட்சயலிங்கர் என்று பொருள்படும் **கேடிலியப்பர்** பெயரைக் குறிக்கிருர். **சுந்தரர்** நாகப்பட்டினத் தேவாரத்தில் "கிறிபேசிக் கீழ்வேளூர்புக்கிருந்தீர் அடிகேள்" என்று சொல்லியிருக்கிருர். **க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்** வாரானைப் பருவத்தில் "மண்டு பேரொளியான கேடிலியை யர்ச்சித்த வள்ளிநாயகன் வருகவே, மாகாளிகாத்த கீழ்வேளூரில் மாதவம்வளர்த்த வேலவன் வருகவே" என்று அஞ்சுவட்டத்தம்மன் காக்க குமரக் கடவுள் தவம்புரிந்ததைச் சொல்லப்பட்டிருக்கிறது. **கீழ்வேளூருலா** என்னும் நூலில் "எங்கும் கேடுண்டாயும் இத்தலம் கேடின்மையால் தங்குங் கேடில்லாதவனுனேன்" என்றும் கூறப்பட்டிருக்கிறது. இசைப் பேரறிஞர்களில் ஒருவரான திருவாரூர் முத்துசுவாமி தீட்சதர் அவர்கள் "அட்சய லிங்கவிபோ—சுவாயம்போ, அகிலாண்டகோடி பிரபோ—மாஹிசம்போ" என்று தொடங்கும் கீர்த்தனை யொன்றை இத்தலத்து இறைவன்மீது பாடியுள்ளார்.

முற்காலச் சோழர்களில் ஒருவனுன கோச்செங்கட் சோழன் கட்டிய மாடக் கோயில்களில் இது ஒன்றுனபடியால் மிகப் பழைய கோயில் என்பதற்கையமில்லை. மேலும் மூன்று தளங்களையுடைய கர்ப்பக் கிரகம் முழுவதும் கருங்கல்லினுல் அமைக்

கப் பெற்றது. இவ்வகையாகக் கட்டப் பெற்றிருப்பதை வெகு சில கோயில்களில் தான் காணலாம். மேலும் அந்த விமானம் போன்றே மற்றெரு கருங்கல் விமானம், கீழ்க் கோபுரத்திற்குத் தென்புறம் கோயிலுக்குள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. இதன் சிற்ப அமைப்பு வெகு அழகுடையது. (படம் காண்க). இரண்டு பிரகார மதிற் சுவர்கள் ஓங்கி உயர்ந்து நிற்கின்றன. வெளிப்பிரகாரச் சுவர்களில் பல அற்புதச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. பல்லக்கு தூக்கிச் செல்வது, இறைவன்மேல் காமன் கணைதொடுப்பது; கண்ணப்பர் கண்ணப்புவது, சீதை தூக்குப்போட்டுக் கொள்ளச் செல்கையில் அனுமான்மரத்தின்மேலிருப்பது, இராமன் முன்னிலையில் அனுமான் வாய்பொத்தி நிற்பது, கண்ணன் குழல்வாசிப்பது, மீன், பன்றி, இடபகுஞ்சரம், யானை, ஒட்டகம், மயில் முதலியவை அழகான சிற்பங்கள்.

லாலி என்பவர் படையெடுப்பின் போது 1758-ல் இந்த கோயிலுக்கு அழிவு ஏற்பட்டது. இக்கோயிலில் தமிழ்க் கல்வெட்டுக்களும் மராத்திக் கல்வெட்டுக்களும் இருக்கின்றன. மூன்றும் இராஜ ராஜசோழனின் கி. பி. 1213 ஆண்டுக் கல்வெட்டொன்று கோயிலுக்கு நிலதான அளித்ததைக் குறிக்கிறது. மற்றெரு கல்வெட்டு இராஜராஜ சோழன் I (கி. பி. 985—1014) காலத்தது சிதைந்துபோய்க் காணப்படுகிறது. மேற்குப் பிரகாரச் சுவரிலுள்ள மராத்திக் கல்வெட்டில் தஞ்சையை கி. பி. 1763 முதல் 1787 வரை ஆண்ட துளஜாஜ ராஜா பிரகாரத்தை கி. பி. 1775-ல் கட்டியதை அறிவிக்கிறது. வடக்குக் கோபுர உள்மண்டபத்தில் அஞ்சுவட்டத்தம்மன் சந்நிதி பலகணிக்கருகில் கி.பி.1715ல்-துகோஜி மன்னன் தர்மம் என்று குறிக்கும் தமிழ்க் கல்வெட்டிருக்கிறது. அட்சய லிங்கசுவாமி கோயில் கட்டளையை இம்மன்னன் காலத்தில் வெங்கடபதியாபிள்ளை என்பவர் பார்த்துவந்தார். அவரும் அவர் சந்ததியாரும் பல திருப்பணிகளும், திருவாபரணங்களும் செய்திருக்கின்றனர். சபாநாயகர் சந்நிதி மண்டபம் கி. பி 1859-ல் இந்த சந்ததியினரே கட்டியதாகவும் ஒரு கல்வெட்டு கூறுகிறது. தெற்குக் கோபுரத்திலுள்ள கல்வெட்டொன்று சகாத்தம் 1735 (கி.பி.1813)ல் குமாரசுவாமி பிள்ளை தெற்குக் கோபுரம் முகூர்த்தம் பண்ணிக் கட்டினது என்று தெரிவிக்கிறது. கொடிமர தர்மம் கி.பி.1902ல் நாகை S. T. M. துரைசாமிப் பிள்ளை யென்பவராலும், அஞ்சு வட்டத்தம்மன் சந்நிதித்திருப்பணி கோயில் தரும கர்த்தராயிருந்த K. V. சுப்பையா முதலியாரால் 1944-லிலும் செய்யப்பெற்றன.



கீழ்வேளூர் - அட்சயலிங்கசாமி கோயில்முன் தரையில் இருக்கும் கோயில் விமானத்தின் மாதிரி

# சிவலிங்க விளக்கம்

4 - DEC 1961

## (தேவலாயத் திருவிழாத் தத்துவத் தெளிவு)

[காசிவாசி—சிவானந்தயதீந்திர சுவாமிகளால் இயற்றப்பெற்ற "திருவொற்றியூர்த் தலபுராணசாரம்" என்ற நூலினின்றும் எடுத்து வெளியிடப் பெறுகிறது.]

ஈண்டு, தெய்வம், ஆலயம், திருவிழா என்பவற்றை. யாண்டும், எக்காலத்தும், எல்லா மதத்தரும் உடன்பட்டு வருகின்றனர் என்பதில் ஐயம் சிறிதுமில்லை, எனினும் உற்றுநோக்காதார் சிலர், இவை அறிவிலார் செய்கைகள் என்று வாய்ப்பறையடித்து வாணாளை வீணாளாகக் கழிக்கின்றனரே யென்று பரிதாபப்பட்டு இவற்றின் தத்துவங்களைத் தெளிதலும் பெரும்பயனுடைய தெனக் கருதி, தெய்வம், ஆலயம், திருவிழா என்பவற்றின் தத்துவார்த்தங்களைச் சிறிது விளக்குவாம்.

"திவு, க்ரீடா விஜிகிஷா வியவஹார த்யுதி ஸ்துதி
மோத மத ஸ்வப்ன காந்தி கதி(களில்) ழு"

என்பது வடமொழி பாணினி வியாகரண சூத்திரம்.

அதாவது, விளையாடல், வெல்லும் வேட்டை, வழக்கு, விளக்கம், துதி, இன்பு, களிப்பித்தல், கனவு, ஒளி, (கீர்த்தி) அடைவு என்னும் பொருள்களைக் கொண்ட 'திவு' என்னும் வடமொழிப் பகுதியிலிருந்து வந்த சொல் 'தெய்வம்' எனப்படும் என்பதாம்.

இதன் பொருளோ, தனது வடிவில் விளையாடி மகிழ்வது, பிறவற்றால் வெல்லப் படாதது, நலம் தீமை என்னும் வழக்கை யுணர்கின்றது, இன்பவடிவாயது, துன்பைப் போக்குகின்றது, ஊழிமுடிவில் சாந்தமாய் நிற்பது, அனைவராலு மறியப்படுவது தெய்வம் என்பதாம்.

இதையே, பண்டைக்காலத்திய தமிழ் நூல்களும், 'வழிபடு தெய்வம் நிற்புறங் காப்ப', 'தெய்வமஞ்சல் புரையறத் தெளிதல்' எனவும், 'தெய்வந்தொழாள்', 'தெய்வத்துள் வைக்கப்படும்' எனவும், 'தெய்வமிகழேல்', 'யாதொரு தெய்வங்கொண்டீர்', 'அறிவான தெய்வமே' எனவும் எடுத்தோதுகின்றன.

மற்றும், இப்பொருளை மேற்கொண்டே 'கடவுள் வாழ்த்தொடு கண்ணியவருமே' 'காமப்பகுதி கடவுளும் வரையார்' எனவும், மெய்ப்பொருள், பெரும்பொருள் எனவும் கூறுகின்றன.

இதில் 'தெய்வம்' என்னுஞ்சொல், எல்லா மொழிகட்கும் பொதுவாய், எல்லாத் தெய்வங்கட்கும் பொருந்திய ஒரு திருநாமமாய், மதக்கோட்பாடு பற்றியும், மனக்கோள் கொண்டும், பலபல சிறு தெய்வங்களைக் குறிப்பிப்பதாயிருப்பினும், முடிவில் மாற்ற மனங் கழிய நின்ற மறைப்பொருளாகிய சைதன்யத்தையே யுணர்த்துகின்றது.

அற்றாகலினன்றே, இறைவனுக்கு இயல்பு கூறுமிடத்து, 'வினையின் நீங்கிய விளங்கிய அறிவின்', என்று சைதன்யப் பொருண் மேற்றாய்ப்புகலாநின்றது.

இத்தகைய சித்தாகிய சிவமே, கடவுதலாலும், கடந்து நிற்றலாலும், 'கடவுள்' எனவும், பேரொளிப்பிழம்பாய்ப் பிரகாசித்தலின் தெய்வம் எனவும், மற்றும் பிறவாற்றானும் வழங்கப்படுகின்றது.

இதுபற்றியே திருக்குறளாசிரியரிற் சிறந்தாராகிய மணக்குடியர், 'எக்காலத்தும் எவ்விடத்தும், ஒருதன்மையாக அழியாது நிற்றலின் "மெய்யாயிற்று" எல்லாப்பொருளை யுங்காண்டலால், 'அறிவாயிற்று' என்று கூறியுள்ளார்.

இத்தகைய உண்மைத் தெய்வமானது, தத்துவங்கடந்த தனிமுதற் பொருளாய், அறிவுமயமாய், அருவாய், ஒன்று, இரண்டு, என்பது முதலான வழக்குகளற்றதாய், மறைகட்கெட்டாத மௌனவைப்பாயிருக்கும் என்பது அனைவராலும் கொள்ளற்பாலதாம். இதுபற்றியே

ஒன்றன் றிரண்டன் றுளதன் றிலதன்று
நன்றன்று தீதன்று நானன்று—நின்ற
நிலையன்று நீயன்று நின்னறிவு மன்று
தலையன் றடியன்று தான்

எனவும்,

'அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாச மாய்' எனவும், 'கேட்டாரு மறியாதான் கேடொன்றில்லான்', 'தன்னேரில்லோன்' 'கருவாய் உலகினுக்கப்புறமாய்' எனவும், 'இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணுதே' எனவும் பிறவாற்ருனும் நிஷ்கள மாகவே கூறுகின்றன உண்மை நூல்களும்.

இத்தன்மைத்தாகிய பரம்பொருள், மரமும் காழ்ப்பும் போலும், எரியும் சூடும் போலும், தன்னேடு பிரிப்பற்ற சிற்சக்தியை நிமித்தமாகவும், அருளேயே முதற்காரண மாகவும் ஏற்றுத் திருவுருக்கொண்டெழுந் தருளும் என்பது துணிபாம். அது பற்றியே,

அகளமா யாரு மறிவரிதப் பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற,

எனவும்,

'ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம்' எனவும், 'பேராயிரம் பரவும் பெம்மான்', 'ஒரு பதினுயிரந் திருநெடு நாமம்', 'அருளுருவுயிருக்கென்றே யாக் குவன்', 'உருமேனி தரித்துக்கொண்டதென் றலும்' பிறவும் பல்வகையாய்க் கூருகின்றன.

ஈண்டு, கடலில் அலே, திரை, நுரை, குமிழி முதலாயின போன்று எண்ணிறந்த திருமேனிகளேத் தாங்குவதற்குக் காரண மாகிய சத்தி அப்பரம்பொருள் வடிவேயாம். இக்கருத்தையே,

அருளுண்டா மீசற் கதுசக்தியன்றே
அருளு மவனன்றி யில்லே—அருளின்று
அவனன்றேயில்லே யருட்கண்ணுர் கண்ணுக்
கிரவிபோ னிற்குமரனேய்ந்து

எனவும்,

பொன்னிறங் கட்டியினும் பூணினும் நின்றுற்போல்
அந்நிற மண்ணலும் அம்பிகையும்—செந்நிறத்தன்
எந்நிறத்த ளாயிருப்பள் எங்கள் சிவபதியும்
அந்நிறத்தனுயிருப்பனுங்கு,

எனவும்,

'வரும் வடிவெல்லாஞ் சத்தி சத்திதான் மரமுங்காழ்ப்பும், இருமையும்போல மன்னிச் சிவத்தினே டியைந்து நிற்கும்', எனவும், பிறவும் கூறுகின்றன.

அருவப்பொருளாயுள்ளது உருவப் பொருளாதல் அமையாதெனின்? அற்றன்று, பனிநீர் கட்டியாதல் போலும், கண்ணீர், முலைப்பால் ஆவின்பால் முதலியனபோன் றும் பொருந்துமாறறிக.

அற்ருகலினன்றே,

இல்லா முலைப்பாலும் கண்ணீரு மேந்திழைபா
னல்லா யுளவாமா னீர்கிழல்போல்—இல்லா
அருவாகி நின்ருனை யாரறிவார் தானே
யுருவாகித் தோன்ருனே லுற்று

எனவும்,

உளனெங்கு மிலனிங்கு முளனென்பார்க்கும்,
விருப்பாய வடிவாகி யிந்தனத்தினெரிபோன்
மந்திரத்தில் வந்துதித்து மிகுஞ் சுரபிக்கெங்கும்
உருக்காண வொண்ணுத பான்முலைப்பால் விம்மி
யொழுகுவது போல் வெளிப்பட்டருளுவ
னன்பர்க்கே,

எனவும், பிறவும், கூறுகின்றன.

இவ்வாறு ஏற்றுக்கொண்டருளாநின்ற திருமேனிகள் எண்ணிறந்தன. அவற்றுள், சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், மகேசுரன், உருத்திரன், விஷ்ணு, பிரமன், என்னும் ஒன்பது வகைகளன்றி, சந்திர சேகரர், முதலான இருபத்தைந்து திருமேனி களும், ஆன்மாக்கட்கு, போகயோகங்களே யளித்தருள்கின்ற திருமேனிகளாம். சதா சிவத்திருமேனி, மகேசுரனிடத்திலிருந்தே தோன்றியபடியால் அது அவன்பால் அடங்கு மென்றுணர்க, இப்பொருள்களே யுள்ளடக் கிக்கொண்டே,

ஒன்ரு யிருதியமா யோரைந்தா யையைந்தாய்
அன்ரு தியின்மீட்டு மைந்தா யளப்பிலவாய்
நின்ருவிகட்கு நலம்புரிதற்கே யன்ரே,

என்னுங் கந்தபுராணப் பாட்டும் எழுந்தது.

இத்தகைய அருட்டிருமேனிகளுள், பரசிவத் திருமேனியே, தெய்வத்தன்மை ததும்புவதும், சிவதத்துவத்தையுடையது மாகிய பேரருட்டிருமேனிப் பிழம்பாம். இதுபற்றியே,

'தெய்வஞ் சிவமே சிவனருள் சமயம்' என்று கூறுகின்றது உண்மை மறையும்.

இதுவே, மறைகளுள் சிறந்த சதவுருத் திரிய நடுவில் மணிபோன்று விளங்குவது மாம். மகாகாரண பஞ்சாக்கரமெனவும், உருத்திரம் எனவும் வழங்கப்படுவதும், சிவ, என்னும் இத்தத்துவப் பொருளே யென்பது முணரற்பாலாது. இதன் பெருமையை,

அளவிறந்தது வருள்சிவ சிவசிவ
அகநிறைந்தது வடிவிணை சிவசிவ
உளமிறந்துயி ருணர்வொடு பரமற
ஒளிருகின்றது சிவசிவ சிவசிவ

என்றற்றொடக்கத்து உண்மை வாக்குகளா லுணர்க.

இக்கருத்துக் கொண்டே,

சிவசிவ வென்கிலர் தீவினையாளர்
சிவசிவ வென்றிடத் தீவினைமாளும்
சிவசிவ வென்றிடத் தேவருமாவர்
சிவசிவ வென்னச் சிவகதிதானே

என்று திருமூலரும் கட்டளையிட்டருளா நின்றார்.

இவற்றுள், சிகாரமானது, பதியக்கரம், மகாமநு, பெருவெழுத்து, பேசாவெழுத்து எனவும், 'வகாரம்' பரையெழுத்து, பேசு மெழுத்து எனவும் வழங்கப்பெறும்.

மற்றும், பதியெழுத்தெனப்பெறும் சிகாரம், தேயு தத்துவமாயும், செந்நிறமாயும் அக்கினி மயமாயும், எல்லாவுணர்வுகளையும் விளக்கும் வித்தியாகலையாயும், அகோரமாயும், மூர்த்தி சாதாக்கியமாயும், உருவாயுமுள்ள ஞான இரவியாய்த் திகழும்.

பரையெழுத்தாகிய 'வகாரம்' வாயு தத்துவமாயும், பரிசவிடயமாயும், புகை நிறமாயும், காற்று மயமாயும், சாந்தி கலையாயும், தத்புருடமுகமாயும் தம்பாகாரமாக விளங்குவதாயும், கோடிசூரியப் பிரகாசமுடையதாயுள்ள அமூர்த்தி சாதாக்கியமாயும், மகேசுவர ரூபமாயும், திரோபவத்தைச் செய்கின்ற சத்திவடிவாயுமிருக்கும்.

அஃதன்றியும், 'சி' என்னும் வடமொழிப்பகுதி, கிடத்தல், மெலிவித்தல், கூருவித்தல் என்பது முதலான பொருள்களைத் தருவதும், 'சி' என்பதை 'வசி' என எழுத்து மாறின், பலவகை அரிய பெரிய பொருள்களைத் தருவதுமாம்.

சிவப்பொருளே, அருவம், உருவம், அருவுருவம் என்பது முதலான எண்ணிறந்த திருநாமத்திருவுருவங்களைத் தாங்கி, வழிபடுவோர்களின் அன்பின் தாரதன்மியப்படி திகழ்ந்து அருளுகின்றது.

இதையே,

அருவ மாகுவ னுருவ மாகுவ னருவு
முருவ மில்லதோர் தன்மையு மாகுவ னூழின்
கரும மாகுவ னிமித்தமு மாகுவன் கண்டாய்,

என்று விளக்குகின்றது.

இத்தகைய பரசிவமே, அன்பர்களின் எல்லைகடந்த அன்பு காரணமாய், சாந்திகலை, தற்புருடமுகம், அமூர்த்தி சாதாக்கியம் எனப்படுவதாயும், சோதித்தம்பமாயும் உள்ள சிவலிங்கத்திருமேனி கொண்டெழுந்தருளு மென்க.

அன்பர்கட்கு, பரசிவன், சோதித்தம்ப வடிவாய் எழுந்தருளுவன் என்பது திருவொற்றியூர்த் தலமகிமையானும், திருவருணைத் தலச்சிறப்பானுந் தெளிந்துகொள்க.

இதைத் தழுவியே அட்டமூர்த்தங்களுள் அக்கினியே பரசிவ வடிவென வழிபடப்பெறுகின்றது. இதைக்கொண்டே எல்லாம், சிவ வழிபாட்டில் அடங்கும் என்பதும், எல்லா மதத்திற்கும் அவ்வத்தெய்வமாக நிற்பது சிவமே என்பதும் இனிது பொருந்துமாறு காண்க.

அற்றேல், அக்கினியையே பரசிவமென்னலாமோவெனின்? அற்றன்று என்னை? நூல்கள், அக்கினி சிவமல்லவென்று மறுத்திருத்தலானும், அக்கினியே சிவனது திருமேனியெனப்படுதலின் அக்கினிக்குள்ளுமிருந்து அக்கினியையுஞ் செலுத்துவதாகிய சைதன்ய மயமாகியஉள்வெளியில் திகழும்சிற்சோதியே பரசிவமாமெனத் துணியப்படுதலினானுமென்க. அக்கினியே பரசிவமெனல், பிரகாச ஒப்புப்பற்றி உபசார மென்றுணர்க.

இதுபற்றி யன்றோ,

'திரிதரு வாயுவல்லர் செறி தீயுமல்லர்'

எனவும், 'எரிபெருக்குவர் அவ்வெரியீசன துருவருக்கம தாவ துணர்கிலார்''

எனவும், தெய்வத் திருமறைகளுந் திருவாய்மலர்ந்தருளுகின்றன.

ஈண்டு, 'ஈசனதுஉரு'என ஆறும் வேற்றுமையை விரித்திருத்தலின், ஈசன் வேறு என்றும், ஈசனது உருவாகிய திருமேனி வேறு என்றுங் கொள்ளக்கிடந்தமை காண்க.

இதனால்,

''சுடர்கின்ற கேவலந் தீயேயெனு மன்னுஞ் சிற்றம்பலவர்'' எனவும்,

''பொங்கழலுருவன் பூதநாயகனால்''எனவும், பிறவும், கூறும் மொழிகளும், சிற்சோதியாகிய சிவபெருமானுடைய திருமேனி, தீயெனல் உபசார மென்பதை உற்றுநோக்கித்

தெளிக. இதன் விரிவை, சாமவேத வுருத்திர விருத்தியுரையிற் காண்க.

இதனாலன்றே, பரசிவனது சோதித் தம்பத்திருவுருவை விளக்குதற் பொருட்டே வட்டமாய்த் தம்பம் போன்று ஒரு வடிவைச் சிவலிங்கமென வேதாகம புராணங்களும் விளம்புகின்றன.

ஈண்டுச் சிவலிங்கம் என்பதில், லிங்—லயம், கம்—தோற்றம், எனப் பொருள்படுதலின், உலகு தோற்றி யொடுங்குதற்கு இடம் லிங்கமெனப்படும் என்பது கொள்ளக்கிடக்கின்றமை காண்க.

அல்லது, லிங்கம்—பிரகாசம்; அதாவது படைத்தல் முதலான ஐந்தொழில்களால் உலகைப் பிரகாசஞ் செய்வதால் இலிங்கம் எனவுங் கொள்ளலாம். இதனால், பரசிவனது பிரபாவமே சிவலிங்கமாயிற்றென்பது தெளியப்பட்டது.

மற்றும், இலிங்கம் என்பது அடையாளம், அதாவது ஒரு பொருளை இதுவென உணர்த்துதற்குரிய குறியாம். என்னை? யாண்டும் நேரிற்காட்ட முடியாத ஒரு பொருளை ஒரு குறியைக்கொண்டு அப்பொருள் இத்தன்மைத்தென்று அறிவுறுத்தல் வழக்கு; அதுபோல் பரம்பொருள் இத்தன்மைத்தென நேரே காட்ட முடியாமையின் இக்குறியைக் கொண்டு தெரிவித்தலால், காணப்படும் கற்றம்பம் சிவலிங்கமென வழங்கப்படுகின்றது.

அல்லது, சிவமே இலிங்கம், அதாவது சிவமாகிய இலிங்கம் என்று பண்புத்தொகையாய்க் கொள்ளினும் இனிதமையும். ஈண்டு, சிலை முதலானவற்றிலுள்ள வடிவ விசேடத்தைச் சிவமெனல் உபசாரம்.

அல்லது, சிவலிங்கம் பிரணவ வடிவமெனினும் அமையும். என்னை? அகாரம் கண்டம், உகாரம் கோமுகம், மகாரம் வட்டம் எனவும்; அகாரம் சிவம், உகாரம் சத்தி, மகாரம் பரம் எனவும்; அகாரம் நாதம், உகாரம் விந்து, மகாரம் கலை எனவும்; விருத்தம் உருத்திரக்கூறு, நடு எட்டு மூலை மாயோன் கூறு, கீழ் நான்கு மூலைக் கூறு பிரமன், உருத்திரன் கூறு ஆண்பால், விஷ்ணுவின் கூறு பெண்பால், பிரமன் கூறு பலவின்பால் எனவும் கொள்ளப்படுதலாலென்க, இது பற்றியே,

ஞானம், ..த்தியம், கருவி, கரணம் முதற்கொண்டு பல பொருள்களையுஞ் சிவலிங்கமென்பர் பிறரும்.

இதை,

பரசிவம் பிரமமென்னப் பட்டொரு திரிபுமின்றி உரைமனம் இறந்து நின்ற ஒரு சிவலிங்கத்தன்னில், என்பது முதலியவற்றாற் றெளிக.

பிரமமே இலிங்கமெனவும், மற்றும் ஆசாரலிங்கம், குருலிங்கம், சிவலிங்கம், சங்கமலிங்கம், பிராசாதலிங்கம், மகாலிங்கம், என ஐம்பதேழு பேதங்களை யடையும் எனவும், மற்றும் பலவகையாகவுங் கூறுப.

இக்கருத்தை மேற்கொண்டே,

"காண்பன யாவையுஞ் சிதைந்து
பரிக்கு மாங்கதன்றன்னிடைலயிக்கையால்
லிங்கமென் றுரைத்திடப் படுமால்"

எனவும்,

"பொலிதரு மிலிங்கமெனு மொழிக்குரைக்கும்
பொருள் பிரகாச மென்பர்"

எனவும்,

"மலர்ந்த அயன் மால் உருத்திரன் மகேசன்
பலந் தரும் ஐம்முகன் பரவிந்து நாதம்
நலத்தரு சத்தி சிவன் வடிவாகி
பலந்தரு லிங்கம் பராநந்தியாமே"

எனவும்,

உபதேசகாண்டம், சூதசங்கிதை, திருமந்திரம் முதலான நூல்களும் கூறுகின்றன.

இதனால், பரசிவத்திற்கு இலிங்கம் ஆதாரமெனல் பொருந்தாமை காண்க.

இது, அண்டலிங்கம், பிண்டலிங்கம், சதாசிவலிங்கம், ஆன்மலிங்கம், சிவலிங்கம் எனவும் வழங்கப்பெறும். இதன் விரிவைத் திருமந்திர முதலிய பெருநூல்களிற் காண்க.

ஈண்டு, முழு உருவத்தையுமுடைய திருமேனிக்கு இலிங்கமென்னும் பெயரில்லையென்பதும் உணரற்பாலது. அல்லது, சித்திரித்த தன்மைகொண்டு 'இலிங்க' மெனலுமாம். பீடம் அவ்யக்தலிங்கம். சந்திரசேகரர் முதலான மூர்த்தங்கள் வியத்தலிங்கங்கள் எனவும் வழங்கப்பெறும்.

இதில், 'சிவ' என்பதிலுள்ள சிகாரம்-சிவத்தையும், வகாரம்—அருளையும், ..னித்து நிற்குங்கால் குறிப்பிடுமென்பது உய்த்துணரற்பாலது.

மற்றும், சிகாரம், பற்றின்றி நிற்குந் தன்மையைக் குறிப்பிடுகின்ற ஒரு எழுத்துச் சொல். "வா" என்னுமெழுத்துக்குறுகி 'வ' என்றாயிற்று. எனவே பரசிவம், பற்றின்றி, வான்போல் எப்பொருட்கும் வேறாகவும், கிருபையால் எல்லாப் பொருளோடு கலப்புற்றும் நிற்கும் பரம்பொருளாம் என்பதும் பெறப்பட்டமை காண்க.

அல்லது, சத்தியும் சிவமும் கலந்துநின்ற எல்லாவற்றிற்கும் மங்களத்தைக் கொடுத்தலின் சிவலிங்கம் மங்கள வடிவாம்.

அல்லது, சிவமென்னும் நலத்தையே நல்கலின் சிவலிங்கமாம். பரசிவம் பற்றின்றி வான்போல் சிதாகாயமாய் இருத்தல் என்பது மறைகளின் முடிவாம்.

இன்றெனில், எல்லாவற்றினும் கலந்து நிற்கின்றதென்பது அமையாது.

இதுபற்றியே, "வேடங்கிடந்து தடுமாறும் வஞ்சை வெளியென்ப" எனவும். "சிற்பர வெளிக்குள்வளர் தற்பரமதாகவும்" எனவும் பிறவும் கூறுநின்றன.

சிவலிங்கத்தைத் தரிசிக்குங்காலும், கடவுள் இன்ன வடிவினர் என்பது சிறிது விளங்காமல் வான்போல் அருவாய் நிறைந்து நிற்கின்ற ஒரு பெரும்பொருள் என்பதுவே குறியா லுணர்த்தப்படுகின்றது, என்பது உற்று ஆராய்வார்க்கு எளிதில் விளங்கும்.

பரசிவனது அட்டமங்கலமூர்த்தங்களும் இத்தகைய சிவலிங்கத் திருமேனியின் கண்ணே அடங்குகின்றன. மற்றும், சிவலிங்கத்தில் முக்கண்ணும் ஒரு முகமுந் தோன்றலும், சோம, சூரிய, அக்கினி என்பன கண்களென்பதையும், கருணையையுடைய தன்மையையும் குறிக்கின்றது.

ஆவுடையாள் (ஆவிடையார்) பரவெளியின் கண் ஒரு அசைவு வடிவாகிய சிற்சக்தி உளதென்பதைக் குறிக்கின்றது. ஆ- இருப்பு. இது சிறிது கீழ் இருத்தல் இத்தகைய சிற்சத்தியும் பரசிவத்திற்கு அடங்கியே நிற்கும் என்பதைக் காட்டுகின்றது.

இக்கருத்தையே, 'அவனன்றி யோரணுவும் அசையாது'' என்னுந் திருவாக்குங் குறிப்பிடுகின்றது. கோமுகி, ஆன்மாக்களிடத்திற் செய்யும் கருணைமுகத்தைக் குறிப்பிடுகின்றது.

அதன் கீழ் உள்ள நாற்கோணமாகிய பிரதிட்டாலிங்கமானது, சிற்சத்தியாலாக்கப்பட்ட எட்டுத்திக்கும், தன்பால் அடங்கிக் கிடக்கின்றன என்பதைக் குறிக்கின்றது. இத்தகைய சிவலிங்கத்திருமேனியே அருவுருவத் திருமேனியென்ப.

மற்றும், அதீத சிவம், சத்தியொடு கூடும் அவசரமாகிய சாதாக்கியத்தைக் குறிப்பிடலானும் இது அருவுருவத் திருமேனியாம்.

மற்றும், பீடம் பத்திரலிங்கம், தூபி தூலலிங்கம், சிவலிங்கம் சூக்குமலிங்கம் எனவும் கூறப்பெறும்.

அஃதன்றியும், ஆறாதாரங்களுள் அநாகதத்தில் செந்நிறமாய்த் தீபோன்று கீழ்முகமாய்ச் சோதிச்சுடராய் விளங்கும் சுயம்புலிங்கத்தையும், மணிபூரகத்தில் கோடி சூரியப்பிரகாசம்போல் மேல்முகமாய் விளங்கும் லிங்கத்தையும், புருவமத்தியின் ஆக்கினையில் கோடி சந்திரப் பிரகாசம்போல் அருவாய்ப் பராசத்தியுடன் இனிது ஒளிரும் மகாலிங்கத்தையும் குறிக்கின்றது இத்தம்பாகாரமாகிய சிவலிங்கம் என்பதும் உய்த்துணரற்பாலது.

சிவலிங்கமானது, சோதித் தம்பவடிவாய் எழுந்தருளும் ஒளிப்பிழம்பைக் காட்டுகின்றதென்பதற்குப் பிரமாணங்கள் வருமாறு:—

அக்கினி புராணத்திலுள்ள 53-ம் அத்தியாயம் 3-ம் சுலோகத்திலும், சதானந்த சாகரத்திலும்,

இலிங்கபுராணம் முதற்பகுதி, 19-ம் அத்தியாயம், 3-ம் சுலோகத்திலும், கூர்மபுராணம் இரண்டாம் பகுதி, 11-ம் அத்தியாயம், 15-ம் சுலோகத்திலும், மச்சபுராணம், 26-ம் அத்தியாயம், 16, 17-ம் சுலோகங்களிலும் கூறப்பட்டிருக்கின்றது.

அங்ஙனமே இருக்குவேதத்திலும்,

"உருத்திரர், மருத்துக்கள் நினது ஐசுவரியத்தையடைதற்பொருட்டு, உனது சித்திர வடிவாகிய இலிங்கத்தை ஆராதித்தனர். இலக்குமியோடு மாயோனும் பூசித்துப் பரமபதமடைந்தனன்'' எனக் கூறப்பட்டிருக்கின்றது.

மற்றும், துரோண பருவத்திலும்,

"பரசிவன் உலக வடிவாயிருத்தலை யுணர்ந்து நரநாராயணர்கள் சிவலிங்கத்தைப்

பூசித்தனர். இதனால் கண்ணனுக்குச் சிவனிடத்தில் மிகப்பிரியம், சிவனுக்குக் கண்ணனிடத்திலும் மிகப் பிரியம்'' என்று கூறப் பட்டிருக்கின்றது.

ஈண்டு "கல்லினும் செம்பினுமோ இருப்பான் எங்கள் கண்ணுதல்'' எனவும்,

......சோதியை மூடரெல்லாம், கட்டிச் சுருட்டித் தங்கக்கத்தில் வைப்பர் கருத்தில் வையார், எனவும்; பிறவும் கூறுவன அனைத்தும் சிவலிங்க தத்துவந் தெளியாது செய்யும் சிவபூசையைப் பற்றியதேயாம் என்பது ஈண்டுக் காணற்பாலது.

மின்னல்போன்ற ஒளிவிடும் பரசிவநிலை சிவ சாதாக்கியமெனவும், சூரியன் போன்று ஒளிரும் பரசிவநிலை அமூர்த்தி சாதாக்கியமெனவும்,

முக்கண் ஒரு முகம் முதலான உருவங்களையுடைய பரசிவ நிலை மூர்த்தி சாதாக்கியமெனவும், நான்கு முகங்கள் எட்டுக்கைகள், பன்னிரு கண்கள் முதலானவைகளுடைய பரசிவ நிலை கர்த்திரு சாதாக்கியமெனவும், இலிங்கமும் பீடமுகமாக விளங்கும் பரசிவ நிலை கன்ம சாதாக்கியமெனவும் கூறப்படும்.

மற்றும், சிவலிங்கமானது, பரசிவன் சோதி வடிவாய் மேல்நோக்கி நிற்கும் அக்கினிபோன்றிருப்பன் என்பதையே காட்டுகின்றது.

சிவஞான வேள்வியிலுள்ள, குண்டமானது ஆவிடையாளையும், ஓமத் தீயானது சிவலிங்கத்தையும் உணர்த்துகின்றன.

இதை, "முதலீறின்றித் தொலைவரும் சோதியாமிச் சுந்தரலிங்கந் தன்னில்'' என்றற்றொடக்கத்து உண்மை வாக்கியங்களாற் றெளிக.

பஞ்சாக்கரங்களையும், ஈசானாய நம: தற்புருடாய நம: அகோராய நம: வாமதேவாய நம: சத்தியோஜாதாய நம: என்னும் பஞ்சப்பிரம மந்திரங்களையும் பரசிவனது வடிவமென்ப.

இதை, "மந்திரமதனிற் பஞ்சமந்திர வடிவமாக'' என்னுந் திருவிருத்தத்தாற் காண்க.

இஃதன்றியும், அக்கினியைப், பரசிவனுடைய சிரசாகவும், வேதங்களை வாயாகவும், சந்திர சூரியர்களைக் கண்களாகவும், திக்குகளைச் செவிகளாகவும் வாயுவைப் பிராணனாகவும், ஆகாய முதலிய அனைத்தையும் இருதயமாகவுங் கூறுகின்றன நூல்கள்.

இதை,

அங்கிதலை, வாய்விவித மானமறை பானு
திங்கள் விழி, யெண்டிசை களுஞ்செவிகள், வாயு
தங்குமுயிர், தன்னிதய மேசகல முந்தான்
இங்கவனி சங்கரனிருக்கும் வடிவீதால்,

என்றற்றொடக்கத்து வாக்கியங்களாலறிந்து கொள்க.

இப்பொருளையே, "உலகமேயுருவாக யோனிகளுறுப்பதாக'' என்பது முதலான வாக்கியங்களும் வலியுறுத்துகின்றன.

மற்றும், ஆறத்துவாக்களே பரசிவ வடிவெனவும், மற்றும் பலவாறாகவும் தத்தமது கொள்கையையும் அன்பையும் தழுவிப் பாவித்து வழிபடற்குரியது பரசிவனது வடிவமாம்.

இதை, 'அத்துவா வடிவா மெம்மிறை என்றற்றொடக்கத்து வாக்குகளாற் கண்டு தெளிக.

மற்றும், சிகை சிவகரணம், உரையிறந்து நின்ற சுகம் திருமுடி, அனைத்தையும் அவனருளாகவே காண்டல் திருமுகம், ஐந்தொழிலாற்றும் குணவியல் நேத்திரம், அருட்சத்தி இருதயம், யான் எனதென்பது அற்றதன்மை திருவடி என்பதுமுணர்க.

மற்றும், சிகை ஞானக்குறி, பூணூல் வேதாந்தக்குறி, மதிசூடுவது எல்லாமறியுங் குறி, இடபம் தருமக்குறி, முக்கண் முச்சத்திக்குறி, மான் வேதக்குறி, சூலம் மும்மூர்த்திக்குறி, மழு இலயக்குறி, வாள் பாசமறுக்குங்குறி, வச்சிரம் கேடிலாக்குறி, பாசம் மாயாவடிவக்குறி, உடுக்கு அத்துவாவைச் செலுத்துங்குறி, சர்மம் பரிக்ரகசத்தி யுலக, காரணக்குறி, கண்டாமணி நாதக்குறி, நீலோற்பலம் மனத்தைச் செலுத்துங்குறி, அங்குசம் பரிவட்டக்குறி, குவிதல் விரிதல், அக்கினி பாதுகாப்புக்குறி, அபயாத்தம் அருட்குறி, கவசம் பிரகாசக்குறி, மாலை ஓங்காரக்குறி, பளிங்குநிறம் நிருமலக்குறி, அஸ்திரம், மலம் போக்குங்குறி என்பன முதலியவற்றையும் யூகித்துணர்ந்துகொள்க.

உற்று நோக்கில், பரசிவனுக்கு, எண்ணிலாத கரங்கள், கண்கள், தோள்கள், நாமங்கள், திருமேனிகள் என்பது உண்மை.

இதை,

எண்ணில் பல்கோடி சேவடி முடிகள்
எண்ணில் பல்கோடி திண்டோள்கள்
எண்ணில் பல்கோடி திருவுருநாமம்
ஏர்கொண் முக்கண்முக மியல்பும்
எண்ணில் பல்கோடி யெல்லைக் கப்பாலாய்
நின்றஞ் ஞூற்றந் தணரேத்தும்
எண்ணில் பல்கோடி குணத்த ரேர்வீழி
யிவர் நம்மை யாளுடையாரே

என்றற்றொடக்கத்து மறைமொழிகளிற் காண்க.

## திருவண்ணாமலைத் திருக்கார்த்திகை

1961-ம் ஆண்டு கார்த்திகைப் பெருவிழா சமயப் பேரவை தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் திரு. ஓ. வி. அளகேசன் அவர்களால் 16-11-61 மாலை 3-30 மணிக்குத் துவங்கப் பெற்று 21-11 61 வரை தினமும் சிறப்பாக நடைபெற்றது. திருவாளர்கள் சு. முருகேச முதலியார், M. D. தியாகராஜ பிள்ளை M. L. A., கே. எம். வெங்கடராமய்யா M.A., B.O.L,, A. நாராயணசாமி முதலியார் B.A., B.L., A. சீனுவாசன் M.A., M. S. சாரங்கபாணி முதலியார் B.A., B.L., முதலியவர்களின் தலைமையில் பல அறிஞர்கள் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். 22-11-61 காலை 4 மணிக்கு பரணிதீபமும், மாலை 6 மணிக்கு பஞ்சமூர்த்திகள் புறப்பாட்டுடன் மலைமேல் ஜோதிசொரூப மகாதீபதரிசனமும் நடைபெற்றன. 23-11-61 முதல் 25-11-61 தெப்போற்சவமும் நடைபெற்றது.

22-11-61-ல் சென்னை மாநில கவர்னர் கனம் விஷ்ணுராம் மேதி அவர்களும் அவர் மனைவியாரும் கோயிலுக்கு வருகை தந்தார்கள். அறநிலையத்துறை ஆணையர், தருமகர்த்தர்கள், நிர்வாக அதிகாரி முதலியோர் ஆலயமரியாதைகளுடன் வரவேற்றார்கள். அன்று மாலை கவர்னர் தம்பதிகள் மகாதீபதரிசனம் கண்டு மகிழ்ந்தார்கள்.

**கும்பகோணம்:** ஸ்ரீ நாகேசுவரசுவாமி கோயிலில் 24—11—61 முதல் 3—12—61 வரை இலட்ச தீபமும் இலட்ச அர்ச்சனையும் நடைபெறும்.

**திருவாஞ்சியம்:** ஸ்ரீ வாஞ்சிநாதசுவாமி கோயிலில் 26—11—61 அன்று உற்சவ மூர்த்திகளுக்குக் கும்ப அபிஷேகம் நடைபெற்றது.

**திருப்புன்கூர்:** ஸ்ரீ சிவலோகநாதசுவாமி கோயிலில் 20—11—61 அன்று திருமுறை அர்ச்சனை தொடங்கப்பெற்றது. மக்கள் திரளாகவந்து கலந்துகொண்டு சிறந்த முறையில் வழிபாடாற்றினார்கள்.

**திருமெய்ஞானம்:** ஞானபுரீசுவரசுவாமி கோயிலில் 8—11—61 முதல் 13—11—61 வரை கந்தசஷ்டி விழாவும், 14—11—61 ல் முருகன் திருக்கல்யாண உற்சவமும் நடைபெற்றன.

**தூத்துக்குடி:** ஸ்ரீ சங்கரராமேசுவரர் கோயிலில் 25—10—61 ல் திருக்கலியாணமும், 6—11—61ல் திர்த்தவாரியும், 4—11—61ல் தபசுக் காட்சியும் திருக்கலியாணமும் நடைபெற்றன. 8—11—61 முதல் 14—11—61 வரை கந்தசஷ்டி விழா நடைபெற்றது. 22—11—61ல் திருக்கார்த்திகை விழா சிறப்பாக நடைபெற்றது.

# திருமீயச்சூர்

பொன்னேர் கொன்றை மாலை புரளும் அகலத்தான்
மின்னேர் சடைக ளுடையான் மீயச் சூரானைத்
தன்னேர் பிறரில் லானைத் தலையால் வணங்குவார்
அந்நே ரிமையோர் உலகம் எய்தல் அரிதன்றே

—திருஞானசம்பந்தர்.

தேவாரப் பாடல்பெற்ற கோயில்களுக்குள் தேவாரம் பாடம் பெற்ற வேறு கோயில்கள் மூன்று தலங்களில் இருக்கின்றன. திருவாரூர்ப் பூங்கோயிலுள் திருவாரூர் அரநெறியும், திருப்புகலூர்க் கோயிலுள் திருப்புகலூர் வர்த்தமானீச்சுரமும், திருமீயச்சூர்க் கோயிலுக்குள் திருமீயச்சூர் இளங்கோயிலும் அம்மூன்றுமாவன. திருமீயச்சூரில் ஒரு சிறப்பு காணப்படுகிறது. இளங்கோயில் என்பதை வடமொழியில் பாலாலயம் என்பர். ஒரு கோயில் திருப்பணி நடைபெறுவதற்குமுன் மூலஸ்தான மூர்த்தியைக் கலாகர்ஷணம் செய்து ஒரு பாலாலயத்தில் வேறொரு மூர்த்தியில் ஆவாஹனம் செய்து பூசிப்பது ஆகமமுறை. திருமீயச்சூரைத் திருஞானசம்பந்தர் பாடியுள்ளார். இளங்கோயிலைத் திருநாவுக்கரசர் பாடியுள்ளார். அப்பர்சுவாமிகள் இத்தலம் சென்றபோது திருப்பணி நடந்துகொண்டிருக்க வேண்டும். அவர் திருவாக்கில் மீயச்சூருக்குப் பதிகமிராமல் இளங்கோயிலுக்கே பதிகம் இருப்பதும், இப்பதிகத்திலும் "தோற்றும் கோயிலும் தோன்றிய கோயிலும்" என்ற குறிப்பிருப்பதும், சம்பந்தர் திருவாக்கில் இளங்கோயிலுக் கில்லாதிருப்பதும் மீயச்சூருக்கே பதிகமிருப்பதும், மேற்கூறிய உண்மையை வலியுறுத்தும். மிஹிரக்ஷேத்ரம் என்பதும் இத்தலத்தின் பெயர்.

ஒரே கோயிலுக்குள் இருவர் பாடலும் பெற்ற தலங்கள் உள்ள இந்த திருமீயச்சூர் தஞ்சைமாவட்டத்தில் நன்னிலம் பகுதியிலிருக்கிறது. மாயூரம்—அறந்தாங்கி இருப்புப்பாதையில் பேரளம் என்ற நிலையத்திற்கு மேற்கே அரைக்கல் தொலைவிலிருக்கிறது. கோயில் ஊரின் நடுவே கிழக்கு நோக்கியிருக்கிறது. கிழக்கு வாயிலில் ஐந்து நிலைகளையுடைய இராஜகோபுரம் இருக்கிறது. கோயிலுக்குள் இரண்டு பிரகாரங்கள் உள்ளன. இரண்டாவது பிரகாரத்துக்குள் போகும் திருவாயிலையும் மூன்று நிலைக்கோபுரம் ஒன்று அணிசெய்து நிற்கின்றது.

மூலஸ்தான மூர்த்திக்கு மேகநாதர், முயற்சிநாதர் என்ற திருப்பெயர்கள் வழங்குகின்றன. தெற்கு உட்பிரகாரத்தில் வாயுலிங்கம், விநாயகர் சந்நிதிகளும், மேற்குப் பிரகாரத்தில் முருகன், இலட்சுமி சந்நிதிகளும் இருக்கின்றன. மேகநாதர் கர்ப்பக்கிரகத்திற்கு வடபுறம் இருப்பது திருமீயச்சூர் இளங்கோயில். இறைவனுடைய திருநாமங்கள் சகலபுவனேசுவரர், அகிலபுவனேசுவரர் என்பன. அவருடைய திருத்தேவியார் சந்நிதி அண்மையிலேயே தெற்குநோக்கி இருக்கிறது. இறைவியின் திருநாமம் மின்னுமேகலையாள் என்பது. அப்பர் பெருமான் இப்பெயரை,

பொன்னங் கொன்றையும் பூவணி மாலையும்
பின்னுஞ் செஞ்சடை மேற்பிறை சூடிற்று
மின்னு மேகலை யாளொடு மீயச்சூர்
இன்ன நாள்அக லாரிளங் கோயிலே

என்ற பாடலில் குறித்திருக்கிறார். இன்னும் வடக்கு உள்பிரகாரத்தில் சண்டேசுவரர், அருணாசலேசுவரர், நடராஜர் இவர்களுடைய சந்நிதிகள் இருக்கின்றன. மேகநாதர் சந்நிதிக்கு எதிரில் சிறிது வடபுறமாக பாதாளலிங்கமும், வடகிழக்கே ஆகாசலிங்கமும் இருக்கின்றன.

வெளிப்பிரகாரத்தில் வடகிழக்கில் மேகநாதருடைய அம்பிகையின் தனிக்கோயில் தெற்கு நோக்கியிருக்கிறது. அதற்கு நேரே தெற்குப் பிரகாரமதிலில் ஒரு திருவாயிலும் இருக்கிறது. தேவி அமர்ந்த திருக்கோலத்தில் காட்சியளிக்கிறாள். அருளும் அழகும் நிரம்பிய திருவுருவம். தேவியின் திருப்பெயர்கள் சாந்தநாயகி, சவுந்தரநாயகி, லலிதாம்பிகை என்பன. கிழக்கு வெளிப்பிரகாரத்தில் உள் கோபுரத்தின் தென்புறம் விசுவநாதர் சந்நிதியும், தென்கிழக்கே வசந்தமண்டபமும் இருக்

கின்றன. கோயிலுக்கு வெளியே இராஜ கோபுரத்திற்கு வடபுறம் ஒருபெரிய மண்டபமும் இருக்கிறது.

இத்தலத்தின் தீர்த்தம் சூரியபுஷ்கரணி. இது கோயிலுக்குக் கிழக்கேயுள்ள திருக்குளம். இதன் கரைமேல் விநாயகர், சூரியன் கோயில்கள் இருக்கின்றன. சூரியன் இங்கு இறைவனை வழிபட்டதாகச் சொல்லப்படுகிறது. இதற்கு அறிகுறியாக ஆண்டு தோறும் சித்திரை மாதம் 20 தேதி முதல் 27 தேதி வரையில் சூரியகிரணங்கள் மூலவர் மேகநாதசுவாமியின் பேரில் விழுகின்றன. கோயிலின் தலவிருட்சம் வில்வம். மந்தாரமரம் என்றும் கூறுகின்றனர். கோயிலில் ஐந்து காலபூசை நடைபெறுகிறது. தைமாதம் இரதசப்தமியை யொட்டி 10 நாள் திருவிழாவும் உண்டு.

இத்தலத்திலுள்ள இரண்டு கோயில்களில் எழுந்தருளியுள்ள இறைவன் பேரில் அப்பரும் சம்பந்தரும் ஒவ்வொரு பதிகம் ஓதியருளியுள்ளனர். வடமொழியில் ஸ்தலமகாத்மியம் இருக்கிறது. தமிழிலும் வசனரூபமாக எழுதப்பட்டிருக்கிறது. இன்னும் அச்சாகவில்லை. அருணன், மோகினி அவதாரமெடுத்து வாலி சுக்கிரீவர்களைப் பெற்றதும், மேகநாதரை அருணன் வழிபட்டதும், இலட்சுமி சகலபுவனேசுவரரைப் பூசித்ததும், சூரியன் தீர்த்தத்தில் நீராடி இறைவனை வழிபட்டதும் தலபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கும் செய்திகள்.



திருமீயச்சூர் கஜப்பிரஷ்ட விமானம்

கி. பி. ஏழாம் நூற்றுண்டிலிருந்த அப்பர், சம்பந்தர் இவர்களால் பாடப்பெற்றமையால் மிகப் பழைய கோயில். மேகநாதரின் கர்ப்பக்கிரகத்தின் மேலுள்ளது கஜப்பிரஷ்ட விமானம்; யானையின் முதுகு போல் இருக்கிறது. (படம் பார்க்க). கோஷ்டத்திலுள்ள எல்லா விக்கிரகங்களும் அழகானவை. சுவாமி அம்பாளின் முகவாய்க் கட்டையைப் பிடிப்பதுபோலுள்ள உருவச் சிலையும் (க்ஷேத்திர புராணேசுவரும்), இளங்கோயில் கோஷ்டத்திலுள்ள சதுர்முக சண்டேசர் திருவுருவமும் மிகவும் அற்புத அழகுடையவை.

அம்பாள் சந்நிதித் தூண்களிலும், உட்கோபுர வாயிலின் தென்புறத்திலும், வடக்குப் பிரகாரத்திலும், சுவாமி சந்நிதி மண்டபத்தின் வடசுவர் வெளிப்பக்கத்திலும் தமிழ்க் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவை சோழ மன்னர்களான பரகேசரிவர்மன், இராஜகேசரிவர்மன், பாண்டிய மன்னர்களான மாறவர்மன் குலசேகரன், ஜடாவர்மன் ஸ்ரீவல்லபதேவன் காலத்தவை, கோயிலுக்கு நிலதானம் செய்ததையும், கோயிலில் விளக்கு எரிப்பதற்காக நிலங்கள் வழங்கியதையும் அக்கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. ஒரு கல்வெட்டு, வணிகன் ஒருவன் விளக்கெரிப்பதற்கு நிலம் கொடுத்தைக் குறிக்கிறது.

நாறு மல்லிகை கூவிளம் செண்பகம்
வேறு வேறு விரித்த சடையிடை
ஆறு கொண்டுகந் தான்திரு மீயச்சூர்
ஏறு கொண்டுகந் தாரிளங் கோயிலே

—திருநாவுக்கரசர்.

# திருஅம்பர்

மறைபுனை பாடலர் சுடர்கை மல்கவோர்
பிறைபுனை சடைமுடி பெயர ஆடுவர்
அறைபுனல் நிறைவயல் அம்பர் மாநகர்
இறைபுனை யெழில்வளர் இடம தென்பரே.

—திருஞானசம்பந்தர்.



கட்டு மலைத்தோற்றம்

மாடக்கோயில்கள் என்பவை கட்டுமலை மேல் இருப்பவை. யானை நுழையாத வாயில்களையுமுடையவை. அத்தகைய கோயில்களைக் கட்டியவன் கோச்செங்கட் சோழன் என்ற மன்னன். திருஅம்பர் என்னும் ஊரில் உள்ளது மாடக்கோயில்களில் ஒன்று. அவை போன்றவற்றைத் தேவாரம் பெருந் திருக்கோயில் என்று குறிக்கிறது. "அம்பர் நகர்ப்பெருங் கோயில் அமர்கின்ருன் காண்" என்பது தேவாரம். இவ்வூரை மக்கள் அம்பல் என்று வழங்குகின்றனர். மாயூரம்-அறந்தாங்கி இருப்புப்பாதையில் பூந்தோட்டம் என்ற நிலையத்திலிருந்து கிழக்கே மூன்றுகல் தொலைவில் இப்பதி இருக்கிறது. நல்ல சாலையுண்டு; வண்டிகள்தான் செல்லவேண்டும். அரிசிலாறு ஊருக்குத் தெற்கே ஓடுகிறது.

கோயில் கிழக்குநோக்கி யிருக்கிறது. மூன்று மாடங்களையுடைய கோபுரம் கிழக்கு வாயிலை அணிசெய்கிறது. கோயில் கீழே ஒரு பிரகாரமும், கட்டுமலைமேல் ஒரு பிரகாரமும் இருக்கின்றன. கோபுர வாயிலின் வழியே உள் நுழைந்ததும் தென்புறம் தல விருட்சமான புன்னை மரமும், அதனருகே புன்னைவனநாதர் (சிவலிங்கம்) சந்நிதி மேற்கு நோக்கியும் இருக்கின்றன. எதிரில் அன்னமாம் பொய்கை என்ற தீர்த்தக்கிணறு இருக்கிறது. சந்நிதிக்கெதிரில் சுதையினுலான பெரிய நந்தி இருக்கிறது. கட்டுமலையின்கீழ் தென்கிழக்கில் படிக்காசு விநாயகர் சந்நிதி இருக்கிறது. மலைக்கோயிலுக்குச் செல்வதற்கு வடக்கிலும் தெற்கிலும் படிக்கட்டுகள் உள்ளன.

மாடக்கோயில் கர்ப்பக்கிரகத்தில் மூல லிங்க மூர்த்தியான பிரமபுரீசர் கிழக்குநோக்கிக் காட்சியளிக்கிருர். அம்பரீசர், மாரபுரீசர் என்ற திருப்பெயர்களும் அவருக்கு உண்டு. மூல லிங்கத்தின் பின்புறம் சோமாஸ்கந்தமூர்த்தி எழுந்தருளியிருக்கிருர். கர்ப்பக்கிரகத்திற்குத் தென்புறம் சோமாஸ்கந்தர் உற்சவமூர்த்தி சந்நிதியும், வடகிழக்கே நடராஜப்பெருமான் சந்நிதியும் இருக்கின்றன. மலையைச்சுற்றிக் கீழேயுள்ள மேற்குப்பிரகாரத்தில் விநாயகர், முருகன், இலட்சுமி இவர்களுடைய சந்நிதிகள் இருக்கின்றன. வடக்குப் பிரகாரத்தில் பள்ளத்தில் ஜம்புகேசர் சந்நிதியிருக்கிறது. தெற்கு நோக்கி அம்பிகை சந்நிதி காணப்படுகிறது. அம்பாளுக்குச் சுகந்தகுந்தளாம்பிகை, பூங்குழல் நாயகி, சுகந்தவனநாயகி, வண்டமர் பூங்குழலி முதலிய திருப்பெயர்கள் சொல்லப்படுகின்றன.

இத்தலத்தின் தீர்த்தங்கள் இரண்டு, அன்னமாம் பொய்கை என்பது கோயிலுக்குள்ளிருக்கும் கிணறு. பிரமதேவன் அன்ன வடிவம் கொண்டு உண்டாக்கியதென்பர். "அன்னமாம் பொய்கைசூழ் அம்பரானை" என்பது அப்பர் தேவாரம். இந்திர தீர்த்தம் கோயிலுக்குக் கிழக்கில் உள்ள திருக்குளம். கோயிலில் ஆறுகால பூசை நடைபெறுகிறது. மாசி மகத்தில் உற்சவம்.

திருஞானசம்பந்தர் இத்தலத்துப் பெருமான்மீது ஒரு பதிகம் பாடியருளியிருக்கின்றனர். பாடல்களில் அம்பர்மாநகர், பெருநகர், நெடுநகர் என்றெல்லாம் கூறுவதனுல் அவர் காலத்தில் இப்பதி ஒரு நகரமாக விளங்கியிருக்கவேண்டும். இப்போது ஒரு



புன்னைவனநாதர்

சிற்றூராகவே இருக்கிறது. "அரிசிலம் பொருபுனல் அம்பர்" என்று அண்மையில் ஓடும் அரிசிலாற்றையும் குறிக்கிறார். "குரிசில் செங்கண்ணவன் கோயில்," "செம்பியர் செய்ய கண்ணிறை செய்த கோயில்", "செம்பியர் செறிகழலிறை செய்த கோயில்" என்று கோச்செங்கட் சோழன் இக்கோயிலைக் கட்டியதைத் திட்டமாக எடுத்துக் கூறுகிறார்.

அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவரான சோமாசிமாற நாயனார் என்ற அந்தணப்பெரியார் அவதரித்ததும் இப்பதியிலே தான். அடியார்க்கமுதூட்டல், யாகம் செய்தல், அஞ்செழுத்தோதல்இவற்றை நியமமாகக்கொண்டு வாழ்ந்தவர். "எத்தன்மையராயினும் ஈசனுக்கன்பர் என்றால் அத்தன்மையர் தாம் நமையாள்பவர் என்று கொள்பவர்" என்று சேக்கிழார் பெருமான் அவர் பெருமையைப் போற்றிப் புகழ்கிறார். திருவாரூரில் இருந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளுடன் நெருங்கிய நட்புகொண்டிருந்து பின்னர் சிவனடிநீழலெய்தினார்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் தலபுராணம் ஒன்று இயற்றியிருக்கிறார். அயன் முதலியோர் செருக்கடங்கியது, பிரமன் பூசித்துப் பேரருள்பெற்றது, அம்பராம்பரர்களை அழித்தது, சங்காரசீலனை வதைத்தது, விமலன் அருள்பெற்றுய்ந்தது, மன்மதன் சாபநீக்கம் பெற்றது, நந்தராசன் பிரமஹத்தி நீங்கியது, கோச்செங்கட்சோழன் திருப்பணி புரிந்தது முதலிய செய்திகள் வடமொழி ஸ்காந்த உபபுராணத்தில் அகஸ்திய ஸம்ஹிதையில் பிரமபுரீசர் மகாத்மியத்தில் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் ஒரு வசன நூல் வடிவில் தேவஸ்தானத்தார் வெளியிட்டிருக்கின்றனர்.

அருணகிரிநாதர் இப் பதியைப்பற்றி "சோதிமந்திரம்" என்று தொடங்கும் திருப்புகழ்ப்பாடல் ஒன்றைப் பாடியிருக்கின்றனர். அதில், "சோடை கொண்டுளங் கானமங்கை மயலாடி இந்திரன் தேவர் வந்து தொழ சோழமண்டலஞ் சாரும் அம்பர் வளர் தம்பிரானே" என்று கூறி முடிக்கிறார்.

அழகரை அடிகளை அம்பர் மேவிய
நிழல்திகழ் சடைமுடி நீல கண்டரை
உமிழ்திரை உலகினில் ஓதுவீர் கொண்மின்
தமிழ்கெழு விரகினன் தமிழ்செய் மாலையே

—திருஞானசம்பந்தர்.

*



இராஜகோபுரம்

# மலைநாட்டுத்திருப்பதியநுபவம்

[மகாவித்துவான் திரு. P. B. அண்ணங்கராசார்ய்சுவாமிகள், காஞ்சிபுரம்]

(முன் தொடர்ச்சி)

மலைநாட்டுத் திருப்பதிகளுள் திருக்கடித்தானமென்னும் பதியை யநுபவித்து வருகிறோம். நம்மாழ்வாரொருவரே பாடின இத்தலத்திற்கு அவர் தாம் இட்டருளின பதிகத்தில் முதற்பாட்டை விவரித்தோம்: இனி இரண்டாம் பாட்டு முதலாக விவரிக்கிறோம். கடியென்று நறுமணத்திற்குப் பெயராதலால் திருக்கடித்தானமென்பதற்கு நறுமணம் மிக்க தலமென்று பொருளென்று கூறினோம். அந்த நறுமணம் எதுவென்னில், இவ்விரண்டாம் பாட்டைக்கொண்டு ஆசாரியர்கள் விவரித்த நறுமணம் கேளீர்;

2. திருக்கடித் தானமும் என்னுடைச் சிந்தையும்
ஒருக்க டுத்துள்ளே உறையும் பிரான்கண்டீர்
செருக்கடுத் தன்று திகைத்த வரக்கரை
உருக்கெட வாளி பொழிந்த வொருவனே.

முன்பொரு காலத்தில் போர்புரியச் செருக்குவிஞ்சி யாரைச் சண்டைக்கிழுக்கலாமென்று திகைத்திருந்த அரக்கர்கள் உருவம் கெடும்படியாக அம்புபொழிந்த ஒப்பற்ற மஹாவீரன் [இராமபிரான்] திருக்கடித்தானப்பதியையும் எனது நெஞ்சையும் ஒருசேரப்பிடித்து இரண்டினுள்ளும் ஒக்க வெழுந்தருளியிருக்கின்ற பெருமான் - என்பது பாட்டின் பொருள். திருக்கடித்தானப் பதியையும் ஆழ்வாருடைய திருவுள்ளத்தையும் ஒக்க நினைக்கையாவது என்னவென்று தெரிந்துகொள்ள வேண்டுமானால் ஆசாரிய ஹிருதயமென்னும் திவ்வியமான நூலைத் தஞ்சமாகப் பற்றவேணும். அந்நூலில், நம்மாழ்வார் பாடிய திருப்பதிகளொவ்வொன்றிலும் விளங்கும் ஒவ்வொரு திருக்குணத்தையும் கூறிவருமடைவில் இத்தலத்தில் விளக்கும் குணத்தைக் கூறும் சூர்ணை

"ஸாத்ய ஹ்ருதிஸ்தனையும் ஸாதன மொருக்கடுக்கும்
க்ருதஜ்ஞ தாகந்தம் தாயப் பதியிலே"

என்று அமைக்கப்பட்டது. இந்த சூர்ணையின் கருத்தாவது, எம்பெருமான் தனக்குப் பரம ப்ரயோஜனமான ஆழ்வார் திருவுள்ளத்தில் வாஸம் கிடைத்திருக்கச் செய்தேயும் 'இப்படி நாம் இவர் திருவுள்ளத்தில் வாஸம் பெற்றது திருக்கடித்தானப்பதியில் நிலை யாலேயன்றோ' என்று கொண்டு அந்த திவ்ய தேசத்தையும் விடாதேயிருக்குமிருப்பு நன்றி மறவாமை காரணமாக வாதலால் இத்தகைய நன்றியறிவு நறுமணம் கமழுகை இத்தலத்தின் குணம்-என்கை. இப்பொருள் நெஞ்சில் நன்கு ஊன்றவேணுமானால் ஸ்ரீவசன பூஷணத்தில் சில சூர்ணைகள் சிந்திக்கப்பட வேணும்; அவையாவன;—(171 முதல் 174) "அங்குத்தைவாஸம் ஸாதனம்; இங்குத்தை வாஸம் ஸாத்யம். 'கல்லுங்கனை கடலும்' என்கிறபடியே இது ஸித்தித்தால் அவற்றிலாதரம் மட்டமாயிருக்கும். 'இளங்கோயில் கைவிடேல்' என்று இவன் ப்ரார்த்திக்க வேண்டும்படியாயிருக்கும். ப்ராப்ய ப்ரீதி விஷயத்வத்தாலும் க்ருதஜ்ஞதையாலும்பின்பு அவை அபிமதங்களாயிருக்கும்."

இவற்றின் கருத்து; எம்பெருமான் திவ்ய தேசங்களிலுமுளன், ஞானிகளின் ஹிருதயத்திலுமுளன் என்றிருந்தாலும், திவ்ய தேசங்களிற் காட்டிலும் ஞானிகளின் திருமேனியில் அவன் பண்ணும் விருப்பத்தில் வாசியுண்டு. அவன் திருப்பதிகளில் எழுந்தருளியிருப்பதானது தக்க உபாயங்களாலே சேதநரை அகப்படுத்திக் கொள்ளுகைக்காக வாதலால் அவனுக்குத் திருப்பதிகளில் வாஸம் ஸாதனமென்று கொள்ளத்தகும். சேதநன் திருந்தி இவனது ஹிருதயத்தினுள்ளேதான் வஸிக்கப்பெற்றவது அத்திருப்பதிவாஸமாகிற க்ருஷியின் பலனாகையாலே ஞானிகளிடத்தில் வாஸமே பரமப்ரயோஜனம். ஆழ்வார் போல்வாருடைய இதயத்தில் வாஸம் ஸித்தித்துவிட்டால் பின்பு திருப்பாற்கடல் திருநாடு முதலான விடங்களில் அவனுக்கு விருப்பம் குறைந்துவருமென்பது "கல்லுங்கனைகடலும் வைகுந்தவானாடும், புல்லென்றொழிந்தன கொல் ஏபாவம்-வெல்ல நெடியான் நிறங்கரியானுள் புகுந்து நீங்கான், அடியேனதுள்ளத்தகம்" என்ற பெரிய திரு

வந்தாதிப் பாசுரத்தினால் விளங்கும். அப்படியாகில் திருப்பதிகளிலும் அவன் ஏன் வஸித்து வருகிறானென்னில்; "எங்கள் உள்ளத்திலே புகுருகைக்கு பாலாலயம்போன்றிருந்த திருப்பாற்கடல் முதலியவற்றிலும் விருப்பம் கொண்டிருக்கவேணும்" என்று இவர்கள் எம்பெருமானை நோக்கிப் பிரார்த்திப்பதனாலும், இவர்களின் உகப்புக்கு இலக்கானவிடம் என்பதனாலும், 'இத்தலங்களில் வாஸமன்றோ நமக்கு அன்பர்களின் உள்ளமாகிற அருமந்த விடத்தைப் பெறுவித்தது' என்று அவன் கொண்ட நன்றியுணர்ச்சியினாலுமென்க.

ஆக இத்தகைய திவ்வியமான பொருள்கள் இப்பாட்டின் முன்னடிகளிலே சிந்தனை செய்யத்தகுவன.

3. ஒருவரி ருவரோர் மூவரென நின்று
உருவு கரந்து உள்ளுந்தோறும் தித்திப்பான்
திருவமர் மார்வன் திருக்கடித்தா னத்தை
மருவியு றைகின்ற மாயப் பிரானே.

இப்பாட்டு தனிப்படப் பொருள்தருவதன்று; கீழ் இரண்டாம் பாட்டோடு சேர்ந்தே பொருள்தரும். அப்பாட்டின் பின்னடிகள் "செருக்கடுத்தன்று திகைத்தவரக்கரை உருக்கெட வாளிபொழிந்த வொருவனே" என்றுள்ளது. அங்ஙனம் வாளிபொழிந்த காலத்தில் இராமபிரான் இருந்த விதம் இப்படிப்பட்டதென்கிறது இப்பாட்டில். "வாளி பொழிந்தபடி எங்ஙனே யென்ன, இங்ஙனே யென்கிறார்" என்பது ஈடுமுப்பத்தாறாயிரப்படி அவதாரிகை.

இலங்கையில் நடந்த இராமராவண யுத்தத்தில் இராவணன் சேமித்து வைத்திருந்த மூலபலம் வந்து திரண்டது; இராமன் அதனை முடிக்குமிடத்து முதலில் ஒருவனாய்த் தோன்றி, பின்பு இருவர்போலத் தோன்றி, பின்னையும் மூவர்போலத் தோன்றி நின்று, பிறகு உருவம் இலக்குக் குறிக்க வொண்ணாதபடி இந்திரிய மார்க்கத்தைக் கடந்தபடியாலே ஒருருவமும் தெரியாதபடி நின்று பொருது, செருக்கடுத்தன்று திகைத்த வரக்கரை உருக்கெடவாளி பொழிந்தபடி சொல்லிற்றாயிற்று.

ஸ்ரீராமாயணம் யுத்த காண்டத்தில் (ஸர்க்கம்94ல்) மூலபலவதம் சொல்லுமிடத்து இந்தநிலை தெரிவிக்கப்பட்டுள்ளது. இராமபிரான் காந்தருவாஸ்திரத்தைப் பிரயோகித்த வளவிலே (சுலோகம்26) இராமனை அரக்கர்கள் அடியோடு காணவில்லை யென்று முதலிலே சொல்லிற்று; உடனே அவர்கள் ஆயிரம் இராமமூர்த்திகளைக் கண்டதாகச் சொல்லிற்று. உடனே "புந: பச்யந்தி காகுத்ஸ்தம் ஏகமேவமஹாஹவே" என்று ஒரு இராமமூர்த்தியையே கண்டதாகச் சொல்லிற்று.

இங்கு இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம் வருமாறு—"ஒருவரிருவரோர் மூவரென நின்று உருவுகரந்து உருக்கெட வாளி பொழிந்த வொருவன் என்று கீழ்ப்பாட்டோடே அந்வயிக்கக்கடவது. மூலபலம் சாகும்படியருளுகிறவன்று முந்துற வொருவனாய்த் தோன்றி, சாரிகையில் வேகம் மிக மிக, இருவரும் மூவருமாய்த் தோற்றி, பின்னையும் வேகம் மிக்கவாறே இந்திரிய ஸம்போகத்துக்கு இடமில்லாதபடியாகையாலே ரூபக்ரஹணமரிதாகி உருக்கெட வாளிபொழிந்த வொருவன் திருக்கடித்தானமும் என்னுடைச் சிந்தையும் ஒருக்கடுத்து உள்ளே உறையும் பிரான்கண்டீர்."

ஸ்ரீராமாவதாரத்தில் காட்டிய அந்த பல பராக்கிரமம் விளங்குமாறு இங்கே திருக்கடித்தானத்தில் காட்சி தருகின்றானென்று ஆழ்வாருடைய அநுபவமிருக்கிறபடி. ஆனால் ஒரு வாசியுண்டு; மூலபலவதம் செய்த காலத்தில் பிராட்டியைப் பிரிந்திருந்தார்; இப்போது அங்ஙனல்லாமல் [திருக்கடித்தானத்தை மருவியுறைகின்ற மாயப்பிரான் திருவமர்மார்வன்.] திவ்விய தம்பதிகள் இருவருமான சேர்த்தி கண்டு உகந்து அநுபவிக்கக்கூடிய இடம் திருக்கடித்தானம் என்றதாயிற்று.

4. மாயப் பிரான்என வல்வினை மாய்ந்தற
நேசத்தினால் நெஞ்ச நாடுகுடி கொண்டான்
தேசத் தமரர் திருக்கடித் தானத்தை
வாசப் பொழில்மன்னு கோயில் கொண்டானே.

'மாயப்-பிரான்' என்பதற்கு இருவகையாகப் பொருள் காண்க. 'மாயா' என்ற வடசொல் மாயமென்றாகிறது தமிழில். மாயையாவது ஆச்சரியம். எம்பெருமானுடைய திருவுருவமோ திருக்குணமோ சரித்திரமோ எதுவும் ஆச்சரியம் என்று சொல்லலாமத்தனையொழிய வேறொன்றும் சொல்லப் போகாதன்றே. ஆக, ஆச்சரியமான ரூப

குண சேஷ்டிதங்களையுடையவன் என்பது ஒரு பொருள். 'மாயா' என்பதற்கு வைதிக நிகண்டினால் ஸங்கல்பரூபமான ஞானம் என்று பொருளாகும். பகவத்கீதையில் "ஸம்பவாமி ஆத்மமாயயா" என்னுமிடத்தில் இப்பொருளே கொள்ளப்படுவதாம். ஆக ஸங்கற்ப மாத்திரத்தினால் எல்லாவற்றையும் நிர்வஹித்தருள்பவன்-என்பது மற்றொரு பொருள்.

**[என வல்வினைமாய்ந்தற நெஞ்சநாடு குடிகொண்டான்.]** பெரியாழ்வார் தமது திருமொழியில் "மங்கிய வல்வினை நோய்காள்! உமக்குமோர் வல்வினை கண்டீர், இங்குப்புகேன்மின் புகேன்மின் எளிதன்று கண்டீர் புகேன்மின், சிங்கப்பிரானவ னெம்மான் சேருந்திருக்கோயில் கண்டீர், பங்கப்படாது உய்யப்போமின்" என்றருளிச் செய்தார். நெஞ்சிலே நிரம்பியுள்ள வல்வினைகள் பாறிப் பறந்தொழிய வேண்டும்படி திருக்கடித்தானத் திருமால் தம் திருவுள்ளத்தே வந்து குடிபுகுந்ததுமல்லாமல் அவ்விடத்தை ஒரு நாடாகத் திருத்திப் பணிகொண்டானென்பதும் ஓர் ஆச்சரியமாக இங்குக் கருதப்படுகின்றது.

**[தேசத்தமரர் திருக்கடித்தானம்]** தேஜஸ் என்னும் வடசொல் தேசமென்று திரிந்தது. தேசுபொலிந்த அமரராவார் நித்திய சூரிகள். அவர்களுடைய திருக்கடித்தான மென்றது—அவர்களும் வந்து வணங்கும் பெருமை வாய்ந்த திருக்கடித்தான மென்றபடி. விண்ணவர்கள் மண்ணுலகில் வரக்கூடுமோவென்று சங்கிக்க வேண்டா; கருமபந்தம் காரணமான மீட்சி இல்லையென்பது நூற்கொள்கையே யொழிய பகவானுடையவிபூதிகளைக் காண்பதற்காக வருவதை உபநிடதங்கள் அனுமதித்தேயுள்ளன. திருமங்கையாழ்வார் "மண்ணிலிதுபோலு நகரில்லையென வானவர்கள் தாம் மலர்கள் தூய், நண்ணியுறைகின்ற நகர் நந்திபுர விண்ணகரம் நண்ணுமனமே" என்றருளிச் செய்ததும் காணத்தக்கது. இப்பதிகந்தன்னிலேயே மேல் ஏழாவது பாட்டில் "மண்ணவர் தாந்தொழ வானவர் தாம் வந்து, நண்ணு திருக்கடித்தான நகரே" என்றதும் காண்க.

5\. கோயில் கொண்டான் தன்
 திருக்கடித் தானத்தைக்
கோயில் கொண்டா னதனோடு
 மென் னெஞ்சகம்
கோயில் கொள் தெய்வ மெல்லாம்
 தொழ வைகுந்தம்
கோயில் கொண்ட குடக்
 கூத்த வம்மானே.

*தங்களுக்கென்று விமானங்களை யுடையரான நித்திய சூரிகளெல்லாரும் தொழும்படியாக ஸ்ரீ வைகுண்டத்தை யிருப்பிடமாகவுடையனாய், கண்ணபிரானாய்த் திருவவதரித்தபோது குடக்கூத்தாடினவனான பெருமான் திருக்கடித்தானப் பதியைத் தனக்குக் கோயிலாகக் கைப்பற்றினவனாய் அது தன்னோடே என்னெஞ்சையும் தனக்குக் கோயிலாகக் கொண்டானென்கிறார்.*

ஆழ்வார் தம்பக்கலிலுண்டான அன்பின் கனத்தாலே திருக்கடித்தானத் திருமால் அப்பதியோடே கூடவந்து தம் திருவுள்ளத்திலே புகுந்தருளினானென்றாராயிற்று. இதன் கருத்து யாதெனில்; திருக்கடித்தானத்தைத் தனக்கு அஸாதாரணமான கோயிலாகக் கொண்டவன் ஆழ்வார் திருவுள்ளத்தினுள்ளே வந்துபுக விரும்பினான்; அப்போது அத்தலத்தை விட்டுத்தான் மட்டுமே வந்து புகுவதாக முதலில் நினைத்தானாம்; அப்படியாகில் அத்தலத்திலுள்ள ஆசையினால் அந்த ஞாபகமும் அடிக்கடி யுண்டாகுமென்றும், அதனால் இவ்விடத்தனுபவம் முட்டுப்படுமென்றும் நினைத்து அத்தலத்தையும் கூட்டிக்கொண்டு வந்து புகுந்தானாம்; இப்படியொரு பாவனை செல்லுகின்றதாயிற்று.

"அரவத் தமளியினோடும் அழகிய பாற்கடலோடும், அரவிந்தப்பாவையுந் தானும் அகம்படி வந்து புகுந்து, பரவைத்திரை பல மோதப் பள்ளிகொள்கின்ற பிரானைப் பரவுகின்றான் விட்டு சித்தன்" என்ற பெரியாழ்வாரனுபவம் இதனிலும் விஞ்சியதன்றே.

**குடக்கூத்தவம்மான்;** எம்பெருமான் குடக்கூத்தாடினது கிருஷ்ணாவதாரத்திலே. அந்தணர்கட்குச் செல்வம் விஞ்சினால் யாகஞ் செய்வதுபோல இடையர்கட்குச் செல்வம்

# திருவீழிமிழலை

ஈருய்முத லொன்ருயிரு பெண்ணுண்குண மூன்ருய்
மாருமறை நான்காய்வரு பூதம்அவை ஐந்தாய்
ஆருர்சுவை ஏழோசையொ டெட்டுத்திசை தாஞய்
வேருய்உடன் ஆனுன்இடம் வீழிம்மிழ லையே

—திருஞானசம்பந்தர்.

சித்திசெய் பவர்கட் கெல்லாஞ்
சேர்விடஞ் சென்றுகூடப்
பத்திசெய் பவர்கள் பாவம்
பறைப்பவ ரிறப்பி லாளர்
முத்திசை பவளமேனி முதிரொளி
நீல கண்டர்
வித்தினில் முளையர் வீழி
மிழலையுள் விகிர்தனுரே

—திருநாவுக்கரசர்.

பந்தம் வீடிவை பண்ணினீர் படிறீர்
மதிப்பிதிர் கண்ணி யீரென்று
சிந்தை செய்திருக் குஞ்செங்கை
யாளர் திருமிழலை
வந்து நாடகம் வானநாடிய ராட
மாலய னேத்த நாடொறும்
அந்தண் வீழிகொண் டீரடி
யேற்கு மருளுதிரே

—சுந்தரர்.

தேவாரம் பாடிய மூவர்களின் அற்புதச் செயல்கள் நடந்த தலங்கள் பலவுண்டு. அவைகளில் ஒன்று திருவீழிமிழலை, அப்பர், சம்பந்தர் இருவருக்குமே இறைவன் படிக் காசு கொடுத்தருளிய அற்புதம் நிகழ்ந்த தனிச் சிறப்புடையது. இப்பதி தஞ்சை மாவட்டத்தில் நன்னிலம் பகுதியிலிருக்கிறது. மாயூரம்—அறந்தாங்கி இருப்புப்பாதையில் பூந்தோட்டம் என்ற புகைவண்டி நிலையத்தி லிருந்து மேற்கே ஐந்துகல் தொலைவிலிருக் கிறது. நல்ல கற்சாலை யுண்டு, பூந்தோட் டத்திலிருந்து நாச்சியார் கோயிலுக்கு செல் லும் பஸ்கள் இவ்வூர் வழியாகச் செல்கின் றன. இத்தலத்தின் அருகே அரிசிலாறு ஓடு கிறது.

வீழிச்செடிகள் நிறைந்திருந்ததால் வீழி மிழலை என்ற பெயர் ஏற்பட்டதென்பர். திருமால் தன் கண்ணைப்பறித்து பூவாக இறைவனை அருச்சித்த இடமாதலால் திரு+ விழி (கண்)+மிழலை என்பது திருவீழிமிழலை என்ருயிற்று என்றும் கூறுவர். இவ்வூர் சிறிதெனினும் கோயில் மிகப்பெரிது. கோயி லுக்கு முன்னல் பெரிய திருக்குளமிருக் கிறது. இதற்கு, தீர்த்தபுஷ்கரணி என்று பெயர். கோயிலுக்குள் அழகிய உயர்ந்த மதில்களையுடைய மூன்று பிரகாரங்கள் இருக் கின்றன. கோயில் கிழக்கு நோக்கியிருக் கிறது. கிழக்கில் இருவாயில்களில் கோபுரங் களும், இரண்டாவது பிரகாரத்திலிருந்து, வெளி மூன்றும் பிரகாரத்திலுள்ள அம்மன் கோயிலுக்குச் செல்ல வடபுறம் ஒரு கோபுர மும், அம்மன் சந்நிதிக்கு நேரே அதே பிரகா ரத்தில் மற்ருெரு கோபுரமும் இருக்கின்றன.

கிழக்கு வாயில் வழியே உள்நுழைந்த தும் வடக்கே பெரிய நூற்றுக்கால் மண்டபம் இருக்கிறது. இதை வெளவால் நத்து (வாவல் நெற்றி) மண்டபம் இருக்கிறது. இந்த பெரிய அழகான மண்டபம்சிற்பத்திறமைக்கு சிறந்த எடுத்துக்காட்டு. பின் அட்டைப் படம் பார்க்க. கோயில் திருப்பணி செய்யும் ஸ்தபதிகள் சில தலங்களில் உள்ள அரிய திருப்பணிகள் நீங்கலாக ஒப்பந்தச் செய்து கொள்வது அக்காலத்திலிருந்த வழக்கம். அத் தகையவை ஆவுடையார் கோயில் (திருப் பெருந்துறை) கொடுங்கை, திருநனிபள்ளி

---

விஞ்சினுல் குடக்கூத்தாடலாகும். குடக்கூத் தாவது, தலையிலே அடுக்குக் குடமிருக்க, இரு தோள்களிலும் அடுக்குக் குடமிருக்க, இரு கைகளிலும் பல குடங்களை வைத்துக் கொண்டு மாறி மாறி யிட்டாடுதல்; அப்படி பாடும்போது தலையிலுள்ள குடங்களோ தோள்களிலுள்ள குடங்களோ ஆடுதலும் அசங்குதலுமின்றிக்கேயிருத்தல் சாதுரியம்; இது கண்ணபிரானுக்கு அஸாதாரணமான தென்பர். சாதியின் மெய்ப்பாட்டுக்காகக் கண்ணபிரான் இதைச் செய்வனும். இச்சரி தையை இங்கு அநுஸந்தித்தது ஆழ்வாரு டைய திருவுள்ளத்திலே இக்குடக்கூத்தும் நிகழ்ந்தபடியைக் காட்டும்.

(தொடரும்)

கோடிவட்டமும், திருவீழிமிழலை வெளவால் நெற்றி மண்டபமும் என்பர். இரண்டாவது கோபுர வாயில்வழியே உள்நுழைந்ததும் முதலில் பலிபீடம் இருக்கிறது. இதுவே திருஞானசம்பந்தர் படிக்காசுபெற்ற பீடம் என்று சொல்லப்படுகிறது. அதையொட்டி ஸ்ரீ ஆதிமூலநாத சுவாமி (இலிங்கம்) சந்நிதியிருக்கிறது. இவ்விரண்டிற்கும் வடக்கே வசந்த மண்டபம் காணப்படுகிறது. மூன்றாவது திருவாயிலைக் கடந்து உட்பிரகாரம் சென்றதும் இறைவன் எழுந்தருளியிருக்கும் கர்ப்பக்கிரகம் உயரமான இடத்தில் இருக்கிறது. கட்டுமலைக் கோயில்போல் இருப்பினும் இது மாடக்கோயில் அன்று. இந்த உயரமான மண்டபத்திற்குக் கீழே கிழக்கு நோக்கி நந்தி இருக்கிறது. மூலஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கமூர்த்திக்கு வீழிநாதர், வீழியழகர் என்ற திருநாமங்கள். மூலஸ்தானத்தில் உள்ளே இலிங்கத்தின் பின்னால் இறைவன் இறைவி நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ளனர். கர்ப்பக்கிரகத்திற்குத் தென்பால் சக்கரப்பிரதானர், அதற்குக் கிழக்கே ஒரு சிவலிங்கமூர்த்தி ஆகிய சந்நிதிகளும் இருக்கின்றன. விமானத்தில் தென்பக்கம் தோணியப்பர் சம்பந்தருக்குக் காட்சி கொடுக்கிறார்.

மேற்கு உள்பிரகாரத்தில் விநாயகர், சோமாஸ்கந்தர், முருகன், இலட்சுமி, பல இலிங்கங்கள், இவர்களுடைய சந்நிதிகளிருக்கின்றன. வடக்கு உட்பிரகாரத்தில் விண்ணிழிந்தநாதர்—பண்தயங்குமொழியாள் இவர்கள் திருமணக் கோலத்துடன் காட்சியளிக்கும் சந்நிதி இருக்கிறது. இதற்குக் கிழக்கே பிட்சாடனர், நடராஜர் சந்நிதிகளிருக்கின்றன.

மேற்கு இரண்டாவது, மூன்றாவது பிரகாரங்களில் திருவாயில்க்ள் இருக்கின்றன. இரண்டாவது மேற்குப் பிரகாரத்தில் அப்பர் படிக்காசு பெற்ற பீடம் இருக்கிறது. வடக்கு இரண்டாம் பிரகாரத்தில் மகாலிங்கர், மாயூரநாதர் சந்நிதிகள் இருக்கின்றன. மூன்றாவது மேற்குப் பிரகாரத்தில் படிக்காசு விநாயகர் சந்நிதியிருக்கிறது. வடக்கு வெளிப்பிரகாரத்தில் அம்பிகை தனிக்கோயில் கிழக்கு



திருவீழிமிழலை—விண்ணிழி விமானம்

நோக்கிய சந்நிதியுடன் விளங்குகிறது. அம்பாளின் திருப்பெயர்கள் சுந்தரகுசாம்பிகை, சுந்தராம்பிகை என்பன.

சக்கராயுதம் பெறுவதற்காகத் திருமால் நாடோறும் இத்தலத்திறைவனை ஆயிரம் தாமரை மலர்களைக்கொண்டு அருச்சித்து வந்தார். ஒருநாள் ஒரு பூக்குறையக்கண்டு தன் கண்ணையே எடுத்து அருச்சித்துப் பூசையை முடித்தார். இந்த நிகழ்ச்சி பன்னிரு திருமுறைகளில் பல பாடல்களிலும், சிறப்பாக இந்த தலத் தேவாரத்திலும் குறிக்கப்பட்டிருக்கிறது.

"தன்தவம் பெரிய சலந்தரனுடலம் தடிந்தசக்
கரம்எனக் கருளென்று
அன்றுஅரி வழிபட் டிழிச்சிய விமானத்
திறையவன்
பிறையணி சடையன்"

"தருப்பமிகு சலந்தரன்தன் உடல்தடிந்த
சக்கரத்தை
வேண்டி யீண்டு
விருப்பபொடு மால் வழிபாடு செய்யவிழி
விமானஞ்சேர் மிழலையாமே"

என்பவை திருஞானசம்பந்தர் திருவாக்குகள். மேலும், மகாவிஷ்ணு விண்ணிலிருந்து கொண்டுவந்த விமானமே கோயிலாயிற்றென்பதும் இதில் குறிக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் ஒரே பாடலில் அப்பர் பெருமான் கூறியருளுகிறார். அது பின்வருமாறு:—

நீற்றினை நிறையப்பூசி நித்தலா
யிரம்பூக் கொண்டு
ஏற்றுழி யொருநா ளொன்று குறையக்கண்
நிறைய விட்ட
ஆற்றலுக் காழி நல்கி யவன்கொணர்ந்
திழிச்சு கோயில்
வீற்றிருந் தளிப்பர்வீழி
மிழலையுள் விகிர்தனாரே.

இத்தலம், சம்பந்தர், அப்பர் இவர்களுடைய வரலாற்றுச் சம்பந்தமுடையது. இருவரும் அடியார்களுடன் இத்தலத்து இறைவனை வழிபட்டு இங்கே தங்கியிருந்தனர். மாரிவளஞ் சுருங்க எங்கும் பஞ்சமேற்பட்டது. இருவருடைய கனவிலும் சிவபெருமான் தோன்றித் தாம் காசுபடி கொடுப்பதாகச் சொல்லி மறைந்தருளினார். மறுநாட்காலைமுதல் படிக்காசு பெற்று இருவரும் அதைக்கொண்டு அடியார்களுக்கு அமுதளித்து மகிழ்ந்தனர். இந்த நிகழ்ச்சி இப்பதிக்குத் தனிப்பெருமை தருவது. அப்பர், சம்பந்தர் தங்கியிருந்த மடங்கள் வடக்கு வீதியில் இப்போது ஆலயங்களாக விளங்கி வருகின்றன. திருஞான சம்பந்தருக்கு இத்தலத்தில் சீகாழியிலிருக்கும் தோணியப்பர் கோலத்தை இறைவன் காட்டியருளினார் என்றும் கூறப்படுகிறது. கர்ப்பக்கிரக விமானத்தின்மேலே தென்புறம் தோணியப்பர் திருவுருவம் காணப்படுகிறது.

திருஞானசம்பந்தர் இத்தலத்துப் பெருமான்மீது பதினைந்து திருப்பதிகங்கள் ஓதியருளியிருக்கிறார். திருமால் விண்ணிலிருந்து விமானத்தைக் கொண்டுவந்து கோயிலாக்கி வழிபட்டது, தாம் வாசியில்லாக்காசு பெற்றது, இவ்வூரின் இயற்கைவளம் முதலியவற்றை மிக அழகாக எடுத்துக் கூறியிருக்கிறார். வாசிதீரக் காசுபெற்றதை,

வாசி தீரவே காசுநல்குவீர்
மாசின்மிழலையீர் ஏசலில்லையே

என்று சொல்கிறார். இயற்கையழகை,

தேங்கொள்பூங் கமுகுதெங்கிளங் கொடிமாச்
செண்பகம் வண்பலா இலுப்பை
வேங்கைபூ மகிழால் வெயில்புகாவீழி
மிழலையானென வினைகெடுமே

என்று கூறுகிறார். தாம் இங்கே தோணியப்பர் காட்சி கண்டதை,

விண்ணிழி கோயில் விரும்பிமேவும் வித்தக
மென்கொலி தென்றுசொல்லிப்
புண்ணிய னைப்புக லிந்நிலாவு பூங்கொடி
யோடிருந் தானைப்போற்றி

என்று குறிக்கிறார். உலக உயிர்கள் 84 இலட்சம் வகைப்பட்டவை என்பதை "உரைசேரும் எண்பத்துநான்கு நூறாயிரமாம் யோனிபேதம் நிரை சேரப்படைத்தவற்றின் உயிர்க்கு யிராய் நின்றான்" என்று சொல்கிறார்.

திருநாவுக்கரசர், இத்தலத்திறைவனைப் புகழ்ந்து எட்டுத் திருப்பதிகங்கள் அருளியுள்ளனர். திருமாலுக்குச் சக்கரம் கொடுத்ததை, "சக்கரம் புட்பாகற்கு அருள் செய்தான் காண்", "நேமி நெடுமாற்கு அருளிச்செய்தார் போலும்", "கண்துஞ்சுங்கரு நெடுமால் ஆழி வேண்டிக்கண்ணிடந்து சூட்டக் கண்டருளு

வான்காண்'' என்றும் கூறியிருக்கிறார். ஒரு திருப்பதிகத்தில் இறைவன் திருவுருவத்தின் எழிலையும், மற்றொன்றில் அவன் திருவிளையாடல்களையும் விதந்தோதுகிறார். ஒரு திருத் திருத்தாண்டகப் பதிகத்தில் பல தலங்களின் பட்டியலைக் கொடுத்திருக்கிறார். ஒரு பாடலில் இறைவியின் பெயரான ''பண்தங்கு மொழிமடவாள்'' என்று குறிக்கிறார். விமானம் விண்ணிலிருந்து இறங்கியது என்பதை ''விண்ணிழிதண்வீழி மிழலையானே'' என்று ஒரு பதிகப் பாடல்களின் இறுதியில் சொல்லியிருக்கிறார். இன்னுமொரு பதிகத்திலுள்ள ஒவ்வொரு பாடலின் கடைசியிலும் ''திருவீழி மிழலையானைச் சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே'' என்று கூறுகிறார்.

சுந்தரர், இப்பதிப் பெருமான்மீது ஒரு திருப்பதிகம் பணித்தருளியுள்ளார். அப்பர் சம்பந்தருக்குப் படிக்காசு கொடுத்ததை, ''திருமிழலை இருந்து நீர்தமிழோடிசை கேட்கும் இச்சையால் காசு நித்தநல்கினீர்'' என்றும், சண்டேசுவரர் கண்ணப்பர் இவர்களுக்கு இறைவன் அருள்பாலித்ததை, ''எறிந்தசண்டி இடந்தகண்ணப்பன் ஏத்து பத்தர்கட்கு ஏற்றம் நல்கினீர்'' என்றும் கூறியிருக்கிறார்.

மாணிக்கவாசகர், திருத்தோணோக்கத்தில், ''பங்கயம் ஆயிரம் பூவினிலோர் பூக்குறையத் தங்கண் இடந்துஅரன் சேவடி மேற்சாத்தலுமே'' என்று சொல்கிறார்.

சேந்தனார் இயற்றிய திருவிசைப்பாவில் திருவீழிமிழலைக்கெனப் பாடிய பதிகம் ஒன்பதாம் திருமுறையில் இடம் பெற்றிருக்கிறது. சைவமக்கள் பெரும்பாலும் பாடி மகிழும் திருவிசைப்பா பாடல்களில் ஒன்று பின்வருவது :—

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.



திருவீழிமிழலை—கோயில் தோற்றம்

இறைவன் படிக்காசு கொடுத்ததை, "பாடலங்காரப் பரிசில் காசருளிப் பழுத்த செந்தமிழ் மலர்சூடி, நீடலங்காரத் தெம்பெருமக்கள் நெஞ்சினுள் நிறைந்து நின்றானை" என்றும், தில்லைவாழந்தணர் மூவாயிரவர் போல இத்தலத்தில் ஐந்நூறு அந்தணர் இருந்தனர் என்பதை "ஐஞ்ஞூற்றந்தணர் ஏத்தும் எண்ணில் பல்கோடி குணத்தர்" என்றும் சொல்லியிருக்கிறார். அவர் பாடிய திருப்பல்லாண்டிலும் "மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்" என்று இத்தல நிகழ்ச்சியைக் குறிக்கிறார்.

திருமூலர் திருமந்திரத்திலும் "கூறதுவாகக் குறித்து நற்சக்கரம் கூறது செய்து கொடுத்தனன் மாலுக்கு" என்று குறிப்பிட்டிருக்கிறார். நம்பியாண்டார் நம்பிகள், ஒரு பாடலில் இத்தலப் பெருமையைச் சொல்கிறார். அது வருமாறு :—

பாடிய செந்தமி ழாற்பழங் காசு பரிசில்பெற்ற
நீடிய சீர்த்திரு ஞானசம் பந்த னிறைபுகழான்
நேடிய பூந்திரு நாவுக் கரசோ டெழின்மிழலைக்
கூடிய கூட்டத்தி னாலுள தாய்த்திக் குவலயமே.

சேக்கிழார் பெரியபுராணத்தில் சம்பந்தர் அப்பர் இத்தலத்தில் வந்து தங்கியிருந்து படிக்காசு பெற்று அடியார்க்கமுதளித்ததைச் சொல்லியிருக்கிறார். அப்பருக்கருளிய காசு சுலபமாக மாறிற்று; சம்பந்தர் பெற்றது வாசியுள்ளதாக இருந்தது. "இமயப் பாவை திருமுலைப்பால் தேசம் உய்ய உண்டவர் தாம் திருமாமகனார் ஆதலினால் காசுவாசியுடன் பெற்றார், கைத்தொண்டாகும் படிமையினால் வாசி இல்லாக் காசுபடிபெற்று வந்தார் வாகீசர்" என்று நயம்படக் கூறுகிறார். சுந்தரர் இங்கெழுந்தருளியதை "திருவீழிமிழலை இறைஞ்சிச் சேண்விசும்பின் முந்தை இழிந்த மொய்யொளிசேர் கோயில் தன்னை முன்வணங்கி, பந்தமறுக்கும் தம்பெருமான் பாதம் பரவிப் பணிகின்றார்" என்று உரைக்கிறார்.

அருணகிரிநாதர் இத்தலத்திற்கு "எருவாய் கருவாய்" என்று தொடங்கும் திருப்புகழ்ப் பாடல் ஒன்றைப் பாடியிருக்கிறார். திருமயிலாடுதுறை என்ற மாயூரத்தினரான மெய்ஞ்ஞானமுனிவர் என்பவர் திருவீழிமிழலைத் தல புராணம் இயற்றியுள்ளார். இவர் திருவாவடுதுறை ஆதீனத்து இரண்டாவது குருமூர்த்திகளான மறைஞான தேசிகருடைய மாணவர். இந்தப் புராணம் கி. பி. 1651ல் இயற்றப் பெற்றது. 678 பாடல்களைக் கொண்டது. அச்சாகவில்லை. திருமால் சக்கரம் பெற்றது, பிரமன் வழிபட்டது, காத்தியாயனி திருமணம், சுவேதகேது யமனைவென்றது, சிபிமன்னன், புரூரவன் வழிபட்டது, இரதிதேவிக்கு மன்மதனைத் தோற்றுவித்தது, காமதேனு, மனு வழிபாடு செய்தது, மிழலைக்குறும்பர் விளாங்கனி நிவேதித்தது, அப்பர் சம்பந்தர் படிக்காசு பெற்றது முதலியவற்றை அத்தலபுராணம் கூறுகிறது. வடுகநாத தேசிகர் என்பவர் "காத்தியாயனி பிள்ளைத்தமிழ்" என்ற நூலை இயற்றியிருக்கிறார். தலவரலாற்றை உரைநடை நூலாக மு. சா. சோமசுந்தர தேசிகர் என்பார் எழுதியிருக்கிறார்.

இத் தலவிருட்சம் பலா. வீழிச்செடி என்றும் கூறுவர். இத்தலத்தில் இருபத்தைந்து தீர்த்தங்கள் உள்ளன எனக் கூறப்படுகிறது. புட்கரணி தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், பிரமதீர்த்தம், பத்மதீர்த்தம், இயம தீர்த்தம், மார்க்கண்ட தீர்த்தம், பத்திரவல்லி தீர்த்தம் முதலியவை முக்கியமானவை. சித்திரையில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. முன்னால் திருவீழிமிழலை பெரிய நகரமாயிருந்திருக்கிறது. ஆவண வீதியானது இப்போது ஐயன்பேட்டையென வழங்குகிறது. அங்குள்ள கோயிலில் சுவாமி செட்டியப்பர் தராசுபிடித்த கரத்தோடும், அம்பாள் படியளந்த நாயகி படியைப்பிடித்த கையோடும் உற்சவமூர்த்திகளாகக் காட்சியளிக்கின்றனர். அடியார்கள் திருவமுது கொண்ட இடத்திற்கு ஆண்டார் பந்தி என்றும், சமயல் செய்த பாகசாலையை பாசாலை என்றும் இப்போது சிற்றூர்கள் இருக்கின்றன. திருவீழிமிழலையில் அப்பர், சம்பந்தர் கோயில்களன்றி பத்திரவல்லீசர், அபிமுத்தீசர், திருமால், மாரியம்மன் முதலியோர் கோயில்களிருக்கின்றன.

திருவீழிமிழலைக் கோயில் விமானம் ஓங்கியுயர்ந்து இருக்கிறது. "விண்ணிழி விமானம்" என்று திருமுறைப் பாடல்கள் கூறுகிறது. அதைப் பதினாறு சிங்கங்கள் தாங்குகின்றன. சுந்தரர் தேவாரத்தில் "மடங்கல்பூண்ட விமானமு மண்மிசை வந்திழிச்சிய வானநாட்டையும்" என்று இதைக்

குறிக்கிறது. நூற்றுக்கால் மண்டபமான வௌவால் நத்துமண்டபமும் மிகுந்த சிற்பச் சிறப்புடையது.

இக்கோயிலின் கர்ப்பக்கிரகச் சுவர்கள், மதிற்சுவர்கள் முதலியவற்றில் பல கிரந்த—தமிழ்க் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. பராந்தகன் I, இராஜராஜன் I, இராஜேந்திரன் I, இராஜராஜன் III, இராஜேந்திரன் III, இராஜாதிராஜன் I, குலோத்துங்கன் I, விக்கிரமசோழன், குலோத்துங்கன் III, முதலிய சோழ மன்னர்கள், வீரபாண்டியன், சுந்தரபாண்டியன், விஜயநகர மன்னரான விருப்பண்ண உடையார் இவர்கள் காலத்தில் பொறிக்கப் பெற்றவை அக்கல்வெட்டுக்கள். விளக்கெரிக்க நிலம், ஆடுகள், திருவிழா, பூசை இவை நடைபெற நிலம், பொன், ஆபரணங்கள், முதலிய தானங்கள் வழங்கியதை அவை அறிவிக்கின்றன. கோயிலுக்குத் தங்கம் பூசிய ஓடுவேய்ந்தது, கிராம காரியம் பார்க்கத் திருவீழிமிழலை சபை கூடியது, திருச்சத்திமுற்ற முதலியார் சந்தானத்தைச் சார்ந்த ஞானசிவர் என்பார் திருவீழிமிழலை அழகிய திருச்சிற்றம்பல முடையார் மடத்துக்கு நிலம் கொடுத்தது, கோயில்நிலம் அளவை (Survey) செய்யப்பட்டது, காவிரிப்பூம்பட்டினத்து வணிகன் நந்தவனத்துக்கு நிலம் வழங்கியது, திருநாவுக்கரசர் மடத்திற்குச் சொந்தமான நிலங்களின் பட்டியல், நின்றருளிய நாயனுர், நெறிவார்குழலி நாச்சியார் இவர்கள் கோயில் திருப்பணிசெய்த ஆசாரிக்கு நிலம், மனைகொடுத்தது, மூன்றும் பிரகாரத்தில் எழுந்தருளச் செய்யப்பெற்ற திருவாதவூர்த் தேவர் மாணிக்கவாசகருக்குப் பூசை முதலியவற்றிற்கு நிலம் அளித்தது, கோயிலுக்கு வடபுறம் மடம் கட்டியது, திருக்கைக் கோட்டியில் திருமுறை ஓத நிலம் விட்டது, திருப்பதியம்பாட ஏற்பாடு செய்தது, ஐப்பிசித் திருவோண விழாவிற்கு வரும் யாத்ரீகர்களுக்கு உணவளிக்க நெல் வட்டிக்கு விட்டது, ஆதிசண்டேசுவர தேவர்க்குக் கோயில் கட்டியது, சிவலோகமுடைய நாயனுர் கோயிலிலுள்ள ஒரு தவசிக்குப் பொருள் வழங்கியது, கோயில் நிலங்களுக்கு நீர்ப்பாசன ஏற்பாடுகள் செய்தது, ஸ்ரீகாலகாலன் என்ற வாள் தானம் செய்தது, ஸ்ரீகிருஷ்ணப் பிரதிஷ்டைசெய்து பூசைக்கு நிலம் வழங்கியது, அழகிய மணவாளன் உருவப் பிரதிஷ்டை பண்ணியது, கோயில் சிப்பந்திக்கு நிலம் கொடுத்தது முதலிய அரிய பல செய்திகளை அவை தெரிவிக்கின்றன. உலகுய்யக் கொண்ட சோழவளநாட்டு வெண்ணுட்டுப் பிரமதேயமான திருவீழிமிழலை என்று ஊரைக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. திருவீழிமிழலை உடையார், திருவீழிமிழலையுடைய மகாதேவர், திருச்சுவர்க்கமுடையார், மூலஸ்தானேசுவரர், திருமழலைத் திருத்தான்ருேன்றி மகாதேவர், திருவீழிமிழலை உடையார் பரமேசுவரபட்டரார் என்றெல்லாம் இறைவன் திருப்பெயர்களை அக்கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

இக்கோயில் திருவாவடுதுறை ஆதீன ஆட்சியிலிருந்து வருகிறது.

எருவாய் கருவாய் தனிலே யுருவா
யிதுவே பயிராய் விளைவாகி
இவர்போ யவரா யவர்போ யிவரா
யிதுவே தொடர்பாய் வெறிபோல
ஒருதா யிருதாய் பலகோ டியதா
யுடனே யவமா யழியாதே
ஒருகால் முருகா பரமா குமரா
உயிர்கா வெனவோ தருள்தாராய்
முருகா வெனவோர் தரமோ தடியார்
முடிமே லிருதாள் அருள்வோனே
முனிவோ ரமரோர் முறையோ வெனவே
முதுசூ ருரமேல் விடும்வேலா
திருமால் பிரமா அறியா தவர்சீர்
சிறுவா திருமால் மருகோனே
செழுமா மதில் சேரழகார் பொழில்சூழ்
திருவீ ழியில்வாழ் பெருமாளே

—அருணகிரிநாதர்

✻

# ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

[திரு. K. பட்சிராஜன், B.A. B.L., திருநெல்வேலி]

ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தின் ஆசாரியர்களின் வரலாற்றைக் கூறுவது இக்கட்டுரைத் தொகுப்பின் நோக்காகும். இது கூறுமுன் தமிழ் நாட்டில் ஆதிகாலம் தொட்டு வைணவ சமயநிலை என்ன, தமிழர் கோட்பாடுகள் என்ன, இவ்வாசாரியக் கொடிவழியின் தோற்றுவாய் என்ன என்பவை சுருக்கமாக அறிந்துகொள்ளத்தக்கன.

"லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாத
யாமுன மத்யமாம்
அஸ்மதா சார்ய பர்யந்தாம்
வந்தே குருபரம் பராம்"

என்பது வைணவர் ஒவ்வொருவரும் அறிந்த, அறியவேண்டிய சுலோகமாகும். பொதுவாக, 'திருமகள் கேள்வனில் தொடங்குவதும், நாதமுனி ஆளவந்தார் இவர்களை நடுவிலே உடையதும் என்னுடைய ஆசாரியனோடு முடிவதுமான ஆசாரியக் கொடிவழியை நான் வணங்குகிறேன்' என்பது இதன் பொருளாகும். இதன்படி வைணவசமயம் தான் ஒருவனாகவே இருந்த ஸ்ரீமந்நாராயணன் தன்னுள்ளே ஒடுங்கிய ஆன்மராசிகளை மீண்டும் வெளிநாடு காண உமிழவேண்டித் தன் திருவுள்ளத்திலே நினைவுற்று, அந்த நினைவை ஈடேற்றும் பொருட்டுத் தன் உந்திக்கமலத்தை உயர்த்தி மலர்த்தி, "மூழ்த்த நீருலகெல்லாம் படை என்று" முதல் முதலாகத் தன்னுள் ஒடுங்கிய பிரமனை அத்தாமரை மலரிலே தோற்றுவித்த காலத்திலிருந்து நிலவிவருவது என்பது தெளியலாம், இதைத்தான் பிரமன் பரமனை நோக்கிக் கூறும் வாக்காகக் கம்பர்,

"நின்னுள்ளே என்னை நிருமித்தாய்
நின்னருளால்
என்னுள்ளே எப்பொருளும் யாவரையும்
யான் ஈன்றேன்"

என்று கூறினார்.

படைப்பு என்பது பிரமனைத் தோற்றுவித்த காலத்திலிருந்து தான் என்பதல்ல. சித்து (அறிவுள்ளவை), அசித்துப் (அறிவில்லாதவை) பொருள்களை எல்லாம் தன்னுள்ளே ஒடுக்கி லயிக்கச் செய்து தான் ஒருவனாகவே இருந்த நாராயணன், எப்போது "மீண்டும் படைப்போம்" என்று திருவுளத்திலே எண்ணமிட்டானோ அப்போதேபடைப்புத் தொடங்கிவிட்டது. அப்போது முதலில் தன்னையே படைத்துக்கொள்கிறான். ஒரு செயலைப் பிறர் ஏவலின்றி நாம் செய்யத் தொடங்குகிறோம். அப்போது அச்செயலில் நம்மை மூட்டுவது நாமேயன்றி வேறொருவரில்லை. நாம் அச்செயலில் இறங்குமுன் அக்காரியவுண்மையுமில்லை நினைவுமில்லை. எனவே அக்காரியம் நிகழ முதற்செயல் நாம் இதைச் செய்வோம் என்று எண்ணுகிறோமே அவ்வெண்ணமாகிய நிகழ்ச்சியே. அந்நிகழ்ச்சியின் மூலம் நாம் நம்மை அச்செயலில் ஈடுபடுத்துகிறோம். அதன் பின் அச்செயலுக்கு ஆவனவற்றைச் செய்ய முற்படுகிறோம். அச்செயலில் முதற்படைப்பு எது? நம்மை நாமே ஈடுபடுத்தி இதைச் செய்யவேண்டும் என்று எண்ணமிட்டோமே அந்தத் "தான் தன்னை ஈடுபடுத்திய செயல்"தான் என்பது தெளிவாகவில்லையா? இதனைத்தான்.

"தன்னைப் படைத்ததுவும் தானே
எனும் தன்மை
பின்னைப் படைத்ததுவே காட்டும்
பெரும் பெருமை
உன்னைப் படைத்தாய் நீ என்றால்
உயிர் படைப்பான்
என்னைப் படைத்தாய் நீ எனும்
இதுவும் ஏத்து ஆமோ!"

என்ற பாடல் மூலம் கம்பர் விளக்குகிறார். பின்பு அவனால் படைக்கப்பட்ட உயிர்கள் அறிவு முதிர்ந்து தேறி, படைப்பின் வரலாறு அறிய முற்படும்போது, "நம்மைப் பிரமன் படைத்தான்; பிரமனை நாராயணன் உந்தியிலே தோற்றுவித்தான். அவனைத் தன் உந்தியிலே தோற்றுவிக்கக்காரணம் நாராயணன் முதலிலே "படைப்பேன்" என்று எண்ணித் தன்னை அச்செயலில் ஈடுபடுத்திக் கொண்டானே அதுதான் என உணர்கின்றன. எனவே, முதற் படைப்பாகக்கூடியது நாராயணன் தன்னை ஈடுபடுத்திக்கொண்டது. அவனைப் படைப்பாரின்மையின் தானே தன்னைப் படைத்துக்கொண்டான். இதனாலேயே அவ

னைத் "தனித்தோன்றல்" என்பர். தன்னில் தானே தோன்றியவன், பிறர் உதவியின்றித் தோன்றியவன் என்பது பொருள்.

"தானே தனித்தோன்றல் தன்னளப்பொன்
[றில்லாதான்
தானே பிறர்கட்கும் தற்றேன்றல்"

என்பர் நம்மாழ்வார். இவ்விதம் உலகப் படைப்பிற்கும், அவ்வுலகைப்படைத்த பிரமன் படைப்பிற்கும், அப்பிரமனைப் படைக்க வென்று தன்னையே படைத்துக்கொண்டானே நாராயணன், அத்தற்படைப்பிற்கும், மூதற் காரணம் அவன் திருவுள்ளத்தே படைப்பேன் என்றெழுந்த சொல். இதனைத் தான் "பஹுஸ்யாம்" என்ற அவன் சங்கற்பம் என்று மறைகூறும். இத்தகைய படைப்புகளுக்கு முன் அவன் நிலைமை சித்து அசித்துப் பொருள்களை எல்லாம் தன்னுள்ளே ஒடுக்கித் தான் தனியனாய் நின்ற நிலை. தனக்குள்ளே யாவும் ஒடுங்கலின் சித்து அசித்துப் பொருள்களின் ஒடுங்கிடம் ஆனான் அவன். அவனுக்குள்ளே ஒடுங்கியவை யாதலின் அவனால் வியாபிக்கப்பட்டவையாயின அவை எனவே அவன் எல்லாம் ஒடுங்கிடமாயும் எல்லாவற்றுள்ளும் வியாபித்தவனும் ஆனான். இவ்விரு பொருள்களையும் கொண்டதுதான் நாராயணன் என்ற பெயர். இப்பெயர் அவ்விருதன்மையும் கொண்ட திருமால் ஒருவனையே சுட்டி நிற்பது வேறு எவரையும் சுட்டாது என்பது விருப்பு வெறுப்பற்ற மூதறிஞர்கள் கண்டு பறைசாற்றிய உண்மை. அப்பதம் நாரங்களுக்கு அயனம்; நாரங்களை அயனமாக உடையவன் என இருவகையாகப் பொருள்படும். அநாதியான சித்து அசித்துக்களுக் கெல்லாம் உறைவிடமானவன்; அநாதியான சித்து அசித்துக்களில் எல்லாம் உறைபவன் என்பது பொருள். நாரம்என்றால் ஆன்மப் பொருள்கள் என்று அருத்தம். அது சித்து அசித்து இரண்டுக்கும் பொது. இந் நாராயணன் முன் சொன்ன சொல்லினால் படைப்பைச் செய்தான் என்றால் அப்படைப்பால் வருபவை எல்லாம் அதற்கு முன்னையவனின் சொல்லால் தோன்றியவையே. தோன்றியவற்றுக்குத் தோற்றுவித்தவனது உண்மைப் பெருமை அறிதல் அரிதுதானே. இவ்வுண்மையை ஏற்றி ஏற்றி அவன் தன்னைப் படைத்துக்கொண்டானே அந்தத் தற்படைப்புக்குமே அரிது என்று உபசாரமாகக் கூறி முடித்தனர் ஆன்றோர். இதனாலேயே அவனைத் "தனக்கும் தன் தன்மை அறிவரியான்" என்றார் நம்மாழ்வார். "உன்னை நீ தானும் உணராதாய்" என்றார் வில்லி "உன்னை நீ ஒன்றும் உணர்ந்திலை போலுமால்" என்று சிவபெருமான் வாக்காகக் கம்பர் கூறினர்.

"சொல்லினால் படைக்க நீ படைக்க
வந்து தோன்றினர்
சொல்லினால் சுருங்க நின்
குணங்கள் சொல்ல வல்லரே?"

என்றார் மழிசைப்பிரான்.

இந்நாராயணனே படைப்புக்காகப் பிரமனைப்படைத்து, "தன் பெய்தகா"வாக அப்பிரமன் மூலம் உலகங்களனைத்தையும்படைப்பித்து, தான் அவற்றை நின்று காத்து, சங்கார மூர்த்தியாக அப்பிரமனினின்றும் சிவபெருமானைத் தோற்றுவித்து இவ்வுலகங்களை ஆட்டி நடத்தி இறுதியில் யாவற்றையும் உள்ளே ஒடுக்க உன்னியகாலை மஹாப்பிரளயத்தை உண்டாக்கித்தான் விசுவரூபியாக நின்று அனைத்தையும் வாரித் தன் வாய்ப் பெய்து ஒடுக்குகிறான் என்பது மறைகள் ஓதுகின்ற உண்மை. இவ்விதம் சொல்லினால் படைத்துப் பின்பேருருவாய் விழுங்குங் காலம் கணக்கெல்லை கடந்தது என வேதங்களும் ஆகமங்களும் புராணங்களும் கூறும். ஆகமங்களும் புராணங்களும் வேதங்களின் அடிப்படையில் எழுந்தவைகளே. வேதங்களை விலக்கி இவற்றுக்குக் கால்பாவ இடம் கிடையாது. வேதங்களின் சாரங்கள் உபநிடதங்கள். அவ்வுபநிடதங்கள் சித்தாகிய ஆன்மாக்களின் அறிவுக்குக் களஞ்சியங்கள். இவை எல்லாம் படைப்புக்காலத்தே பரமனால் பிரமனுக்கு உணர்த்தப்பெற்றவை. அவை அநாதி. எப்போது சித்து அநாதியோ அதுபோல அச்சித்தின் உணர்வும் அநாதி என்பது தருக்கவாதிகள் மறுக்க முடியாத உண்மை. அவ்வுணர்வு உளதாலேயே அது சித்து என்னும் பெயர்பெற்றது. வேதங்களின் உண்மைப் பொருளை உணர்ந்து தன் நிலையும் படைப்பும் படைப்பான் நிலையும் உணர்ந்து எத்தனை ஆன்மாக்கள் ஈடேறுகின்றன பார்க்கவேண்டும் என்பது படைத்தவனது கோட்பாடு. சித்து அசித்துக்களைப் படைக்கும்போதே மாயையும் அவனால் படைக்கப்பட்டது. சித்து அசித்துக்கள் அம்மாயையில் தோய்ந்தே

பிறக்கின்றன. அம்மாயையின் இயல்பு உண்மையைத் திரித்துக்காட்டுவதாகும். அத்திரிபுத் தொடர்பினின்று விடுபடுவதே வீடு (விடுதலை) எனப்படுவது. இவ்விடுதலைபெற முயலும் முயற்சியிலே ஆன்மாக்கள் ஏறும் படிகளே உயர் பிறப்பும், உண்மை உணர்வும் சீரிய வாழ்க்கையுமாகும். வீழும் குழிகளே இழிந்த பிறப்பும், விபரீத ஞானமும், ஈன வாழ்வுமாகும். அவனுல் வகுக்கப்பட்ட வழிகளில் நின்று அவ்வான்மாக்கள் எவ்விதம் வாழுகின்றன என அவன் காண்பதைத்தான் விளையாட்டு 'லீலை' என்று குறிப்பர் ஆன்றோர். தன் படைப்பை நிலைபெறுத்தல் தன் தொழிலாயிற்று. தற்படைப்பும், உலகைப் படை என்று அவன் நிருமித்த பிரமனும், அவ்வப்போது சங்காரம் செய்யவென்று பிரமனுல் நிருமிக்கப்பெற்ற மூர்த்தியான சிவபெருமானும் பரமனின் சங்கல்பத்தின் முக்கிய மூன்று தொழிலையும் செய்பவராதலின் அவர்களை மும்மூர்த்திகள் என்று நூல்கள் கூறும். அவர்களுள் பிரமன், சிவபெருமான் இரு மூர்த்திகளும் பரமனின் சங்கல்பத்துக்கேற்ப அவனுல் வியாபிக்கப் பெற்றுத் தொழில்படுபவராதலின் அவர்களையும் உபசாரமாகப் பரமனின் மூர்த்திகள் என்றே உபசாரமாக நூல்கள் கூறும். ஆனல் அவ் விருமூர்த்திகளும் அப்பரமனின் மாயைக்குப் புறம்பல்லர். எனவேதான் சில ஆகமங்களிலும் புராணங்களிலும் அவர்கள் தாங்கள் தங்களை யாவும் வல்லவர் என மாருடி நினைத்து நடந்து கொள்வதைக் காண்கிறோம். அந்த நேரத்தில் தம்மையும் கடந்து அப்பால் ஒருவன் உள்ளான் என்பதை மறந்து அவர்கள் செயல்பட்டு விடுகின்றனர். அவ்வளவே இதைத்தான்,

"ஆயப்பெறு நன்னெறி தம் மறிவென்(று),
ஏயப்பெறும் ஈசர்கள் எண்ணிலரால்;
நீ அப்புறம் நிற்க, நினைக்கிலர்; நின்
மாயப் பொறி புக்கு, மயங்குவரால்"

என்று பிரகலாதன் வாக்காலும்,

"பன்னல் ஆம்" என்று உலகம்
பலப்பலவும் நினையுமால்;
உன் அலால் பெருந்தெய்வம்
உயர்ந்துளோர் ஒழுக்கு அன்றே;
அன்ன ஊர்தியை முதல்ஆம்
அந்தணர் மாட்டு அருந்தெய்வம்
நின்அலால் இல்லாமை நெறி
நின்றூர் நினையாரோ?"

என்று விராதன் வாக்காலும் கம்பர் கூறினர். முற்றிய ஞானமுள்ளார் ஒழுகின முறையும், எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகினர் நெறியும் எது என்பதைக் கம்பர் கூறிய முறை கருதி உணரத்தக்கது என்பதை அறிஞர் எளிதில் தெளியலாகும்.

இவ்வுண்மையே பண்டைத் தமிழ் நாட்டிலும் பரவியிருந்ததென்பதை நடுநிலையில் நின்று சங்க இலக்கியம் கற்றூர் உணர்வர். இன்றைய வைணவரின் கோட்பாடுகள் அனைத்தையும் பொருள் செறிந்த தமிழ்ச் சொற்களில் பொதிந்து கூறும் பரிபாடல். அத் தமிழ்மதத்தைத்தான் வடமறையும் கூறிச்செல்லும் எனக் காட்டினர் உரையாசிரியர்.*

தமிழில் மிகப்பழைய நூலாக அறிஞர்கள் கருதும் 'தொல்காப்பியம்' என்ற நூலை இயற்றிய தொல்காப்பியர் திணை நிலம் கூறப் புகுந்தவர் அடைவே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று கூருது தாம் உண்மையுணர்ந்தவராதலின் முதல் தெய்வத்தை முதற்கண் கூறவேண்டி முல்லையை முதல் வைத்து,

"மாயோன் மேய காடுறை யுலகமும்"

என்று தொடங்கினர். கண்ணன் வழிபாடு பண்டைத் தமிழ் நாட்டிலே மிக்கிருந்தது என்பதைத் தமிழ் நன்கு கற்றவர் உணர்வர்.

அடுத்து, தமிழ்ப் 'பொதுமறை' அருளிய திருவள்ளுவர் கூறுவதைப் பார்ப்போம். அவர் தம் நூலை 'அ'கரப் பொருளான பகவானை முதல் வைத்துத் தொடங்கினர். பகவன் என்பது பகவான் என்ற வடசொல்லின் குறுக்கம் என்பதில் யாருக்கும் ஐயமில்லை. பகவான் என்ற சொல் நாராயணனையே குறிக்கும். பிற பொருள்களில் உபசார வழக்காகவே வரும். தமிழ் நாட்டில் முதல் தெய்வமான நாராயணனை வழிபடும் இருடிகளைப் 'பகவர்'என்றே பண்டைத் தமிழ் நூல்கள் கூறும். பகவர் என்பது வைணவத் துறவிகளையே குறிக்கும். முக்கோல் பகவர் என்று சங்க நூல்கள் கூறுவதை அறிஞர் அறிவர். திரிதண்டம் வைண

* அண்மையில் ஸ்ரீ வைஷ்ணவ சுதர்சனம் என்ற பத்திரிகை ஆசிரியர் வடமறை கூறுவதும் இத்தமிழ் மதமே என்பதைத் தக்கசான்றுகளோடு காட்டியுள்ளார்.

வர்க்கே உரியது. இவர்கள் தமிழ் நாட்டில் பரந்திருந்தனர் என்றால் அச் சமயம் நாடெங்கும் பரந்திருந்தது என்பதைத் தானே காட்டும். தவிர முதலில் அறத்துப்பாலில் மட்டுமல்ல. பொருட்பாலிலும் பொய்யா மொழியார்,

"மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு"

என்ற குறளில் விஷ்ணுவைக் குறித்தார் மடியிலாத மன்னவன் எய்தாத பொருள் இல்லை என்று குறிக்க வந்தவர் அதற்குப் பேருவமையாக எவ்வுலகத்தும் யாரும் எவையும் அகப்பட அளந்த அந்தத்திரிவிக்கிரமன் திருவடிகளைக் கூறி அத்திருவடிகள் அளந்தவையெல்லாம் மடியிலா மன்னவன் கிட்டும் என்றும் கூறினர். இதனாலும் திரிவிக்கிரமன் திருவடி நிழலில் ஒதுங்காதாரும் ஒடுங்காதவையும் எவ்வுலகத்தும் இல்லை என்பது காட்டப்பட்டது. அடுத்துக் காமத்துப்பாலினும்,

"தாம் வீழ்வார் மென்தோள் துயிலின் (இனிது கொல்
தாமரைக் கண்ணான் உலகு"

என்ற குறளில் இன்பங்களுள் தலையாய இன்பம் தாமரைக்கண்ணான் உலகத்து எய்தலே எனக்கூறி அதுவும் தம் காதலியின் மென்தோள் துயிலின் இனிதுகொல் என வினவி அதன்மூலம் காதலியின்பால் தலைவன்பெறும் இன்பத்தை வியந்தோதினர். *இவ்வண்ணம் முப்பாலினும் திருமாலின் பெயரையே கூறிப் போந்தமையின் பொய்யாமொழியார் வைணவ சமயியாயிருக்கவேண்டும் என்று முடிவு கட்டினால் அது உண்மைக்கும் அகச்சான்றுகளுக்கும் ஒத்ததே ஒழிய பிறசமயிகள் கற்பித்துக்கொள்வது போன்ற தொன்றன்று. இது வள்ளுவர் சமயத்தை ஐயம் திரிபு அறக்கூறுவது மட்டுமன்று. நூல் "பொதுமறை" என்று உண்மையே நோக்காகக்கொண்ட தமிழறிஞர் பலராலும் இன்றளவும் போற்றப்பட்டு வருகின்றமையின், இது தமிழ்நாடு நாராயணனே பரம்பொருள் என்று பறைசாற்றியது என்பதையும் அவ்வுண்மை தமிழ்ப்பண்பு உணர்ந்தார் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட தென்பதையும், பிறசமயிகளும் இவ்வுண்மையை ஓரளவு ஒப்பியே வந்தனர் என்பதையும் காட்டும் என்றால் அது மிகையல்ல. அகநானூறு, நற்றிணை இரண்டிலும் பாரதம் பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்துப் பாடினார். இரண்டினுள் நற்றிணை வாழ்த்தில் நாராயணனது விசுவரூபமே உலகங்கள் யாவும் என்பதைக் காட்டியது மட்டுமன்றி "வேதமுதல்வன்" என்பவன் "திகிரியோனே" என்று பிற வேத தெய்வங்களினின்று 'ஆழிப்படையந்தணனை'ப் பிரிநிலையாக்கி 'ஏ'காரத்தேற்றம் கொடுத்துப் பாடியுள்ளமை அறிஞர் காண்க.

*இதுகாறும் கூறியவற்றால், தமிழ்நாடு நாராயணனையே முதல் தெய்வமாகக் கொண்டு வாழ்ந்த நாடு என்பதில் உண்மை அறிஞர்க்கு ஐயமிருக்க இடமில்லை. அதுமட்டுமன்றி இன்று வைணவர் கொண்டுள்ள தத்துவங்கள் இருபத்தைந்தையும் பரிபாடல் விளக்கியிருப்பதைக் காணுமிடத்து பண்டைய தமிழ்நாடுபின்பற்றியிருந்தவைணவமே இன்றும் நிலவிவருகின்றது என்பது தானே போதரும். இத்தத்துவ விளக்கங்களோடு கூடிய உண்மையைப் பின்பற்றி நாராயணனை முதல் தெய்வமாகக்கொண்டு, ஆனால், பிற வேத தெய்வங்களையும் அவர்களுக்குரிய சிறப்போடு போற்றி வாழ்ந்தது நம் பண்டைத் தமிழ்நாடு. இவ்வுண்மையின் அடிப்படையிலே தோன்றியவைகளே ஆழ்வார்கள் திருவாய்மலர்ந்தருளிய "அருளிச் செயல்கள்" என்று போற்றப்பெறும் பிரபந்தங்கள். அவ்வாழ்வார்கள் பண்டைய தமிழர் கோட்பாடுகள் வடமறை இவற்றின் உண்மைப் பொருளை பண்டைய தமிழ்ப்பாணியிலே, பண்டைய தமிழர் கண்ட தத்துவங்களைப் பொதிந்து, செவிக்கினிய செந்தமிழ்ப் பாக்களில் வடித்தனர். மறைப்பொருள்கள் ஒரு சிலர் மட்டுமே கற்றுணரக்கூடிய முறையில் இருந்தமையின் தமிழறிந்தார் யாவரும் உணர்ந்து பயன்பெறவேண்டும் என்ற பரந்த நோக்கோடு வெளிவந்தவை அவை என்று நாம் ஒருவாறு கொள்ளலாம்.

தமிழ் வரலாற்றில் ஊகிக்கப்பெறும் தமிழ் மறையின் உண்மை உரு என்ன என்பது அறிய அரிதாகிவிட்டது. பண்டைய தமிழ் நூல்களிலிருந்து பழந்தமிழர் பண்பும்

*இவை கட்டுரை எழுதியவரின் கருத்துக்கள். முடிவாக ஏற்றுக்கொள்வதற்கிடமில்லை.
—பதிப்பாசிரியர்.

அவர்கள் கடவுட் கோட்பாடுகளும் தான் நாம் காணக்கிடைக்கின்றன. அவற்றின் தன்மை மேலே காட்டப்பெற்றன. வடமறைப் பயிற்சி இந்நாட்டில் எப்போது தொடங்கிற்று எனக்கூற இயலாது. ஆனால் அப்பயிற்சி வந்தபின் தமிழர் கோட்பாடுகளும் வடமொழி உருவிலே மாறி அதனோடு ஒன்றாய் இணைந்திருக்கவேண்டும் என்று நாம் கொண்டால் அது மிகையன்று. அதனால் தான் தமிழ்ப் பயிற்சி அறவே அற்றார்க்கு இன்று காணப்பெறும் வேதங்களில் விளங்காத, இடர்ப்பாடுடைய பல விடங்கள் அருளிச்செயல்களை நன்குணர்ந்த பெரியோர்களுக்கு விளங்கியதாக நாம் அறிகிறோம். வியாசரின் பிரமசூத்திரங்கட்கு இராமாநுசர் 'பாடியம்' என்ற விசேஷ விருத்தியுரை அருளினர். அவரைப்பற்றிக் கூறுமிடத்து "இராமாநுசர் அருளிச்செயல்களில் தெளிந்த ஞானம் பெற்றிருந்த காரணத்தாலே அவர் அச்சூத்திரங்கள் எல்லாவற்றுக்கும் வேதங்களில் ஒரு பகுதியையும் விலக்காமல் எல்லாவற்றையும் இயைத்துப் பொருள் கூறினர். அருளிச்செயல் ஞானம் பெறாததாலேயே அச்சூத்திரங்களுக்கு உரை கூறுமிடத்துப் பல இடர்ப்பாடு கண்டு வேதங்களில் சில பகுதிகளை விடுத்தே உரை கூற முற்பட்டனர் சில முன்னையோர்" என்ற பொருளிலே "இவர் (இராமாநுசர்) இது (அருளிச்செயல் ஞானம்) கொண்டு சூத்திர பாடியங்களை ஒருங்கு விடுவர்" என்று பின்வந்த பெரியோர்கள் பணித்தனர். "வேதங்களிலே பல விடங்கள் பொருள் தெளிவில்லாமல் மயங்கவைத்தன. இவ்வாழ்வார்களின் அருளிச்செயல் ஞானம் தெளிந்த பின்பே வேதங்களிலே மயங்கித் தோன்றிய இடங்களுக்குத் தெளிவான பொருள் விளங்கலாயிற்று" என்ற பொருளிலே, ஆழ்வார்களின்,

"செய்யதமிழ் மாலைகள் யாம் தெளிய ஓதித்
தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே

என்று வடமொழி வேதத்தில் ஏற்ற மிக்க ஞானம் பெற்று அதனால் வேதாந்த தேசிகர் என்று பிரஸித்திபெற்ற ஆசாரியார் ஒப்புக்கொண்டுள்ளார். ஆழ்வார்களின் பிரபந்தங்கள் பரமனருளால் வெளிவந்தமையின் அவை உண்மை மறைப்பொருள் கூறவந்தன என்ற உண்மை வடமொழி கற்றாராலேயே உணர்த்தப்பெற்றது.

ஆகவே, 'தமிழ்மறை' என்பது இருந்திருக்கலாம் என்றாலும் அது உருத்தெரியாது போயிற்று என்று கண்டோம். தமிழர் கோட்பாடுகள் வடமொழி மறையோடு ஒன்றிக் கலந்திருக்கக்கூடும் என்று ஊகித்தோம். அதன் காரணமாகவே இன்று வடமொழி வடிவிலே மட்டும் காணப்பெறும் மறைப்பொருள்களில் பல தமிழ்ப் பண்பின் அடிப்படையிலேயே மிகுதியாக வந்த ஆழ்வார்களின் அருளிச்செயல் கற்றார்மட்டும் எளிதில் காணக்கூடிய விதத்தில் அமைந்துள்ளன என்ற உண்மையை வடமொழிப் பாண்டித்தியம் மிகுதியும் பெற்ற இரு பெரியார்களைப் பற்றிய குறிப்புகள் சுட்டி நிற்பதும் காட்டப்பெற்றன.

இவ்விதம் கற்றவரன்றிப் பிறரும் உணரவேண்டும் என்ற பெரு நோக்கோடு பரமனருளால் ஆழ்வார்கள் திருவாய்மலர்ந்தருளிய அருளிச்செயல்கள் தாம் வெளிவந்த நோக்கை முற்றச்செய்ய முடியாதபடி பல இடையூறுகள் தமிழ் நாட்டில் எழுந்தன. நாட்டில் சேரசோழ பாண்டியர்க்குள்ளே இடையறாத பல போர்கள்; இவர்கள் மட்டுமன்றிப் பல குறுநில மன்னர் அங்கங்கே தோன்றினர்; நாடு பல பிரிவுகளாகி அதனால் மக்கள் வாழ்க்கை ஒருவழி நிலைத்தலின்றி அறிவுதானே சிந்தித்துத் தெளிவுற்று வளர வகையின்றி ஓய்ந்தது. தவிர பௌத்தஜைன மதங்கள் நாட்டிலே பரவத்தொடங்கி அம்மதத்தாரின் வாக்குவன்மையும் தருக்க அறிவும் பண்டைய தமிழ்ப்பண்பை ஓரளவு மங்கச்செய்தன. மக்களில் பலர் மன்னன் எவ்வழி அவ்வழி என்று கொள்ளத் தலைப்பட்டுப் பள்ளநீராயினர். தருக்க அறிவையிட்டு மறைப்பொருளுண்மையிலும், உண்மை மறைப்பொருளின் தன்மையிலும் மாறுபாடான கோட்பாடுகள் தலையெடுக்க ஆரம்பித்தன. பலவேறுகாரணங்களையிட்டு மறைப்பொருளுக்கு உண்மைப்பொருளை விடுத்து வேறுபொருள்கள் கற்பிக்க மறைக்காவலருள்ளேயே சிலர் முற்பட்டனர். இதுமட்டுமன்றிப் பண்டைத் தமிழ்க் கோட்பாடுகள் புறக்கணிக்கப்பட்டு வடமொழி மறையில் அங்கங்கே காரணார்த்தமாக விதந்தோதப்பட்ட இடங்களை வைத்து உண்மை மறைப்பொருளின் தன்மை திரித்துக் கூறப்படலாயிற்று. அதனால் அம்மறைகளின் அடிப்படையி

லேயே பல மதங்கள் தோன்றத் தாம் தாம் உண்மை என்று பறை சாற்றலாயின. மக்களிலும் சிலர் தத்தம் கல்விக்கேற்ப, மனப் பண்புக்கேற்ப அவ்வாறே நம்பவும் தலைப்பட்டனர். இவ்வளவு பூசல்களுக்கிடையே மக்களுக்கும் உண்மை விளக்கவென்றெழுந்த அருளிச்செயல்கள் உருத்தெரியாது ஒளிந்தன. எனினும் பண்டைய தமிழ்ப் பண்பான நாராயணன் முதல் தெய்வம் என்ற நிலைநாட்டில் இன்றும் மக்கள் மனத்தில் நிலைத்துள்ளது; தமிழ்ரத்தம் ஓடும் காலமெல்லாம் நிலைக்கவும் செய்யும். அருளிச்செயல்கள் மறைந்திருந்தன எனினும் பண்டைய தமிழ்ப்பண்பு கெடாது அங்கங்கே பல பெரியோர்கள் வாழ்ந்து அவ்வைணவப் பண்பை வளர்த்து வந்தனர். இயல்பிலே சாத்துவிகராதலின், காலத்தின் கோலத்தால்,

"ஆரானும் யாதானும் செய்க அகலிடத்தை
ஆராய்ந்து அதுதிருத்தலாவதே—சீரார்
மனத்தலை வன்துன்பத்தை மாற்றினேன் [வானோர்
இனத்தலைவன் கண்ணனால் யான்"

என்றுகொண்டு தாமும் தம்மை யடுத்தாருமாக இத்தமிழ்ப் பண்பைப் பேணி வளர்த்து வந்தனர். இவ்விதம் வளர்த்த பெரியார்களுள் நாதமுனிகள் என்ற மகான் ஒருவர். அவரது அரிய முயற்சியால் ஆழ்வார்களின் அருளிச்செயல்கள் தமிழ் நாட்டின் பெரும் பேறுக மீண்டும் வெளித்தோன்றின. இவ்விதம் உலகுய்ய அவ்வருளிச் செயல்களை மீண்டும் உலகுய்ய வெளிப்படுத்திய நாதமுனிகள் வைணவ ஆசார்ய பரம்பரையில் வெகு முக்கிய இடம்பெற்றவர். ஸோமுகனுல் உருமாய்ந்துபோன வேதம் எவ்வாறு பரமனுல் மீண்டும் புத்துயிர் பெற்றதோ அதுபோன்று மறைந்த அருளிச்செயல்கள் நாதமுனிகளால் புத்துயிர் பெற்றன. பண்டைய தமிழ்ப்பண்பான வைணவம் மக்கள் மனத்தே ஓய்ந்து கிடந்தது அருளிச் செயலமுதூட்டப்பெற்றவாறே கிளர்ந்து நடைபோடலாயிற்று.

உலகைப் படை என்று பிரமனைப் படைத்தபோது, உலகுய்ய வழி காட்டியாகப் பரமனுல் அருளப்பெற்ற மறைகள் முதலிலே பிரமனுக்கு உபதேசிக்கப்பட்டன. எனவே குருபரம்பரையில் முதல் ஆசான் ஸ்ரீமந்நாராயணன் எனக்கொண்டு, பின் அம்மறைப் பொருளை மக்களும் உணரும்படி அவதரித்த ஆழ்வார்களில் தலையாய நம்மாழ்வாரை இவ்வுலக ஆசாரியர்களில் தலைவராக்கி, மறைந்து வாழ்ந்த அருளிச்செயல்களை மீண்டும் உலகுக்களித்த நாதமுனிகளை அந்நம்மாழ்வாருக்கு அடுத்தபடியாக வைத்து அவர் முதலாக அவ்வாசிரிய பரம்பரை கிளைத்துப் பல்கியதாகப் பெரியோர்கள் கூறுவர். இவருள் ஆழ்வார்கள் வரலாறு முன்னமேயே இத்திருக்கோயில் பத்திரிகை மூலம் வெளிவந்துள்ளமையின் ஆசாரியர்கள் என்ற தொகுதியில் முதல்வரான நாதமுனிகளின் வரலாற்றிலிருந்து இக்கட்டுரைத் தொடர் தொடங்கும்.

(தொடரும்)

---

இராஜமன்னார்குடி: ஸ்ரீ ராஜகோபால சுவாமி கோயிலில் திருவத்யயனோத்சவம் 7-12-61 முதல் 28-12-61 வரை நடைபெறும். 18-12-61-ல் வைகுண்ட ஏகாதசி.

திருவையாறு: ஸ்ரீ பஞ்சநதீசுவர சுவாமி கோயிலில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுள்ளப் பாங்கின் வண்ணம் 30-11-61-ல் திருமுறை வகுப்பு ஆண்டு விழாவும், திருமுறை அர்ச்சனைத்தொடக்க விழாவும் அறநிலையத்துறை ஆணையர் அவர்களின் தலைமையில் நடைபெற்றன. திரு. G. சுப்பிரமணியம் பிள்ளை M.A., B.L. திரு. சொ. சிங்காரவேலனுர் B.A., ஆகியோர் முறையே "வாதவூரரும் வாகீசரும்", "திருமுறை வாழ்வு" என்பவைபற்றிச் சொற்பொழிவாற்றினுர்கள். மாலை 6 மணிக்கு திருமுறைகள், தேவாரப் பண்ணிசையோடு யானைமேல் திருவீதியுலா நடைபெற்றது.

மதுரை: ஸ்ரீ கூடலழகர் கோயிலில் (தெற்கு ஆடிவீதி மண்டபத்தில்) 3-12-61 முதல் 12-12-61 வரை 'திருப்பல்லாண்டு' விரிவுரை, திரு. சடகோபாச்சாரியார் அவர்களால் நிகழ்த்தப்பெறும். 3-12-61 காலை 10 மணிக்கு விரிவுரை ஆரம்பவிழா அறநிலையத்துறை ஆணையர் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

திருநாகேசுவரம்: ஸ்ரீ நாகநாதசுவாமி கோயிலில் 1-12-61 முதல் 10-12-61 வரை பிரமோற்சவம் நடைபெறும்.

கும்பகோணம்: ஸ்ரீ சாரங்கபாணி சுவாமி கோயிலில் 6-12-61 முதல் 15-1-62 வரை ஊஞ்சல் உத்சவம், சங்க்ரமண உத்சவம் முதலியுவை நடைபெறும்.

# சிவஞான போதம்

[திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A.,L.T.]

**இரண்டாம் சூத்திரம், இரண்டாம் அதிகரணம்:**

சூத்திரப்பகுதி: "(ஆணையின்)இருவினையின்"

வார்த்திகம்: **இனி இவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வன் ஆணையின்வரும் என்றது, ஒரு நகரியைக் காப்பான் பாடிகாவல் இட்டாங்கு அவை அவனது ஆக்கினை ஆகலான்.**

[முதல் அதிகரணத்தில் முதல்வன், உயிர்களோடு ஒன்றாய், வேறாய், உடனாந் தன்மையிற் கலந்து நின்று, உலகைப் படைப்பன் என்பது கூறப்பட்டது. அவ்வாறு படைக்கும்போது, உயிர்கள் முன் முன் பிறப்பிற் செய்துள்ள இருவினைகளுக்கு ஏற்றபடி படைப்பன்; ஒரு நாட்டை ஆளும் அரசன் சட்டம் அமைத்து, அதன்படி குடிமக்களுக்கு நீதி வழங்கிவருதல்போல், முதல்வனும் உலகிற்கு ஒழுக்க நெறியை அமைத்து அதன்படி குடிமக்களுக்கு நீதி வழங்குதல் போல், முதல்வனும் உலகிற்கு ஒழுக்க நெறியை அமைத்து அதுபற்றி உயிர்களுக்கு உடம்பும், உடம்பின்கண் கருவிகளும், சூழ்நிலையும், செல்வ வறுமைகளும், உயர்ச்சி தாழ்வுகளும், இன்பத் துன்பங்களும் கொடுத்து வருவன் என்றபடி.]

பாடிகாவல்—என்பது சிறைப்படுத்தல்; அஃது இங்கு முறைசெய்து காப்பாற்றுதலாகிய செங்கோன்மையின் மேல் நின்றது. முதல்வன் செயல் உலகத்து வேந்தர் செயலோடு ஒப்புவித்து உணரத்தக்கது என்பதை "முறைசெய்து காப்பாற்றும் மன்னவன், மக்கட்(கு)—இறையென்று வைக்கப்படும்" என்னுந் திருக்குறளால் உணரல் ஆகும்.

இவ்வதிகரணத்தில்,

க. தன்னாற் கூறப்படும் பொருள்:—

(அ) உயிர்கள், முன் முன்பிறப்புக்களிற் செய்யப்பட்டுத் தம் தம் புத்தி தத்துவத்தைப்பற்றி நிற்கும் இரு வினைகளுக்கு ஏற்றபடி பிறந்து, வாழ்ந்து, இறந்து வரும்—என்பதும்,

(ஆ) அவ்வினைகள் ஆணை எனப்படும் முதல்வனது அருளாற்றலால் உயிர்களுக்கு இன்பத்துன்பப் பயன்களை ஊட்டிவரும்—என்பதும் ஆம்.

உ. ஐயப்பாடு:

(அ) இருவினைகள் உளவோ, இலவோ? இருப்பினும் முதல்வன் வயப்பட்டு நின்று பயன்தருமோ, தாமே பயன்தருமோ?-எனத் தோன்றும் உணர்வு.

ங. பிறர்கூறும் பக்கமும் மறுப்பும்:—

(i) தடை: உயிர்களுக்கு இன்பத்துன்பங்கள் இயல்பாக உள்ளன. இவ்வுலகில் முயற்சியுடையார் உயர்வர்; ஏனையர் தாழ்வர். உயர்வு தாழ்வுக்கும் செல்வ வறுமைகளுக்கும் காரணமாக முன்வினை உண்டு எனக் கொள்ளவேண்டா.—இங்ஙனம் கூறுவோர் உலகாயதர் (உலகியல் வாதிகள்).

விடை: இன்பத்துன்பங்கள் மறுதலைப் பொருள்கள். ஆதலால் இரண்டையும் இயல்பு என்று கூறுதல் பொருந்தாது. நீர் குளிர்ந்தும் சூடு உள்ளதாகவும் காணப்படும் போது ஒரு குணத்தைத்தான் இயல்பு என்று கொள்ளுகிறோம்; அதாவது, குளிர்ச்சியாக இருத்தல் நீருக்கு உடன்தோன்றியுள்ள இயல்பு. ஆனால் சூடு அதைச் சுடவைத்ததனால் வந்த செயற்கை என்றே கொள்ளப்படு படுகிறது. அதுபோல, உயிர்கள் இன்பத்துன்பங்களை வேறு வேறு காரணம்பற்றி, வேறு வேறு அளவுகளில் நுகரக் காண்கின்றோம். ஆதலால், அவ்வேறுபாட்டுக்குக் காரணம் இருத்தல் வேண்டும். அக்காரணத்தையே நுட்பவுணர்வு பெற்றோர் முன்னைவினை என்று உணர்ந்து கூறினர்.

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்" எனத் தொடங்கும் புறப்பாட்டில் கணியன் பூங்குன்றனார் என்னும் நல்லிசைப் புலவர்,

"தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்வும், கல்பொருது இரங்கும் மல்லல் பேரியாற்று **நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர் முறை**

வழிப் படூஉம் என்பது திறவோர் காட்சியில் தெளிந்தனம்'' எனவும்,

எடுத்து மொழிந்துள்ளமை ஆழ்ந்து நினைத்தற்கு உரியது. இங்கே முறை என்றது இருவினையை. இங்ஙனம் கூறிய நல்லிசைப் புலவர் சோதிடக் கலைவல்லுநர் என்பது கணியன் என்னும் அவர்தம் கல்வியின் ஆகிய பெயர்பற்றி உணரப்படும். சோதிடக்கலை, ஒருவரது பிறந்தகாலத்தின் அமைந்த கோள்களின் நிலை அவர்தம் வாழ்க்கையின் அமையும் ஏற்றத்தாழ்வு, இன்பத் துன்ப நுகர்ச்சி, தொழில், உறவு, ஆயுள் முதலியவற்றைப் பெரும்பான்மைபற்றிப் பொதுப்படக் குறித்தலை, நன்கு உணர்த்துகின்றது. இதனாலும் முன்னைவினை உண்மையும், அதுவே எடுத்த பிறப்பில் இன்பத் துன்ப நுகர்ச்சியினையும், துணைப்பொருள்களையும் ஓரளவு வரையறை செய்வதனையும் உய்த்து உணரலாம்.

இன்னும், முயற்சியே பயன்தருகிறது என்று கூறவும் முடியவில்லை. இம்மைக் கண்ணே மிக்க பொருளின்பங்களைப் பெற வேண்டி முயற்சி செய்வார்க்கு இடையே தளர்வுண்டாதலைக் காண்கின்றோம். தளர்வின்றி முயன்றார்க்கும் எதிர்பாராத வகையில் வறுமையும் துன்பமும் வந்து எய்துதலையும் காண்கின்றோம். முயற்சி செய்யாதாருக்குச் செல்வமும் இன்பமும் தாமே வந்து நிறைதலும் கண்கூடு. ஆதலால், செல்வ வறுமைக்கும், உணர்ச்சி தாழ்வுக்கும், இன்பத் துன்பத்திற்கும் நியதகாரணம் வேறுண்டு என்றும் அதுவே முன்னைவினை என்றும் உய்த்துணரப்படும். விதி, ஊழ் வினை, பால், முறை, தெய்வம், நியதி, உண்மை என்னும் சொற்களால் இவ்விருவினையை முன்னையோர் குறித்துள்ளனர். ஒருவர் அறிவுடையராதற்கும் செல்வம் உடையராதற்கும் வேறு வேறு ஊழ் வேண்டும் என்னும் கருத்தால்,

"இருவே றுலகத் தியற்கை: திருவேறு,
தெள்ளியர் ஆதலும் வேறு''—என்றார்

தெய்வப் புலவர். இங்குக் கூறிய கருத்துக்களையெல்லாம் உளப்படுத்தி மெய்கண்ட தேவர்,

"உள்ளத்தே தோற்ற உயிரணையும் அவ்வுடலின்'' என்றருளிச் செய்வாராயினர்.

கிணறு தோண்டும்போது, அடியில் முன்னரே தண்ணீர் இருந்தால்தான் அது வெளிப்பட்டுத் தோன்றும்; இல்லையேல் எவ்வளவு முயன்றாலும் தண்ணீரைப் பெறமுடியாது. "இல்லது தோன்றாது'' என்பது முதற் சூத்திரத்து விளக்கப்பட்ட சற்காரியவாதம். ஆதலின், முன் உள்ளதாகிய, நன்று தீது என இருவகைப்பட நிற்கும் ஊழ், உடம்பையும் அதன்கண் தங்கி நின்று நுகரப்படும் இன்பத் துன்பங்களையும் தோற்றுவிக்க, அவ்வூழை முன்னரே செய்துள்ள உயிர் அவ்வுடம்பிற் பொருந்திய அவ்வின்பத்துன்பங்களை நுகரும்—என்பது கருத்து.

இஃது உலகாயதர் மதம் பற்றி எழுந்த ஐயத்தைக் களைந்தபடி.

இனி, சாங்கியர் உடம்பிற்றங்கி இன்பத் துன்பங்களை நுகர்வது புத்தி தத்துவமே ஆகும், உயிர் நுகர்வது அன்று என்பர். அது கண்ணாடி அணிந்து பொருளைக்காணும் போது, கண்காணவில்லை, கண்ணாடியே காண்பது என்பார் பேச்சை ஒக்கும். புத்தி என்பது உயிர்க்குக் கருவியாகவுள்ள அறிவில் பொருள் (சடப் பொருள்); இன்பத் துன்ப நுகர்ச்சி என்பது பொருள்களை அழுந்தி அறிவதேயன்றி வேறன்று. ஆதலால், உயிராகிய அறிவுடைப் பொருளுக்குத்தான் இன்பத்துன்ப நுகர்ச்சி உண்டு — எனச் சாங்கியர் மதத்தை மறுக்குங் கருத்தால்தான் மெய்கண்டார் மேற்காட்டிய தொடரில் 'உயிர் அணையும்' எனக் கிளந்து ஓதினார். வார்த்திக உரையில் இவ்வான்மாக்களுக்கு என விதந்து ஓதியதும் இக்கருத்துப்பற்றியே ஆம்.

தடை: இங்கே வேறொரு தடை தோன்றும்: இருவினையே காரணம் எனின், "முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றின்மை— இன்மை புகுத்திவிடும்'' என்னும் பொதுமறைக்குப் பயன் இல்லையோ என்பது அது.

விடை: எடுத்ததோர் உடம்பில் வரக் கடவ இன்பத் துன்பங்களும், அவற்றுக்கு ஏதுவாகிய செல்வ வறுமைகளும் அவற்றான்வரும் உயர்வு தாழ்வுகளும் அவ்வப்போது உளவாவன அல்ல; (தொடரும்)

# திருநாவலூர்க் கல்வெட்டு வரலாறு

[வித்துவான். திரு வை. சுந்தரேசவாண்டையார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்]

திருநாவலூர் என்பது நடுநாட்டுத் தேவாரம்பெற்ற தலங்களுள் ஒன்றாகும். இது சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடப்பெற்ற பெருமையும் பழமையும் வாய்ந்தது. சுந்தரமூர்த்தி நாயனார் திருவவதாரஞ் செய்தருளிய திருப்பதியும் இதுவே. இவ்வூரின் பெயர் திருநாவலூர் ஆயினும் இங்குள்ள கோயிலுக்குத் திருத்தொண்டீச்சரம் என்று பெயர். இக் கோயிலிலுள்ள முதலாம் பராந்தக சோழ தேவருடைய இருபத்தொன்பதாம் ஆண்டில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டு ஒன்றும், ஏனைய கல்வெட்டுக்களும் இவ்வூரை முனைப் பாடித் திருநாவலூர்த் திருத்தொண்டீஸ்வரமான இராஜாதித்த ஈஸ்வரம் என்று குறிப்பிடுகின்றன. இந்தத் தொண்டீஸ்வரத்தைக் கற்றளியாகக் (கருங்கல்லால்) கட்டுவித்தவன், முதற்பராந்தக சோழனது முதல் மகனாகிய இராசாதித்தன் ஆவன்.

இச்செய்தி,

"ஸ்வஸ்திஸ்ரீ மதுரைகொண்ட கோப்பரகேசரிபன்மற்கு யாண்டு இருபத்தெட்டாவது திருமுனைப்பாடி திருநாவலூர் திருத்தொண்டீஸ்வரம் திருக்கற்றளி செய்வித்த ராஜாதித்ததேவர், தாயார் நம்பிராட்டியார் கோக்கிழானடிகள் பரிவாரத்தாள் சித்திர கோமளம் வைத்த சாவாமூவாப் பேராடு தொண்ணூறு. ஈழவிளக்கு ஒன்று. இது பன்மாஹேஸ்வர ரக்ஷை" என்னும் கல்வெட்டால் தெளிவாக அறியக்கிடக்கின்றது (Taken from the Epigraphia Indica Volume VII page 133).

[முதற் பராந்தக சோழனின் இருபத்தெட்டாம் இராச்சிய ஆண்டில் அதாவது கி. பி. 935இல் தொண்டீச்சரத்தைக் கருங்கல்லால் கட்டிய இராசாதித்தனுடைய தாயார் கோக்கிழானடிகளின் பரிவாரத்தாள் சித்திரகோமளம் என்பவள் ஒரு நுந்தா விளக்கு ஒன்றுக்கு தொண்ணூறு ஆடுகளையும் ஒரு ஈழவிளக்கையும் கொடுத்துள்ளாள் என்பது இக்கல்வெட்டின் பொருளாகும்.]

இராசாதித்தன் இக்கோயிலைக் கருங்கல்லால் கட்டி அதற்கு இராசாதித்த ஈஸ்வரம் என்று தன் பெயரை வைத்தாலும், முன்னுள்ள தொண்டீச்சரம் என்னும் பெயர் மறைந்துபோகாமல் இருத்தற்கு அதற்குத் திருநாவலூர்த் திருத்தொண்டீஸ்வரமான இராஜாதித்த ஈஸ்வரம் என்றும் இக்கோயில் கல்வெட்டுக்களில் குறித்துள்ளான். எனவே இராசாதித்தன் இக்கோயிலைக் கருங்கல்லால் கட்டியது கி. பி. 935 ஆண்டுக்கு முன்னதாகும்.

## கர்ப்ப இல்லிற்கு முன்புள்ள மண்டபங்களைக் கட்டியவர்

இம் மண்டபங்களைக் கட்டியவர் இத்திருநாவலூர் வியாபாரி வேளூர்கிழவர் பள்ளி பட்டணசுவாமி ஆவர். இச்செய்தி "உடையார் திருத்தொண்டீஸ்வரமுடைய நாயனார் ஏவலாலே இவ்வூர் வியாபாரி வேளூர்கிழவன் பள்ளி பட்டணசுவாமி பெரியான் இத்திரு மண்டபம் இரண்டும் செய்து கீழைத் திருவாசலும் திறந்து அத்திருவாசலும் செய்வித்தான்." (S. I. I. Vol. VII No 1002) என்னும் கல்வெட்டால் அறியக்கிடக்கின்றது. இக் கல்வெட்டின் தொடக்கத்தில் அரசர் பெயர் குறிக்கப்படாமையால் இம் மண்டபங்கள் எந்த அரசர்களின் காலங்களில் கட்டப்பட்டன என அறுதியிட்டு உரைத்தற்கு இல்லை.

## இக்கோயில் நடராசப்பெருமானைப் பற்றிய செய்தி

முதலாம் இராசராச சோழரின் 21-ஆம் இராச்சிய ஆண்டில் அதாவது கி. பி. 1006ல் மும்மடி சோழபிரமராயர் கன்மி கழுப்பருடையான் சித்திரகுத்தன் ஐய்யக்குமரடி, இக்கோயிலில் ஆடி அருளுகிற கூத்தர்க்கு திருநாவலூர்க்கோலால் 1750 பலம் நிறையுள்ள பாதபீடம் ஒன்றைக் கொடுத்துள்ளான்.

### திருவலகிடுவார் திருப்பள்ளித்தாமம் தொடுப்பார்

இத்திருக்கோயிலில் திருவலகிடுவார், நால்வர், திருப்பள்ளித்தாமம் தொடுப்பார் இருவர் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்களுக்கு கோவிராச கேசரிபர்மரின் மூன்றும் இராச்சிய ஆண்டில் வீரஸோக பண்டிதன் நாற்டது கழஞ்சு பொன்னை மூலதனமாக வைத்திருந்தான்.

### திருவமுது வகைகள்

இறைவர்க்குத் திருவமுதுக்குப் படி இரட்டிமூன்று சந்தியும் குத்தல் அரிசி பன்னிருநாழியும், நெய்முப்பிடியும், கறியமுதுக்கு நெல்லு முந்நாழியும் உள்ளிட்டவைகளுக்கு, கோப்பரகேசரி வர்மரின் மூன்றும் ஆண்டில், முனையதரையர் அபராயிதன் குலமாணிக் கெருமனர் அருளிச் செய்ய, செம்மணங்கூருடைய நம்பூரன் பெருமுகிலன் விக்கிரமாபரணபல்லவரையன், காடுவெட்டித் திருத்தின நிலத்தை கோப்பரகேசரி வர்மரின் மூன்றும் ஆண்டில் கொடுத்துள்ளான்.

### தேவதான நிலங்கள்

திருத்தொண்டீச்சரமுடையார்க்கு மேலூர் நாட்டுத் திருநாவலூரும், இந்நாட்டுப் பெரும்பாக்கமும், மங்கலநாட்டு ஏகதீர சதுர்வேதிமங்கலமும் உரியனவாய் இருந்தன. இச்செய்தி முதலாம் இராசராச சோழனுடைய பதினெட்டாம் இராச்சிய ஆண்டில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டால் புலப்படுகின்றது. இவைகளுள் பெரும்பாக்கம் என்னும் ஊர் திருநாவலூர்க்கு வடமேற்கே நான்கு மைல் தொலைவில் இருக்கின்றது.

### கற்றளியைச் செய்த தச்சனின் பெயர்

இத்திருநாவலூர் இராஜாதித்த ஈஸ்வரத்தைக் கருங்கல்லால் செய்த தச்சனின் முழுப்பெயரும் கிடைக்கவில்லை. ஒரு கல்வெட்டில் "இச் சாதநஞ்சேதானிக்கற்றளி செய்த தலைச்சங்......இவையென்னெழுத்து" என்பதிலிருந்து அவனுடைய பெயரில் பாதியாவது கிடைத்தது மகிழ்தற்குரியதாகும். (S. I. I. Vol. VII No. 963)

### திருமால்கோயில்

இவ்வூரில் திருமால்கோயில் ஒன்று இத்தொண்டீச்சரத்துக்கு மேற்கில் உள்ளது என்பதும், அத்திருமாலின் திருப்பெயர் திருமேற்றளி மஹாவிஷ்ணுக்கள் என்பதும் முதற் பராந்தக சோழனின் 32-ஆம் ஆண்டில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டால் புலப்படுகின்றது (S. I. I. Vol. VII No. 978)

### வரலாற்றுப் பகுதி

முதற் பராந்தக சோழனது மனைவியாரின் திருப்பெயர் கோக்கிழானடிகள் என்பதாகும். இவ்வம்மையார் சேரர் குலத்தினர் ஆவர். இம் மன்னனது முதல் மகன் இராஜாதித்தன் இக்கோக்கிழானடிகளிடம் பிறந்தவன் ஆவன். இந்த இராஜாதித்தன் மனைவியாரின் பெயர் மகாதேவடிகள் என்பதாகும். இவ்வம்மையார் மிலாட தரையர் மகளாவர். இந்த அம்மையாருடைய அண்ணன் இராஜித்த ஈஸ்வரத்துக்கு ஒரு நுந்தாவிளக்குக்கு நூறு சாவா மூவாப் பேராடுகளைக் கொடுத்துள்ளான் (A. R. E. 363).

கண்டராதித்த சோழருடைய மனைவியாரின் திருப்பெயரும் மாதேவடிகள் என்பதாகும். இச்செய்தி கண்டராதித்ததேவர் தேவியார் மாதேவடிகளான செம்பியன் மாதேவியார் (S. I. I. Vol. III—part III No. 146. page 296) என்னும் கல்வெட்டுப் பகுதியால் அறியக்கிடக்கின்றது. திருவையாற்று ஓலோகமாதேவீச்சரத்திலுள்ள (அர்த்தமண்டபத்தின் வடபுறம்) கல்வெட்டு ஒன்று "ராஜராஜதேவர் திருமகளார் மாதேவடிகளார்" — என்று குறிப்பிடுகின்றது. எனவே மாதேவடிகள் என்பது இயற்பெயராகவே உள்ளது என்பது ஈண்டு அறிதற்குரிய தொன்றும்.

இத்திருநவாலூரைக் குறிக்கும் கல்வெட்டுக்கள் அனைத்தும் திருமுனைப்பாடி திருநாவலூர் என்றே குறிப்பிடுகின்றன. திருமுனைப்பாடி திருநாவலூர் என்பது திருமுனைப்பாடிக்கு அருகிலுள்ள திருநாவலூர் என்று பொருள்படும். இங்ஙனமே கல்வெட்டுக்களில் வரும் சாத்தனூர் திருவாவடுதுறை, பருவூர்க்கூற்றத்து நெற்குப்பை திருமுதுகுன்றமுடையார்க்கு (S. I. I. Vol. 13 No. 52) எனவரும் இடங்களிலும் பொருள் கொள்ளவேண்டும். இக்காலத்திலும் இவ்வழக்கம் உண்டென்பது, தஞ்சாவூர் ஜில்லாவில் வழுத்தூர் அய்யன்பேட்டை, மனைக்கால் அய்யன்பேட்டை என மக்கள் கூறுவதால் அறியலாம்; வழுத்தூருக்கு அருகிலுள்ள

அய்யன்பேட்டை, மணக்காலுக்கு அருகிலுள்ள அய்யன்பேட்டை என்பவை இவைகளின் பொருளாகும்.

## நுந்தாவிளக்கு

நுந்தாவிளக்கு என்பது தூண்டப்பெருத விளக்கு ஆகும். இதை ஆங்கிலத்தில் Perpetual lamp என்பர். இந்த நுந்தாவிளக்கு ஒன்றுக்கு நிசதம் உழக்கு நெய் எரிப்பதற்கு ஆடாயின் தொண்ணூற்றுறும், பசுவாயின் நாற்பத்தெட்டும், எருமையாயின் பதினுறும் அளிப்பது வழக்கம் என்பது முதலாம் இராசராசனுடைய தஞ்சை இராசராசேச்சரக் கல்வெட்டால் அறியலாம். இங்ஙனம் கொடுக்கப்பட்ட ஆடுகளும் பசுக்களும் சாவாமூவாப் பேராடுகள், சாவாமூவாப் பெரும்பசுக்கள் எனக் குறிக்கப்பட்டிருக்கும். இனம் பெருகிக்கொண்டிருக்கும் ஆடுகள், இனம் பெருகிக்கொண்டிருக்கும் பசுக்கள் என்பன அத்தொடர்களின் பொருள்களாகும்.

இத்திருநாவலூர்க் கல்வெட்டுக்களில் பெரும்பான்மை நுந்தாவிளக்குகளுக்கு 100 ஆடுகள் விடப்பட்ட செய்திகளே குறிக்கப்பெற்றுள்ளன. இந்த நுந்தாவிளக்குகளுக்கு நிவந்தம் வழங்கியவர்களில் பெரும்பான்மையோர் இந்த இராஜாதித்தனுடைய பரிவாரத்தார்களே ஆவர். பகைதிர ஒருவர் நுந்தாவிளக்குக்கு நிவந்தம் அளித்திருப்பது இவ்வூர்க் கல்வெட்டால் அறியப்படும் புதிய செய்தியாகும்.

## இவ்வூரைத் தன்னகத்துக் கொண்டுள்ள நாடு

இவ்வூர், முதற்பராந்தக சோழன் காலத்துக் கல்வெட்டுக்களில் திருமுனைப்பாடித் திருநாவலூர் என்றும்; "பூமியுந் திருவும் தாமே புணர"—என்னும் மெய்க்கீர்த்தியையுடைய விசயராசேந்திரன் கல்வெட்டிலும், அதிராஜேந்திரன் கல்வெட்டிலும், "ராஜேந்திர வளநாட்டுத் திருமுனைப்பாடி மேலூர் நாட்டு திருநாவலூர் என்றும்; முதற்குலோத்துங்க சோழனின் 37–ஆவது ஆண்டுக் கல்வெட்டில் கங்கைகொண்ட சோழவளநாட்டுத் திருமுனைப்பாடி மேலூர்நாட்டுத் திருநாவலூர் என்றும்; "பூமேவிவளர் திருப்பொன்மாது புணர" என்னும் மெய்க்கீர்த்தியையுடைய குலோத்துங்க சோழனின் கல்வெட்டில், இராஜராஜ வளநாட்டு திருமுனைப்பாடி மேலூர்நாட்டுத் திருநாவலூர் என்றும் குறிக்கப்பெற்றுள்ளது.

## நினைவில் வைக்கவேண்டிய செய்தி

இக்கோயிலிலுள்ள முதற்பராந்தகனின் இருபத்தொன்பதாம் ஆண்டுக் கல்வெட்டு திருநாவலூர்த் திருவகத்தீஸ்வரத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இந்த அகத்தீச்சரம் என்பது தொண்டீச்சரத்துக்கு வேறுபட்ட கோயிலாகும். இம்மன்னனுடைய இதே ஆண்டில் பொறிக்கப்பட்ட இக்கோயில் கல்வெட்டு "ராஜாதித்த ஈஸ்வரத்து மகாதேவர்க்கொன்றும் திருவகத்தீஸ்வரத்து மகாதேவர்க்கொன்றும் வைத்த விளக்கு" (S. I. I. Vol. VII No. 977) என்னும் கல்வெட்டுப் பகுதி இதை வலியுறுத்துகின்றது.

[See the Annual reports on South Indian Epigraphy for the year 1902 Nos. 325-380; S. I. I. Vol VII Nos. 954 — 1010; and the Epigraphia Indica Vol VII Pages 133—137]

---

**விரிஞ்சிபுரம் :** ஸ்ரீ மார்க்கபந்து சுவாமி கோயிலில் கார்த்திகைக் கடை ஞாயிறு விழா 8-12-61 முதல் 11-12-61 முடிய சிறப்பாக நடைபெறும்.

**வைத்தீஸ்வரன் கோயில் :** தெற்கு வீதியில் அமைக்கப்பட்டிருக்கும் வேளூர் தேவஸ்தான இலவச சித்த வைத்தியசாலை, இந்து சமய அறநிலைய அமைச்சர் கனம் திரு. M. பக்தவத்சலம் அவர்களால் 13-11-61-ல் தொடங்கி வைக்கப்பட்டது.

**திருச்செந்தூர் :** ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயிலில் 16-11-61 முதல் கோடி அர்ச்சனை நடைபெறும். சகஸ்ரநாம அர்ச்சனைக்கு ரூ. 5/=, இலட்சார்ச்சனை ரூ. 250./=

# திருக்கொண்டீச்சரம்

பாலனாய்க் கழிந்த நாளும் பனிமலர்க்
கோதை மார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும் மெலிவொடு
மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளும் குறிக்கோளி
லாது கெட்டேன்
சேலுலாம் பழன வேலித் திருக்கொண்டீச்
சரத்து ளானே.

—திருநாவுக்கரசர்.

பார்வதி தேவியார் பூசித்த தலங்களுள் ஒன்று திருக்கொண்டீச்சரம் என்பது. இது தேவாரப் பாடல்பெற்ற சிவப்பதி. மாயூரம்-அறந்தாங்கி இருப்புப் பாதையில் நன்னிலம் புகைவண்டி நிலையத்திற்கு மேற்கே $1\frac{1}{2}$ கல் தொலைவிலுள்ளது. நன்னிலத்துப் பெருங் கோயிலுக்குக் கிழக்கே $1\frac{1}{2}$ கல் தூரத்திலிருக்கிறது. வில்வாரண்ய க்ஷேத்திரம் என்ற பெயரும் உண்டு.

கோயில் கிழக்குநோக்கியிருக்கிறது. கோபுரம் இல்லை. கோயிலின் தென், மேல், வடபுறங்களில் அகழ்போல் திருக்குளம் இருக்கிறது. கோயில் சிறியது. ஒரேபிரகாரம்தான். மூலவர் கிழக்குநோக்கி எழுந்தருளியுள்ளார். திருநாமம் பசுபதீசுவரர் என்பது. மேற்கு, வடக்குப் பிரகாரங்களில் முருகன், சண்டேசுரர் சந்நிதிகளும் அம்பிகையின் கோயிலும் இருக்கின்றன. தேவியின் திருப்பெயர் சாந்தநாயகி. கோயிலுக்குள் வடமேற்கு மூலையில் நவக்கிரகங்களும், வெளியில் வசந்த மண்டபமும், சந்நிதிக்கெதிரில் நந்தியும் உள்ளன.

இத்தலத்தின் விருட்சம் வில்வம். அதனால் வில்வாரண்யம் என்றபெயர் ஏற்பட்டது. இறைவி பசு வடிவிலே இறைவனைத் தேடிவந்து பூமியைக் கொம்பினால் கிளறிய போது இறைவன் திருமுடிமேல் பட்டு இரத்தம் பீறிட்டெழுந்தது. அந்த இரத்தம் தோய்ந்துள்ள காரணம்பற்றித் தென்புறம் உள்ள திருக்குளத்தை இரத்த புஷ்கரணி என்றும், பின்பு பசுவாகியஅம்மை பால் சொரிந்த காரணத்தால் வடபால் இருக்கும் தீர்த்தத்தை க்ஷீர புஷ்கரணி என்றும் கூறுகின்றனர். சிவலிங்க மூர்த்தியின் திருமுடியில் கொம்பினால் ஏற்பட்ட பள்ளம் இருக்கிறது. கொண்டி என்றால் மாட்டுக்குப் பெயர். அதன் கொம்பினால் கிளறி இலிங்கம் வெளிப்பட்டதால் கொண்டீச்சரம் என்ற பெயர் ஏற்பட்டது. கோயிலில் நாலுகால பூசை நடைபெறுகிறது. கார்த்திகை வியாழனில் க்ஷீர புஷ்கரணியில் சுவாமி தீர்த்தம் கொடுப்பதுண்டு.

திருநாவுக்கரசர் பெருமான் இப்பதியிறைவனைப் புகழ்ந்து இரண்டு திருப்பதிகங்களை ஓதியிருக்கிறார். ஒரு பதிகத்தில் ஐம்புலச் சேட்டை முதலிய வற்றினின்றும் விடுபட வேண்டி இறைவனை நெஞ்சம் நெக்குருகிப் பாடும் பாடல்கள் மனத்தைப் பரவசமாக்கும் பான்மையுடையவை. மற்றொரு பதிகத்திலும் இளமை, செல்வம், தந்தை, தாய், மனைவி, சுற்றம் இவை நிலையானவையல்லவாதலினால் இறைவன் திருவடியே பற்றாகக்கொள்ளவேண்டும் என்று பாடியருளுகிறார்.

அப்பர் பாடியுள்ளதால் கோயில் மிகப் பழமையானது என்று சொல்லாமலேயமையும். கர்ப்பக் கிரகச்சுவர்களில் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. விஜயநகர மன்னனான கிருஷ்ணதேவராயன் நாட்டின் கீழ்ப் பகுதியில் படையெடுத்து வெற்றி பெற்றுத் திரும்பும்போது கி.பி. 1517-ல் விஜயவாடாவிலிருந்து, திருக்கொண்டீச்சரம் கோயிலுக்கு வரிகளைத் தானம் வழங்கினான் என்று ஒரு கல்வெட்டு அறிவிக்கிறது. உதயகிரி கோட்டையையும் அதன் சிற்றரசன் திருமலை இரகுத்தராயனையும் பிடித்ததையும் அக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. வினுகொண்டா, நாகார்ஜுன கொண்டா,

கொண்டவீடு, கொண்டபள்ளி, இராஜ மகேந்திரபுரம் இவைகளைத் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்ததும் அக்கல்வெட்டி லிருந்து தெரியவருகிறது,

தந்தை தாயொடு தார மெனுந்தளைப்
பந்தம் ஆங்கறுத் துப்பயில் வெய்திய
கொந்த விழ்பொழிற் கொண்டீச் சுரவனைச்
சிந்தை செய்மின் அவனடி சேரவே.

—திருநாவுக்கரசர்

---

## செய்திகள்

கீழ்க்காணும் கோயில்களில் கந்தர் சஷ்டி விழா 8-11-61 முதல் 14-11-61 வரை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சொற்பொழிவுகளும், தேவார பாராயணங்களும் இன்னிசை யரங்குகளும் நடைபெற்றன.

| இடம் | | கோயில் |
|---|---|---|
| 1. செவ்வாய்ப் பேட்டை, சத்திரச்சாவடி | — | சுப்பிரமணிய சுவாமி கோயில் |
| 2. இலஞ்சி | — | திரு இலஞ்சிக் குமாரசுவாமி கோயில் |
| 3. சின்னமனூர் | — | பூலாநந்தீசுவரர் கோயில் |
| 4. சென்னை-திருமயிலை | — | கபாலீசுவரர் கோயில் |
| 5. சென்னை-வடபழநி | — | வடபழனி ஆண்டவர் கோயில் |
| 6. குமாரவயலூர் | — | சுப்பிரமணிய சுவாமி கோயில் |
| 7. திருமயிலாடி | — | சுந்தரேசுவர சுவாமி கோயில் |
| 8. தாராபுரம் | — | அகத்தீசுவரர் வகையறு கோயில்கள் |
| 9. சிந்துபூந்துறை | — | பாளையஞ்சாலைக் குமாரசுவாமி கோயில் |
| 10. (சத்தி) தவளகிரி | — | தண்டாயுதபாணி சுவாமி கோயில் |
| 11. திருப்புகலூர் | — | அக்கினீசுவர சுவாமி கோயிலைச் சார்ந்த இராமநதீசுவரம் - இராமநாத சுவாமி கோயில் |
| 12. திருப்புள்ளிருக்கு வேளூர் (வைத்தீஸ்வரன் கோயில்) | — | வைத்தியநாத சுவாமி கோயில் |
| 13. திருப்பணிப்பேட்டை | — | அன்னபூரணி-சுந்தரேசர் கோயில் |

**சென்னை :** ஸ்ரீ அருணாசலேசுவரர் கோயிலில் கார்த்திகைத் தீபப் பெருவிழா 12-11-61 முதல் 23-11-61 வரை சிறப்பாக நடைபெற்றது.

**வடதிருமுல்லை வாயில்:** ஸ்ரீ மாசிலாமணீசுவரர் கோயிலுக்குத் திருப்பனந்தாள் காசிமடம் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்களால் ரூ. 200/= பெறுமானமுள்ள ஐந்து முகவெள்ளி கற்பூரக்கிளை 1-10-61-ல் அன்பளிப்பாக அளிக்கப்பட்டது.

**திருவாரூர்:** ஸ்ரீ தியாகராஜ சுவாமி கோயிலில் அமைந்துள்ள ஸ்ரீ கமலாம்பாளுக்கு கால் கோடி அர்ச்சனை 4-11-61 முதல் நாள்தோறும் நடைபெற்று வருகிறது.

**திருவொற்றியூர் :** ஸ்ரீ படம்பக்கநாதருக்கு காசிமடம் ஸ்ரீலஸ்ரீ அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நிறுவியுள்ள பேரறக் கட்டளையிலிருந்து 21-11-61-ல் புனுகு மெய்ப்பூச்சு, ஆராதனை முதலியவை சிறப்பாக நடைபெற்றன.

**திருக்குற்றாலம் :** திருக்குற்றால நாதசுவாமி கோயிலில் பிள்ளையன் கட்டளை 13-11-61 முதல் 15-11-61 வரை பவித்ர உற்சவம் சிறப்பாக நடைபெற்றது.

## சிவப்பிரகாச சுவாமிகள்

அருளிச் செய்த

# நால்வர் நான்மணி மாலை

(சிதம்பரம்—ஈசானியமடம் இராமலிங்கசுவாமிகள் உரை)

—:o:—

(முன் தொடர்ச்சி)

எய்துற்றதியானமரு வுணர்வு மீறின்றி யெழுந்திருவாசகமுங்-கையிற் றிகழும் முழ வாரமுடன் கைத்தொண்டு கலந்து கசிந்த னரே" எனவும், [1]"கையுந் தலைமிசை புனை யஞ்சலியன கண்ணும் பொழிமழையொழி யாதே - பெய்யுந் தகையன கரணங்களு முடனுருகும் பரிவின பேறெய்து-மெய்யுந் தலமிசை விழுமுன் பெழுதரு மின்ரூழ் சடையொடு நின்ருடு -'மையன் றிருநட மெதிர்கும் பிடுமவரார்வம் பெருகுத லள வின்ருல்" எனவும், ஆங்காங்கு வருவன வற்ருனும் அறிக. (௩௪)

செல்வநல் லொற்றி யூரன்
செய்யசங் கிலியாலார்த்து
மல்லலம் பரவை தன்கண்
மாழ்குற வமிழ்த்து மேனு
மல்லுநன் பகலு நீங்கா
தவன்மகி ழடியி லெய்தி
நல்லவின் படைந்தி ருப்ப
னம்பியா ரூரன் ருனே.

(இ - ள்.) செல்வம் நல் ஒற்றியூரன் - செல்வமல்கிச் சிறந்த திருவொற்றியூரில் அமர்ந்தருளும் சிவபெருமான், செய்ய சங் கிலியால் ஆர்த்து - பெருமையுற்ற சங்கிலி நாச்சியாராற் பிணிப்புடையராக்கி, மல்லல் அம் பரவை தன் கண் - பண்புமிக்க அழகையுடைய பரவைநாச்சியாரிடத்தே, மாழ்கு உற அமிழ்த்துமேனும்-ஆர்வமீதூ ரக் கண்டு அவர்பாற் பொருத்துவித்தா ராயினும், நம்பியாரூரன் - சுந்தரமூர்த்தி சுவாமிகள், மகிழ் அவன் அடியில்-உவகை யைப் பயக்கும் அக்கடவுளின் உபய திரு வடிகளில், அல்லும் நன்பகலும் நீங்காது எய்தி - இரவும் பகலும் இடைவிடா தொடுங்கி, நல்ல இன்பு அடைந்து இருப் பன் - சிறந்த இன்பநுகர்ந்து திகழ்வார். எ - று.

சங்கிலிநாச்சியாரை மணம்பேச விடுக் கப்பட்டாரோடு விடுத்தானும் மடிந்தாரு கலின் அவர் மற்றை மாதர்போல மதிக் கற்பாலரல்லரென்பார், 'செய்யசங்கிலி' என்றும், இவர்மாட்டுநெடுநாளுறுவித்தில ரென்பார், 'ஆர்த்து' என்றும், அமரருட் சிறந்தார்க்கும் அணுகுதற்கும் அரியராகி அருளானெய்திய அற்புதக்காந்தி யுடைய ரென்பார், 'மல்லம்பரவை' என்றும், ஆரு ருக்கு ஆர்வமேலீடுகண்டு இவர்மாட்டு நெடுநாள் எய்துவித்தனரென்பார், 'அமிழ்த்துமேனும்'என்றும், அவ்விருவரை யும் தாம் அவாவியவாசனையகலத் திரோ பவித்து, இங்ஙனம் சேர்த்திருரேனும்,அவ் வின்பத்தைச் சிற்றின்பமாக நுகராது, அக்கடவுளின் திருவடிகளென்னும் ஞான சத்திகிரியாசத்திகளின் வியாபகத்தில் தம் முடைய ஞானசத்திகிரியாசத்திகள் வியாப் பியமாக இரவுபகலும் இடையீடின்றீத் தாடலைபோலடங்கிப் பேரின்பமாக நுகர்ந் தனரென்பார், 'அல்லுநன்பகலு நீங்காத வன் மகிழடியிலெய்தியின்படைந்து' என் றும், ஏனையின்பமுற்றும் அவற்றின் மிக்க வற்றை நோக்கத் துன்பமாய்முடிதலின் அவ்வின்பமனைத்தும் ஒருங்குதிரளினும் அணுத்துணையுமொவ்வா இச்சிவாநுபவ வின்பமே இன்பமாவதென்பார், 'நல்ல வின்பு' என்றும், இப்பொழுதும் ஆலால சுந்தரராய் இவ்வியல்பின் இருக்கின்றன ரென்பார், 'இருப்பன்' என்றும் கூறினுர்.

பகல் பலவுமெய்தற்குச் சாதனமாக லின் நன்பகலெனப்பட்டது. மகிழ் இரண் டனுருபும் பயனும் உடன்ருெக்கதொகை. இருப்பன் காலமயக்கம். ஒற்றியூரர் சங்

1. திருநாவுக்கரசர் புராணம்

கிலியார்த்துப் பரவையிலழுத்தினும், ஆரூரர் அவரையே நம்பி அவரடியினெய்தி இன்புற்றிருப்பரென இதுவும் நிந்தாஸ்துதியாகவும் நிற்பதுணர்க. தான்-ஏ-அசைகள்.

நாச்சிமாரிருவரையும் விசேடித்தமையை [1]"தையலார் சங்கிலியார் தந்திறத்துப் பேசத் தகாவார்த்தை - யுய்யவேண்டு நினைவுடையா ருரையார்" எனவும், "அணங்கேயாகு மிவள்செய்கையறிந்தோர் பேசவஞ்சுவர்" எனவும், [2]"நங்கை பரவையார் – சென்றும்பர் தரத்தார்க்குஞ் சேர்வரியார்" எனவும், "பாசமாம் வினைப்பற்றறுப் பான்மிகு - மாசை மேலுமொராசையளிப்பதோர்-தேசின் மன்னியென் சிந்தை மயக்கிய - வீசனுரரு ளெந்நெறிச் சென்றதே" எனவும் வருவனவற்றானும், அடியிலெய்தி இன்புற்றமையை [3]"தன்னையாளுடையபிரான் சரணாரவிந்தமலர்-சென்னியிலுஞ் சிந்தையிலு மலர்வித்துத் திருப்பதிகம் - பன்னுதமிழ்த் தொடைமாலை பலசாத்திப் பரவையெனு - மின்னிடையாளுடன் கூடி விளையாடிச் செல்கின்றார்" எனவும், [4]"இந்நிலையிற் பேரின்ப மினிதமர்வாரிறையுறையு - மன்னுபுக ழொற்றியூரதனின்மகிழ் சிறப்பினாற் - சென்னிமதி புனைவார் தந்திருப்பாதந் தொழுதிருந்தார்-முன்னிய காலங்கள் பல முறைமையினால் வந்தகல" எனவும் வருவனவற்றானும், சிவானுபவ இன்பமே எவற்றினும் சிறந்தமையை [5]"நரர்கடமி னரசரவர் தமினினிய திவவியாழ் நண்ணுநர கந்தருவர்தா-நவிலுமவர் தமினமர கந்தருவ ரவர்தம்மி னுடரிய தேவரவரிற் - சுரரதிப னவனினுயர் சுரர்குரவ னவனினயன் சொன்முறையினாறு மடிமேற்-றுன்னுசுக மொருதிவலையளவுமின் றாகமிகு சுகவேலை" என்பதனாலும் அறிக. (௩௫)

தானே முத்தி தருகுவன் சிவனவ
னடியன் வாத வூரனைக்
கடிவின் மனத்தாற் கட்டவல் லார்க்கே.

(இ - ள்.) சிவன் அவனடியன் வாதவூரனை - சிவபெருமான் தனதடியவராகிய திருவாதவூரடிகளை, கடிவு இல் மனத்தால் கட்டவல்லார்க்கு - நீக்கமின்றிய உள்ளத்தால் நேசித்துப் பிணிக்கவல்லவர்க்கு, தானே முத்தி தருகுவன்-தாமே முற்பட்டுப் பரமுத்தியைத் தந்தருளுவார். எ - று.

இவ்வாதவூரடிகளார் உலகையீடேற்றுவான் அவதரித்த அருட்குரவராகலின், பிற சிறு தேவரைத் தெய்வமெனப்பேணுவாரைக் காண்டற்கும் அஞ்சுதலுடையராய்ச், சிவபெருமானையே முதற் கடவுளென எவருந்தெளியுமாறு தெருட்டி, ஆனந்த மேலீட்டான் அக்கடவுளை அன்புடனோக்கி நிற்றலும் அழுதலும் தொழுதலு முதலிய அமைந்தவரென்பார், 'அவனடியன்' என்றும், இவ்வுண்மையுணர்ந்து மனவொருமை யுற்று, இடையறவின்றி இவரை வழிபடல், சிவபுண்ணிய முதிர்வினர்க்கே சித்திக்கு மென்பார், 'வாதவூரனைக்கடிவின் மனத்தாற்கட்ட வல்லார்க்கு' என்றும், பாலர் பித்தர் பசாசர் போன்று தற்போதமிழந்து, இறைவர் பணியினின்றாராகலின், இவர் செயலெல்லாம் இறைவர் செயலாக முடிதலான் இவரை வழிபடுவோர்க்கு அவ்விறைவர் தாமே அவற்றையேற்று முத்தியளிப்பரென்பார், 'தானே முத்திதருகுவன்' என்றும் கூறினார்.

நுகர்வு நாடி விழைதலின்மையாற் பாலரையும், நன்மை தீமை சீலம் அகன்றிடுதலாற் பித்தரையும், செய்யுஞ் செயல் சிவன் செயலாய் முடிதலாற் பசாசரையும் உவமித்தவாறு. செயலற வொழுகற்கும், ஒருகாற் செய்தொரு காலொழிதற்கும், செயலிழப்பினின்று செய்தற்கும் மூவரையும் முறையே ஒப்பித்த தென்னலும் ஒன்று. தானே முத்திதருகுவன் சிவனென்பது எவர்க்கும் முத்தியளிக்கவல்ல முதற் கடவுள் சிவபெருமானொருவரேயென்னும் வேதநூற்றுணிபையுஞ் சுட்டி இரட்டுற மொழிதலாய் நின்றது. இல் எதிர்மறை வினைத்தொகை. ஏகாரங்களுள் முன்னையது தேற்றம்; பின்னையது அசை.

1. பெரியபுராணத்தில் கலிக்காமநாயனார் புராணம்—உ௧௬-உ௪௭.

2. பெரியபுராணத்தில் தடுத்தாட்கொண்ட புராணம். ௧௬௭-௧௫?.

3. ஷை ஷை ௧அஉ.

4. ஷை கலிக்காம நாயனார் புராணம்.உ௧௬.

5. இஷ்டலிங்கவபிஷேக மாலை-௯௦.

அன்றி, வல்லார்க்கேயல்லது பிறர்க்குத் தருவரல்லரெனக்கொண்டு பின்னையந்தப் பிரிநிலையாக்கலும் ஆம்.

பிற தெய்வங்களைப் பேணுவாரைக் காண்டற்கும் அஞ்சினமையை [1]"புற்றில்வா ளரவு மஞ்சேன் பொய்யர்தம் மெய்யு மஞ்சேன்-கற்றைவார் சடையெம் மண்ணல் கண்ணுதல் பாத நண்ணி-மற்று மோர் தெய்வந் தன்னை யுண்டென நினைந் தெம் பெம்மாற் - கற்றிலா தவரைக் கண்டா லம்மநா மஞ்சுமாறே" என்பதனானும், அன்புடனேக்கி நிற்றலாதி யுடைமையை [2]"அன்புடனேக்கி நிற்ப ரழுவர்கை தொழுவர் வீழ்வ - ரின்புற வெழுவர் பின்பா லேகுவ ரிரங்கி மீள்வர் - நன்பகல் கங்குல் காணார் ஞானநல் லறிவே கொண்டு - கொன்புனை பித்தர் பாலர் பசாசர்தங் கொள்கை யானார்" என்பதனானும், அரன் பணியினின்றமையை [3]"வேண்டத் தக்க தறிவோய் நீ வேண்ட முழுதுந் தருவோய்நீ - வேண்டு மயன்மாற் கரியோய்நீ வேண்டி யென்னைப் பணிகொண்டாய் - வேண்டி நீயா தருள் செய்தா யானு மதுவே வேண்டினல்லால் - வேண்டும் பரிசொன் றுண்டென்னி லதுவு முன்றன் விருப்பன்றே" என்பதனானும், சிவபெருமானே முத்தியளிக்கவல்ல ரென்பதை [4]"அன்றியு மொன்று கேண்மோ வம்புய னாதி யாகி - நின்றவர் தம்மை யெல்லா நீக்கியச் சிவனென்றுள்ள - வொன்றொரு முதல்வன் றானே யுய்த்திடு முத்தி வேண்டி - னென்றுமஃதியம்பிற் றென்னின் யாவரே தேவ ராவார். பரசிவ னுணர்ச்சி யின்றிப் பல்லுயிர்த் தொகையு மென்றும் - விரவிய துயர்க்கீ றெய்தி வீடு பேறடைது மென்ற - லுருவமில் விசும்பிற் றோலை யுரித்துடுப் பதற்கொப் பென்றே - பெருமறை யியம்பிற் றென்னிற் பின்னு மோர் சான்று முண்டோ" என்பதனானும் அறிக. (௩௬)

வல்லார் பிறப்பறுப்பர் வண்மை நலங்கல்வி
நல்லா தரவின்ப ஞானங்க - ளெல்லாந்
திருஞான சம்பந்தன் சேவடியே யென்னு
மொருஞான சம்பந்த முற்று.

(இ-ள்.) வண்மை நலம் இன்பம்- பொருளும் அதனலெய்தும் புண்ணியமும் அப்புண்ணியப் பயனாகிய இம்மை மறுமையின்பங்களும், கல்வி நல்லாதரவு ஞானங்கள் எல்லாம்-கல்வியும் அதனலெய்தும் அன்பும் அவ்வன்பின் பயனாகிய ஞானமும் ஆகிய யாவும் திருஞானசம்பந்தன் சேவடியே என்னும்-திருஞான சம்பந்தப்பெருமானுடைய செவ்விய திருவடிகளே எனக் கொள்ளும், ஒரு ஞானசம்பந்தம் உற்று - இத்தகைய ஒரு ஞானசம்பந்தத்தை எய்தி, வல்லார் பிறப்பு அறுப்பர்-வல்லுநரல்லாரும் பிறப்பையொழிப்பார். எ-று.

வண்மை முதலியன அவரவர் பரிபாகத்திற்கேற்ப இம்முறை பிறழவருதலும் உண்டேனும், இதுவே நியதியாகலின், இவ்வாறிசைத்ததென்பது. அற்றேல், இங்ஙனம் முறைப்படுத்தோதாததென்னையெனின், இக் காரண காரிய முறைமை யுணராது எல்லாந்திருவடிகளே யெனக்கொளும் சிந்தனையுடையாரும் உதித்துழலாரென்ப துணர்த்துதற்கென்க. அல்லதூஉம், காஞ்சியிற் சிவபெருமானருளியபடி செயற்கருந்தவமியற்றியிருந்த திருமாலுக்கும் சிவசாரூபமளித்தமையின் இப்பெருந்தகையின் இணையடிகள் கிரியாசத்தி ஞானசத்தியுருவாய்க்கிளர்ந்து செல்வ முதலிய போக சாதனங்களையும் கல்வி முதலிய மோட்ச சாதனங்களையும் நல்குவனவாமென்னும் இத்தகைய ஒப்பிகந்த ஞானத்தையுற்று வல்லுநரும் பிறப்பை யறுப்பரென்னலும் ஒன்று. என்னவே, இவ்வள்ளல் வழிபாட்டால் வல்லுநரல்லாரும் வல்லுநரும் நன்முத்தி யெய்தும்வகை நவின்றவாறாயிற்று. வல்லாரென்பது இரட்டுறமொழிதலாய் எதிர்மறையினும் உடன்பாட்டினும்வந்த வினைக்குறிப்புப் பெயர். வல்லாருமென்னும் உம்மை விகாரத்தாற்றொக்கது. பிறப்பறுப்பரென்றமையின் மேற்பேறெய்துவரென்பது சொல்லாமேயமையும். வண்மை - வளத்தின் றன்மை

1. திருவாசகம் அச்சப்பத்து-அக.
2. திருவாதவூரர் புராணம் திருப்பெருந் துறைச் சருக்கம் - அ௦.
3. திருவாசகம் குழைத்தபத்து - சு.
4 கந்தபுராணம் உபதேசப்படலம் - உச-உ௫.

எவர்க்கும் நன்மை பயத்தலின் அறத்தை நலமென்றும் அன்பை நல்லாதரவென்றும் கூறினார். உம்மைத் தொகையாகலின் ஞானங்களெனப்பன்மை யீருயிற்றென்க. அன்றி, ஞானம் இருதிறப்படுதலின் ஞானங்களென்றாரெனினும் அமையும். எல்லாம் சேவடியே யென்பது காரியத்தைக் காரணமாகவுபசரித்தல். ஏகாரம் தேற்றம். முத்திக்கு முடிந்தசாதனமென்றுணர்ந்துகோடற்கு ஞானத்தை இறுதியில் வைத்தார்.

அறமும் இன்பமும் பொருட்பேறுதலை [1]"அறனீனுமின்பமு மீனுந்திறனறிந்து-தீதின்றி வந்த பொருள்" என்பதனானும், ஆதரவும் ஞானமும் கல்விப்பேறுதலை [2]"கற்றுஞ்சிவஞான மில்லாக்கலதிகள்-சுற்றமும் வீடார் துரிசறார் மூடர்கண்-மற்றும் பலதிசைகாணார் மதியிலோர்-கற்றன்பினிற்போர் கணக்கறிந்தார்களே" என்பதனானும், ஞானமே முத்திக்கேதுவாதலை [3]"உரைசெயிற் பரமஞான மொற்றுமே முத்திக்கேது-சரியைநற்கிரியை யோகந்தாமொரு மூன்று ஞான-மருவுதற் கேதுவென்று மறைபுகன் றுரைக்கு மிந்தக்-கருவியைப் பொருளென்றெண்ணிக் களிப்பவர் கயவரன்றே" என்பதனானும், திருமால் சிவசாரூபம் பெற்றதை [4]"என்றவாய்மொழி திருச்செவி யேறலுமெங்கோ-னென்று கூறுதலுற்றன னுவணமீதுயர்த்தோய்-நன்று தேர்வைவச் சுதமனு வந்தரனுகு-மன்று நாலிரண்டீற்றுடை யிருபதாங்கலியில். காழிமாநகர்க் கவுணியர் குலத்தொரு காளை-யேழி சைத்தமிழ் ஞானசம்பந்தனெம்மடியான்-யாழ நீபெறவெம்முருவிங் குவந்தளிப்பா-னூழியோயதுகாறுமிவ் வரைப்பினிலமர்ந்து. ஈட்டருந் தவமியற்று கென்றருளி நீங்குதலுங்-கோட்டமின்றிமாலம்முறை வதிந்துபூங் கொன்றைத்தோட்ட லங்கலாற் றொழப்புகு முத்தமிழ் விரகர்-பாட்ட லங்கலாற் பரஞ்சுடர்த் திருவுருப்பெற்றான்" என்பதனானும், பிறப்பறுத்தலை [5]"தொகுவார்பொழில் சூற்றிய வான்மதி தோயுமதிற் கனமார் - தொலையாத திருப்பொதி மாளிகை-மாடநெருக்கியசீர்-மிகு காழிமன் முத்தமிழாகரன் மேதகு பொற்புனைதார்-விரையார் கமலக்கழலே துணையாக நினைப்பவர்தா-மகராதர நித்தில நீர்நிலை யார் புவி யுத்தமராய்-[1]"வரலாறு பிழைப்பினி னூழியிலக்கிதமா-தகு வாழ்வு நிலைத்தெழில் சேரற மானப யிற்றுவர்மா-சதுரால்வினை செற்றதன் மேலனுகார்பிறவிக் கடலே" என்பதனானும், மேற்பெறெய்துதலை [2]"நிலத்துக்கு மேலாறு நீடுலகத்துச்சித்-தலத்துக்கு மேலேதா னென்பர்—சொலத்தக்க-சுத்தர்கள்சேர் காழிச் சுரன் ஞானசம்பந்தன்-பத்தர்கள்போய் வாழும் பதி" என்பதனானும் அறிக. (கஎ)

உற்றா னலன்றவந் தீயினின்
றானல னூண்புனலா
வற்றா னலனுகர் வுந்திரு
நாவுக் கரசெனுமோர்
சொற்றா னெழுதியும் கூறியு
மேயென்றுந் துன்பில்பதம்
பெற்றா னொருநம்பி யப்பூதி
யென்னும் பெருந்தகையே.

(இ-ள்.) ஒருநம்பி அப்பூதி என்னும் பெருந்தகை - ஒருநம்பியப்பூதியென நம்பியாரூரரால் உயர்த்தித் துதிக்கப் பெற்ற மிக்க மேன்மையுடையவர், தவம் உற்றான் அலன் - சரியைகிரியை யோகங்களை அநுட்டித்தவருமல்லர்; தீயில் நின்றான் அலன் - பஞ்சாக்கினி நடுவினின்று கடுந்தவம்பரித்தவருமல்லர்; ஊண் புனலா நுகர்வும் அற்றான் அலன் - நீரை உணவாகக்கொண்டு மற்றையுணவுகளை நீக்கினவருமல்லர்; திருநாவுக்கரசு எனும் ஓர் சொல்தான் எழுதியும் - திருநாவுக்கரசென்னும் சொல்லையே யாண்டும் தீட்டியும், கூறியும் - அதனை உயிர்க் குறுதிபயக்கும் மந்திரமாக உச்சரித்துமே, என்றும் துன்பு இல் பதம் பெற்றான் - எக்காலத்தினும் துன்பமென்பது எட்டுணையும் எய்துதலில்லாத முத்தியை எய்தினார், எ - று.

1. திருக்குறள்-எடுசு.
2. திருமந்திரம்-கல்லாமை-சு.
3. பிரபுலிங்கலீலை சித்தராம தேவர்கதி-கூகூ
4. காஞ்சிப்புராணம் திருமேற்றளிப்படலம்-சு-௪௦-கக.
5. திருஞானசம்பந்தர் திருக்கலம்பகம்-நசு.

1. இவ்வடி பிரதிகளிற் குறைந்தே வழங்குகின்றது.
2. திருஞானசம்பந்தர் திருமும்மணிக்கோவை-டு.

திருநாவுக்கரசென்னும் திருமந்திரம், ஏனைமந்திரங்கள் போலாது, இம்மை மறுமை யின்பங்களின் உவர்ப்புறுவித்து, பிறவியிற்செலுத்தாது சிவபதத்துய்ப்ப தெனத்தேர்ந்து, அதனையே யாண்டுந் தீட்டி உச்சரித்தமையின், அதுவே, ஞான நெறியாய்ச், சிவபதநல்கிற்றென்பார், 'எழுதியுங் கூறியுமேபெற்றான்' என்றும், இப்பேறு இன்பமெலாந்திரண்ட சிவானந் தப்பேறேயென்பார், 'என்றுந் துன்பில் பதம்' என்றும் கூறினார்.

மனம் பொறிவழிபோகாது நிற்றற் பொருட் டநுட்டிக்கும் வன்மை மென்மைத்தவங்களை வேறுவிதத்தலின் இச் செய்யுளில் தவமென்றது சரியைகிரியை யோகங்களை யென்க. ஆக வென்பது ஈறு குறைந்தது. முந்திய உம்மை இறந்தது தழீஇயிற்று. ஏனையவை எண்ணின் கணின்றசிறப்பு. தான் கட்டுரைக்கண் வந்த அசை. ஏகாரங்களுள் முன்னையது தேற்றம்; பின்னையது அசை. என்றும் எழுதியும் கூறியுமே பெற்றானெனினும் அமையும். தகையென்பது குணிப்பெயர்.

சரியையாதிகளைத் தவமென்பதனை [1]"பசித்துண்டு பின்னும் பசிப்பானை யொக்கு - மிசைத்து வருவினையி லின்ப - மிசைத்த விருவினை யொப்பி லிறப்பி றவத் தான் - மருவுவனு ஞானத்தை வந்து" என்பதனானும், சிவபதத்துய்ப்பதென் பதனை [2]"இலமா டென்றிடர் பரியா ரிந்திர னேயொத்த துறுகுறை வற்றாலு - நிலையா திச்செல்வ மெனவே கருதுவர் கீழ்சன் மக்கடலிடையிற்புக் - கலையார் சென்றர னெறியா குங்கரை யண்ணப் பெறுவர்கள் வண்ணத்தின் - சிலைமா டந் திகழ் புகழா மூருறை திருநா வுக்கர சென் போரே" என்பதனானும், இச்சரியையே ஞானநெறியாய்ச்சிவபதம் நல்கியதை [3]"இவ்வகை யரசி னுமமேத்தி யப்பொருளு நாளு - மவ்வருந்தவர் பொற்றாளே யென வுணர்ந் தடைவார் செல்லுஞ் - செவ்விய நெறியதாகத் திருத்தில்லை மன்று ளாடு - நவ்வியங் கண்ணாள் பங்கர் நற்கழ னண்ணி னாரே' என்பதனானும், துன்பில்பதம் என் பதனை [1]"இரும்பைக்காந் தம்வலித்தாற் போலிசைந்தங் குயிரை யெரியிரும்பைச் செய்வதுபோலிவ னைத்தா னாக்கி - யரும் பித்திந் தனத்தையன லழிப்பதுபோன் மலத்தை யழித்தமல னப்பணைந்த வுப் பேபோ லணைந்து - விரும்பிப்பொன் னினைக்குளிகை யொளிப்பதுபோ லடக்கி [2]"மேளித்துத் தானெல்லாம் வேதிப்பா னாகிக் - கரும்பைத்தேனைப் பாலைக் கனி யமுதைக் கண்டைக் கட்டியையொத் தினிப்பனந்த முத்தியினிற் கலந்தே" என் பதனானும் அறிக. (௩௮)

1. சிவஞானபோதம் எட்டாஞ்சூத்திரம்.
2. திருநாவுக்கரசுதேவர் திருவேகாதசமாலை -௪.
3. பெரியபுராணத்தில் அப்பூதியடிகள் புராணம் - ௪௪.

பெருமிழலைக் குறும்பரெனும் பரமயோகி
பெரிதுவந்துன் றிருவடித்தாமரையைப் போற்றி
விரைமலர்தூய் வந்தனைசெய் கின்றானென்றால்
விளங்கிழையா ரிருவரொடு முயங்க லாமோ
வுரைமதிநின் றனைவெறுப்ப தென் கொனின்னை
யுடையானுக் கடுத்தசெய லுனக்கு மாயின்
சுரர்முனிவர் பரவலுறும் பெருஞ்சீர்த் தொண்டத்
தொகைசெய்தோ யறமுதனால் வகைசெய் தோயே.

(இ-ள்.) சுரர் முனிவர் பரவலுறும் பெருஞ்சீர் தொண்டத்தொகை செய்தோய் - தேவருமுனிவருமிறைஞ்சும் மிக்க சீர்த்தி படைத்த திருத்தொண்டத் தொகையை அருளிச்செய்தவரே! அறம் முதல் நால்வகை செய்தோய்—அறம் பொருள் இன்பம் வீடென்னும் உறுதிப் பொருள்கள் நான்கையும் வகுத்தருளி யவரே! பெருமிழலைக் குறும்பர் எனும் பரமயோகி - பெருமிழலைப் பதியிலிருந்த குறும்பநாயனா ரென்னும் பரமயோகியான வர், பெரிது உவந்து உன்திருவடித் தாம ரையை போற்றி—கழிபேருவகையுற்றுத் தேவரீருடைய திருவடிக் கமலங்களைத் துதித்து, விரை மலர் தூய்வந்தனை செய்கின் றான் என்றால்—மணமிக்க மலர்களானருச் சித்துவழிபடுகின்றாரென அறிஞர் விதப்பா ராயின், விளங்கு இழையார் இருவரொடுமு யங்கல் ஆமோ-திகழும் அணிகளைப்புனைந்த தேவிமாரிருவரோடு சேர்ந்த வாழ்வது தகுதியோ? (தகுதியன்றாயினும்), நின்னை

1. சிவஞானசித்தி பதினொராஞ்சூத்திரம்-௧௨.
2. மேளித்தல் - கூட்டுதல்.

உடையானுக்கு அடுத்த செயல் உனக்கும் ஆயின்-உம்மை அடிமையாகவுடைய உமாபதிக்குரிய செய்கை உமக்கும் பொருந்துமாறால், (அஃதுணர்ந்த வழிபடாது), நின்றனை வெறுப்பது என் உரைமதி — உம்மைவெறுப்பது என்னை! மதியுரைப்பீராக. எ—று.

திருத்தொண்டர் பெருமைகளைச் சிவரகசியத்தினும் அறமுதலிய புருஷார்த்தங்களை வேதாகமங்களிலும், சிவபிரான் வடமொழியில் அருளிச் செய்தாங்கு, அக்கடவுளின் பிரதிவிம்ப சொரூபராகிய இவ்வாசிரியரும், அக்கடவுளே அடியெடுத்துக்கொடுக்கத் தேசமெலா முய்வான் தென்மொழியிலே, அத்திருத்தொண்டர் பெருமையையும், புருஷார்த்தங்களையும் தொகுத்து திருப்பதிகங்களில் அருளிச் செய்தனரென்பார், 'தொண்டத்தொகை செய்தோய் அறமுதனால் வகைசெய்தோய்' என்றும், குறும்பநாயனார் இவரது பெருமை குறித்துத் தியானிக்க, அணிமாதி எண் சித்திகளும் வாய்த்தமைகண்டு, மேலுமேலும் வழிபட்டனரென்பார், 'பெரிதுவந்துன் திருவடித்தாமரையைப் போற்றி விரைமலர்தூய் வந்தனை செய்கின்றான்' என்றும், அவ்வழிபட்டால் தாம் முக்காலவுணர்ச்சியுடையராகி ஆசிரியர் திருக்கைலைக்கெழுந்தருள நேர்தலையறிந்து, சிவயோகத்தால் முதற்றினமே திருக்கைலையை யடைந்தனரென்பார், 'பரமயோகி' என்றும், இத்தகையர் வழிபடப் பரம போகியோன்றிருப்பது இயல்பன்றென்பார், 'இருவரொடு முயங்கலாமோ' என்றும், போகியோன்றாரெனும், தேவிமாரிருவரும் கிரியாசத்தியும் ஞானசத்தியுமாய்த்திகழ அக்கடவுள்போன்று, ஆன்மாக்களுக்குப் போகமோட்சங்களை அளிப்பவராயினாரென்பார், 'உடையானுக் கடுத்த செயலுனக்குமாயின்' என்றும், குறும்பநாயனார் இவ்வுண்மைகுணித்துப் பரமயோகியெனத்தேர்ந்து பரவித்தாமும் அங்ஙனமாக, அதனையறிந்து வைத்தும், போகியெனமதித்துப் புகலாநிற்றல், எவ்வளவு பெரியதோ ரறியாமையென்பார், 'வெறுப்பதென்கொல்' என்றும், வெறுப்பவர் [1]"ஒருமைச் செயலாற்றும் பேதையெழுமையுந்—தான்புக் கழுந்து மளறு" என்பதற் கிலக்காயுள்ளவராகலின், அவர்க் கிசைத்தல் பிறர்க்கியலாது; அவருந்தெளிந்துய்வான் எல்லாம் வல்ல தேவரீரே மதியுரைப்பீராக வென்பார் 'உரைமதி' என்றும் கூறினார்.

வெறுப்பதென்கொல் உரைப்பீராக வெனக்கொண்டு, மதியென்பதனை முன்னிலையசையாக்கலும் ஒன்று. உரைத்தல் ஈண்டுணர்த்தலின் மேற்று. அறிஞரென்பது சொல்லெச்சம். எகாரம் எதிர்மறை. என் வியப்பிடைச்சொல். கொல் ஏ—அசைகள். சுரர்முனிவர்பரவல் திருத்தொண்டத்தொகைக்குமாம். இதுவும் வெளிப்படையின் நிந்தாஸ்துதியாக நிற்பதுணர்க. இப்பொருட்கண் உடையானுக் கடுத்த செயலென்பது இருமனைவியரை உடைத்தாதலென்க.

திருமாலாதியரெதிர் கொண்டிறைஞ்சினமையை [2]"இந்திரன் மால்பிரமன் னெழிலார்மிகு தேவரெல்லாம்—வந்தெதிர் கொள்ள வென்னை மத்த யானை யருள் புரிந்து—மந்திர மாமுனிவ ரிவனாரென வெம்பெருமா—னந்தம ரூரனென் றுரைத்தான் மலையுத்தமனே" என்பதனாலும், தேசமுய்வான் திருத்தொண்டத்தொகையருளினமையை [3]"நேச நிறைந்த வுள்ளத்தா னீல நிறைந்த மணிகண்டத் தீசனடியார் பெருமையினையெல்லாவுயிருந் தொழவெடுத்துத்—தேசமுய்யத் திருத்தொண்டத் தொகைமுன்பணித்த திருவாளன்—வாசமலர் மென்கழல் வணங்க வந்த பிறப்பை வணங்குவாம்" என்பதனாலும், பெரிதுவந்து போற்றினமையை [4]"நாளும் நம்பி யாரூரர் நாம நவின்ற நலத்தாலே—யாளும் படியா லணிமாதி சித்தி யானவ வணைந்ததற்பின்—மூளுங் காதலுடன்பெருக முதல்வர் நாமத் தஞ்செழுத்துங் கேளும் பொருளு

1. திருக்குறள்-அ௩௫.
2. தேவாரம் - திருநொடித்தான்மலை.
3. பெரியபுராணத்தில் சண்டேசுரநாயனார் புராணம் - ௬0
4. ௸ பெருமிழலைக் குறும்பநாயனார் புராணம் - ௬

முணர்வுமாம் பரிசு வாய்ப்பக்கெழுமினூர்" என்பதனுனும், பரமயோகியாயினமையை [1]"நாலு கரணங் களுமொன்ரு நல்லவறிவு மேற்கொண்டுகாலும், பிரம நாடிவழிக் கருத்துச்செலுத்தக் கபாலநடு — வேல வேமுன் பயின்ற நெறியெடுத்த மறை மூலந்திறப்ப—மூல முதல்லர் திருப்பாத மடைவார் கயிலை முன்னடைந்தார்" என்பதனுனும், மதித்தலியல்பை [2]"சுத்த சிவன் குருவாய்வந்து தூய்மைசெய்—தத்தனை நல்கருள் காணு வதி மூடர்—பொய்த்தகு கண்ணுனமரென்பர் புண்ணிய — ரத்த "னிவனென் றடிபணிவாரே" எனவும், [3]"தேசிகனை யீசனெச் சிந்தனைசெய் வார்தினைப்பார்—பாசமறுத் தேபேரின் பம்" எனவும் வருவனவற்ருனும், இவர் செயல் இறைவர்செயலாய் நிகழ்ந்தமையை [4]"மோக மறுத்திடினு முத்தி கொடுப்பதென—வாகமங்கள் சொன்ன வவர்தம்மைத் தோகைடாற்—றூதாகப் போகவிடும் வன்றெண்டன் றெண்டு கணையேதாகச் சொல்வே னியான்" என்பதனுனும் அறிக. (௩௬)

**செய்ய வார்சடைத் தெய்வ சிகாமணி**
**பாதம் போற்றும் வாதவூ ரன்ப**
**பாவெனப் படுவது பாட்டுப்**
**பூவெனப் படுவது பொறிவாழ்பூவே.**

(இ-ள்) செய்ய வார் சடை தெய்வ சிகாமணி பாதம் போற்றும்—செவ்விய நீண்ட சடைமுடியையுடைய தேவாதிபர் திருவடிகளை வழிபடும், வாதவூர்அன்ப—திருவாதவூ=ரண்ணலே! பூ எனப்படுவது—பூவென்று எவரானும் உயர்த்திப் புகலப் படுவது, பொறிவாழ்பூவே — திருமகள் வதியும் செந்தாமரைமலரேயாம், (அது போல), பா எனப்படுவது—பாவென்று எவரானும் உயர்த்திப் பகரப்படுவது, உன்பாட்டு—தேவரீரருளிய திருப்பாடல்களே. எ—று.

எவரெவர் எவ்வெத் தேவரைக் குறித்து வழிபடினும் அவ்வத்தேவரிடமாக நின்று அவற்றையேற்று அவரவர் வேண்டியபயன்களை அளிக்கவல்ல முதற் கடவுள் சிவபெருமானெருவரேயென்பார், 'தெய்வசிகாமணி' என்றும், மும்மல வழுக்கை ஞானநீராற்கழுவி, மெய்ஞ் ஞானிகளோடு கலந்துகூடி, அவரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் முதல்வனெனவெ கண்டு வழிபடுதல், அரன்கழல ணைந்த சீவன் முத்தர்க்கியல்பாகலின், இவ்வாசிரியரும், போகசாதனமாயுள்ள உட்கரணங்களும் புறக்கரணங்களுமாகிய பசுகரணங்களெல்லாம் அளத்திற் பட்ட புற்போலச் சிவப் பிரகாசத்தினுற் சிவகரணமாய் நிகழ்ச்சுகானுபவமுதிக்கப் பெற்று, அந்நெறியி னெழுகினூரென்பார், 'பாதம்போற்றும்" என்றும், சிவபத்தியையும் சிவப்பேற்றையும் பயப்பதாய்ப் பாடலுட் சிறந்தது திருவாசகமென மேல் விதந்தமையின் திருக்கோவையார் அவ்வியல்பனதன்ருேவென ஐயப்பாடு நிகழுமன்றே, அது நிகழாமற் பரிகரித்தற் பொருட்டு, அதுவும் அவ்வியல்பினதே யென்பார், வாசகமென்னுது, அதனையுஞ் சுட்டப் 'பாவெனப்படுவதுன் பாட்டு" என்றும் கூறினூர்.

அற்றேல், அதுசிற்றின்பப் பொருளதாய்த்திகழ்வ(ு)தன்னையெனின்,-அண்ணல் பாலார்ந்த பேரின்பச்சுவையை ஆர்வமேலீட்டால் நாயக நாயகி முறையின் நயந்து பாராட்டல் ஞானிகளியல்பாகலின் அதற்கோரிலக்கியமாக இறைவர் கட்டளைப் படியே அருளினமைப்பற்றிக் காமஞ்சான் றமைபோற் காணப்படினும், பேரின்பப் பொருள் பயப்பதாய் வேதசிவாகமங் களின் சாரமாய்ப், பாடலுட் சிறந்துவிளங் கலின், ஞானப்பனுவலேயாமென்க. தெய்வசிகாமணியாகலின் அக்கடவுளின், திருமுடி "கொச்சிப் பூவும் பச்சை மத்தமுங் : கொன்றைப்போது மென்றுணர்த் தும்பையுங் - கங்கை யாறும் பைங்கட் டலையு-மரவுமதியமும் விரவித் தொடுத்த-சூடா மாலை சூடிப்பீடுகெழு - நெருப்பிற் றிரித்தனைய வுருக்கிளர் சடிலமொடு-நான் முகங் கரந்த பானிற வன்னங்காணு வண்ணங் கருத்தையுங் கடந்து - சேணி கந்துளது" என்பார், இப்பொருள் குறிப்பின் விளங்கச் 'செய்ய வார்

1. ஷை ஷை - ௧௦.
2. திருமந்திரம் சிவகுருதரிசனம் ௬
3. சங்கற்பநிராகரணத்திருக்குறள்.
4. திருக்களிற்றுப்படியார் ௭௨.

சடை' எனச்சடைமேல்வைத்துக்கூற்றி னார். திருமுடியினையதெனவே, திருவடியும் "தெய்வத் தாமரைச் செவ்வியின் மலர்ந்து-வாடாப் புதுமலர்த் தோடெனச் சிவந்து - சிலம்புங் கழலு மலம்பப் புனைந்து - கூற்றினாற்றன் மாற்றிப் போற்றுது - வலம்புரி நெடுமாலேனமாகி நிலம் புக்-காற்றலினகழத் தோற்றது நிமிர்ந்து- பத்தி யடியவர் பச்சிலை யிடினுமுத்தி கொடுத்து முன்னின் றருளித் திகழ்ந்துள" என்பது தெளியக் கிடத்தலின் செய்யபாதமென விசேடியாராயினார். ஆகவே, ஏனைத்திருவுறுப்புக்களும் இன்னோரன்ன என்பதாம். அவற்றை, மேற்குறித்தாங்கு ஒருவாறு தொகுத்த திருவிடைமருதூர் மும்மணிக்கோவையுட் காண்க. தேற்றேகாரம் முன்னுங்கூட்டப்பட்டது.

சிவபெருமானே அவ்வப்பயன்களை அளித்தலை [1]"யாதொரு தெய்வங்கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே - மாதொரு பாகனார்தாம் வருவர்மற்றத் தெய்வங்கள் - வேதனைப்படுமிறக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யு - மாதலா னிவையிலாதா னறிந்தருள் - செய்வ னன்றே" என்பதனானும், முதல்வனெனவே வழிபடுதலை [2]"செம்மலர் நோன்றாள்சேரலொட்டா - வம்மலங்கழிஇ யன்பரொடு மரீஇ - மாலற நேய மலிந்தவர் வேடமு - மாலயந் தானு மரனெனத் தொழுமே" என்பதனானும், பாதம்போற்றுதலை [3]"மன்னு முன்னுள உயிர்க்கரணங்கண் மாய்ந்து பொய்முதலறிவிழந் தருளாற் றுன்னு மின்னருட் சிவகர ணங்கடோன்ற லாற்சுக வறிவதிற் றோன்றிச்-சென்னியின்மிசை மேவியபாதந் திருந்து கண்ணிணை சேர்த்திருகரத்தா - லுன்னல் செய்திடு மிதயமே லணைவித் துவகை கூர்ந்துமெய் யுணர்ச்சியி லெழுந் தார்" என்பதனானும், வேதாகமங்களின் சாரமாய்ப் பாடலுட் சிறந்தமையை [4]"ஆரணங் காணென்ப ரந்தணர்யோகிய ராகமத்தின் - காரணங் காணென்பர் காமுகர்காமநன் னூலதென்ப - ரேரணங் காணென்ப ரெண்ண ரெழுத்தென்ப ரின் புலவோர் - சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே" எனவும், [1]"வருவா சகத்தினின் முற்றுணர்ந்தோ னைவண் டில்லைமன்னைத்திருவாதவூர்ச்சிவ பாத்தியன் செய்திருச்சிற்றம்பலப் - பொருளார் திருக்கோவை கண்டேயுமற் றப் பொருளைத் தெருளாத வுள்ளத் தவர்கவி பாடிச்சிரிப்பிப்பரே" எனவும், வருவனவற்றானும், பேரின்பப்பொருள் பயத்தலை "இயற்கைப் புணர்ச்சித் துறையீ ரொன்பதுஞ் சத்திநி பாத மொத்திடுங் காலத் துத்தம சற்குரு தரிசன மாகும். பாங்கற் கூட்டம் பதினெட் டின்பந் தாங்குதற் போதந்தான் கண்டகறல்" என இங்ஙனம் தொகையும் வகையுமாகச் செய்யுண்முற்றும் விதந்து விளக்கிய திருக்கோவையார் உண்மையானும், சிவப்பேறளித்தலை [2]"மெய்த்தவ வாதவூரர் விளம்பிட வெழுதுமிந்தப் புத்தக மன்று ளாடல் புரிந்தவ னெழுத்தா மென்று - முத்தியை யுதவுங் கோவை முடிவிடத் தெழுதிப் பின்னர்ச் - சித்திர மலர்க்கையாலே திருந் தமைக் காப்புஞ் செய்தார்" என்பதனானும் அறிக.

சாக்கிரத்திலே நிருமல துரியாதீதத்தைப் பொருந்திச் சீவன்முத்தராய்த் திரியும் சிவஞானிகளுக்கே தலங்கடோறுஞ் சென்று தம்பெருமானைப் பணியும் சரியை முதலியன அநுட்டிக்க வேண்டுவதில்லையாகவும், இணையின்றித் தெய்வத்திருவருளுருவாய் விளங்கிய இந்நால்வரும், அநுட்டித்தொழுகியது எற்றுக்கெனின், நன்றுவினாயினாய்! சிவஞானியராவார் ஞானமுதலிய நான்கிற்கும் உரியரென வகுத்ததூஉமன்றி [3]"ஞால நீதியு நான் மறை நீதியும் - பாலருன் மத்தர் பசாசரி லெனவு - முறங்கி னோன்கை வெறும்பாக் கெனவுந் - தானே தவிரா தானற் புரியா - தொழிந்திடி னிரயத் தழுந் துதறிடமே" எனவும் சிவாகமங்கள் செப்பினவாகலா

1. சிவஞானசித்தி இரண்டாஞ்சூத்திரம்-உரு
2. சிவஞானபோதம் பன்னிரண்டாஞ்சூத்திரம்.
3. திருவாதவூரர்புராணம் திருப்பெருந்துறைச் சருக்கம்-ருஅ.
4. திருக்கோவையார் நூற்சிறப்பு.

1. கோயிற்றிருப் பண்ணியர் விருத்தம்-ருஅ
2. ஷை புராணம் திருவடிபெற்ற சருக்கம்-கரு
3. சங்கற்ப நிராகரணத்தில் மாயாவாதி சங்கற்ப நிராகரணம்.

னும், தமதுண்மையை அறியமாட்டாது குருடாய்க் கிடந்ததமக்குப் பலவாற்றானும் அதனைத்தெரித்துணர்த்தி எத்தனையு மெளியதம்மை எத்தனையுமரிய தானும் வண்ணம் செய்தளித்த பெரிய தோருத வியை மறப்பின் அஃது இதற்குமுன் அறி யாமையான்மறந்த குற்றம்போலத் தீர் திறனுடையதோர் குற்றமன்றாகலானும், முதல்வன் தானுனேயாகச் செய்தாலும் இதுகாறும் தமக்குச்சுந்தரமின்றி முதல் வனது உபகாரத்தை இன்றியமையா தெய்தி அடிமையாகியதாம் எக்காலத்தும் அவ்வாறு அடிமையேயாமாகலானும், அப் பெருமானை வழிபடுதல் அவர்க்கே வேண் டற்பாலனவாம் ஆயின், ஆன்மாக்களுய் தற்குரிய ஞானவொழுக்கச்செயல்களை விளக்கிக் காட்டி அவற்றினிறுவி இஷ்ட சித்திகளையும் பரமுத்தியையும் பாலித்தற் பொருட்டே அவதரித்த இவ்வாசிரியர் நால்வருக்கும் அவை, உலகுய்வான் ஒரு தலையாக வேண்டற்பாலனவென்பது சொல்லாமே அமைதலின், எத்தொண்டி னுஞ் சிறந்த அத்தொண்டினை ஞானத் திற்சரியையாக அனுட்டித்தொழுகினு ரென்க. [1]"வன்றொண்டர் சம்பந்தர் வாகீ சர் மற்றுமுளோர் - பொன்றரிய ஞானம் புகுந்திருக்கச்சென்று-பதிதோறும் பாடிப் பணியுமதென் மாட - மதிதோ யருட் டுறையாய் வந்து" என்றதூஉம் இக்கருத் தேபற்றி.

ஞானத்திற் கிரியை முதலியவற்றை [2]"ஞானத்தின் ஞானுதி நான்குமா ஞானிக்கு - ஞானத்தின் ஞானமே நானென தென்னுமை - ஞானத்தில் யோகமே நாதாந்த நல்லொளி - ஞானக் கிரியையே நன்முத்திநாடலே" என்பதனு னும், ஞானிகள் ஞானுதி நான்கிற்கும் உரியராதலை [3]"ஞானயோ கக்கிரியை சரியை நாலு நாதன்றன் பணிஞானி நாலி னுக்கு முரிய - னூனமிலா யோகமுதன் மூன்றினுக்கு முரியன் யோகிகிரியாவான்ற னெண்கிரியை யாதி - யானவிரண் டினுக் குரியன் சரியையினி னின்றே னச்சரியைக் கேயுரிய னுதலினு லியார்க்கு - மீனமிலா ஞானகுருவேகுருவு மிவனே யீனசினவன் றனென்று மிறைஞ்சி யேத்தே" என்பதனு னும், முத்தியினும் அடிமையாதலை "தன்னை யறிவித்துத் தான்றனைச் செய் தானைப் - பின்னை மறத்தல் பிழையலது, முன்னவனே - தானேதா னுச்செய்துந் - [2]"தைவமென்றுந் தைவமே மானே தொழுகை வலி" என்பதனுனும், ஆசிரி யர்க்கு ஆலயவழிபாடாதியன ஒருதலையாக வேண்டுமென்பதனை [3]" போதகனுகிய குரவனெஞ்ஞான்று நற்கருமம் புரிக வென்று - வேதமுதலாகியநூன் முழுது மொருங் கொருவந்தம் விதித்த லாலே - சாதகனு கியபருவ மாணுக்கன் பாசவலி தணிக்க வல்லான்-மேதினிமே லுடலொடு நற் செயல்விடுவ தன்றியிடை விடலா காதால்" என்பதனுனும், ஆலயவழிபாடு எவற்றினும் சிறந்தமையை [4]"என்று கூடு மிப் பருவமென்றியம்பில் யாமிருந்துள விடந்தொறு மிறைஞ்சி நன்றி சேர்சிவ புண்ணியம் புரியு நன்மை யாலது நணுகு மென் றறிநீ" என்பதனுனும் அறிக.

இனி, இவ்வாசிரியர் நால்வரும் தொண்டர்போன்றாரேனும், ஒவ்வொரு வரும், அக்காலத்திலே சைவசமயங்குன் றும்படி அதிக்கிரமித்திருந்த பொய்ச் சமயங்களாகிய சமணம் பௌத்த முதலி யவற்றை நிராகரித்து, தன்வயத்தனுதன் முதலிய எண்குணங்களுடைமையின் சிருட்டியாதிய கர்த்திருத்துவ முதலிய வற்றை அருள்விளையாட்டி னெய்தி சைவ சமயமகிமையைப் பற்பல ஏதுக்களான் விளக்கினமையின், சைவசமயகுரவரெனப் பெயர்பெற்று, தம்மை வழிபடுவார்க்கும், மேற்கூறிய சித்திகளையுளவர்க்கிப் பரமுத் தியைப் பாலித்ததுமன்றி, பிற்காலத்தவ ரும் ஓர்ந்துய்வான் இறைவரையெய்தற் குரிய சாதனவகைகளையும் அச்சாதனநெறி நிற்பாரெய்தும் பயன்களையும் வகுத்தருளி, இறைவர் திருவுளப்பாங்கின்படிவதிந்த ஆசிரியத்தலைமையுடையவர்களேயாக

1: சதமணிக்கோவை-உக.
2. திருமந்திரம் ஞானம்-அ.
3. சிவஞானசித்தி பன்னிரண்டாஞ்சூத்தி ரம்-இ.

1. சிவஞானபோதம் பன்னிரண்டாஞ்சூத்தி ரம்.
2. தைவம்-தேவனது உடைமை, எனவே, அடிமையென்றபடி.
3. பிரபுலிங்கலீலைகோரக்கர்கதி-சுக.
4. திருவாதவூரர் புராணம் திருப்பெருந் துறைச் சருக்கம்-கூஎ.

லான், இவர்பாலித்த அருட்டிறத்தை மறந்து உய்தியில் குற்றம்பெருது, இவரை இறைவரெனவேதேர்ந்து வழிபடின், அவ்விறைவரே முன்னின்று தற்சொரூபமாக்குவரென்பதே, இந்நூ லாசிரியர் தந்துணிபாகக்கொண்டு, 'கடிவின் மனத்தாற் கட்டவல்லார்க்குத் தானே முத்தி தருகுவன் சிவன்'' என விளக்கியருளினுராகலின், அங்ஙனமே மனமொழிமெய்களான் வழிபட்டும், இவரருளிய தேவாரம் திருவாசகம் திருக்கோவையார் என்பவற்றைப் பசுவாக்கியமென்று நினைப்பினும் அந்நினைவு அதிபாதகமாகிய சிவத்துரோகமேயாகி எரிவாய்நிரயம் பயந்தேவிடுமாகலின் பதிவாக்கியமெனவே ஐயந்திரிபறத்துணிந்து, பவப்பகையை யொழிக்கும் அவற்றை ஓதியுணர்ந்து துதித்தும், சிவமாந்தன்மைப் பெருவாழ் வெய்தலே தெள்ளியோர் கடமையாகும்.

உலகுய்வா னவதரித்தமையை "அவம்பெருக்கும் புல்லறிவினமண் முதலாம் பரசமயப்—பவம் பெருக்கும் புரைநெறிகள் பாழ்பட நல்லூழிதொறுந் தவம்பெருக்குஞ்சண்பையிலே தாவில்சராசரங்களெல்லாஞ் — சிவம் பெருக்கும் பிள்ளையார் திருவவதாரஞ் செய்தார்' எனவும், [2]"அலகில்கலைத் துறைதழைப்ப வருந்தவத்தோர் நெறிவாழ—வுலகில்வருமிருணீக்கி யொளிவிளங்கு கதிர்போல— மலருமருணீக்கியார் வந்தவதா ரஞ்செய்தார்" எனவும், [3]"மாதவஞ்செய்த தென்றிசை வாழ்ந்திடத்—தீதிலாத்திருத் தொண்டத் தொகைதரப் போதுவார்", [4]"தீதகன்றுலக முய்யத் திருவவதாரஞ் செய்தார்" எனவும், [5]"ஆயவளம் பதிய தனி னமாத்தியரி லருமறையின்—றூய சிவா கமநெறியின் றுறைவிளங்க வஞ்சனையான் — மாயனிடும்புத்தவிரு ளுடைந்தோட வந்தொருவர்—சேயவிளம் பரிதி யெனச்சிவனருளா லவதரித்தார்" எனவும் வருவனவற்றுனும், அருள் விளையாட்டிற் சிருட்டியாதிய எய்தினமையை [1]"பாலை நெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதுங் காலனையன்றேவிக் கராங் கொண்ட பாலன்—மரணந் தவிர்த்ததுவு மற்றவர்க்கு நந்தங் கரணம்போலல்லாமைகாண்" எனவும், [2]"தவந்தவேன் பினைப் பெண்ணெனப் படைத்துஞ்சார் மழவ—னுவந்த பெண்ணுயி ரளித்து மொட்டாதெதிர் புத்த—னிவந்த சென்னியை யுருட்டியு முத்தொழினிறுவப்ப வந்தடுத்து யிர்க்கருளுஞ் சொற்பனவனைப் பணிவாம்" எனவும் வருவனவற்றுனும், சைவநெறிபாலித் தமைமையை [3]"சொற்கோவுந் தோணிபுரத்தோன்றலுநஞ் சுந்தரனுஞ் சிற்கோல வாதவூர்த் தேசிகனு— முற்கோலி வந்திலரேனீறெங்கே மாமறை நூலெங்கே—யெந்தை பிரானஞ்செழுத்தெங்கே" என்பதனுனும், இறைவர் திருவுளப்பாங்கின்படி வதிந்தமையை [4]"அன்னதன்மையர் கயிலையையணைவதற் கருளார் — மன்னு தீந்தமிழ் புவியின்மேற் பின்னையும் வழுத்த—நன்னெ டும்புனற் றடமுமொன்றுடன் கொடு நடந்தார்— பன்ன கம்புனைபரமரோர் முனிவராம் படியால்" எனவும், [5]"தித்திக்கு மணிவார்த்தையின்னஞ் சின்னுட் டிருச்செவியி லருந்தவுங்கைச் செம்பொ னெல்லாம் பத்திப்பே ரன்பளித்துக் கவர்ந்து வேண்டும் பணிகொடுபாண்டியனையிவர் பண்பு தேற்றி - முத்திக்கே விடுத்திடவும் புத்தை வாது முடித்திடவுந் திருவுள்ள முன்னமெய்தி - யெத்தித் தொண்டரைக்கருமஞ் சிறிதுண்டிங்கே யிருத்தியென வுருக்கரந்தா னடியரோடும்" எனவும் வருவனற்றுனும், மறத்தல் உய்தியில் குற்றமாதலை [6]"எந்நன்றி கொன்ருர்க்கு முய்வுண்டா முய்வில்லை - செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்பதனுனும், பவப்பகையொழித்தலை [7]"ஒழித்திடும்

1. பெரியபுராணத்தில் சம்பந்த மூர்த்தி புராணம் - உகூ
2. ஷை யில் வாகீசமூர்த்தி புராணம் - கஅ
3. ஷை திருமலைச் சிறப்பு - உரு
4. ஷை தடுத்தாட் கொண்ட புராணம்-ந.
5. திருவிளையாடல் வாதவூரடிகளுக்குப தேசித்த படலம் - ௬

1. திருக்களிற்றுப் படியார் - கட
2. பேரூர்ப்புராணம் கடவுள் வாழ்த்து.
3. சிவானந்தமாலை பாயிரம்
4. ஷை வாசகமூர்த்திபுராணம் -நசுக.
5. ஷை வாதவூரடிகளுக்குபதேசித்த படலம்-ருந.
6. திருக்குறள்-கக0.
7. வைராக்கிய சதகம்.

பவப் பகைவிரைந் துள்ளமே யோதுமூ துணர்வோர்முற் - பழிச்சு பாடலை யரற் கவை விடர்க்கிளம் பாவையருரைபோ லுங் - கழித்திடேலுப சாரமென் றிதனைநீ கட்டுரை யெனக்கொள்வாய் - விழித்து மாரனை யெரித்ததே வருள்பெறும் விருப் பினர் விருப்பீதே" என்பதனானும், சிவன் தற்சொருபமாக்குதலை [1]"சிவனெனவே சிந்தித்துச் செய்பூசை கொண்டே சிவனே பலத்தைச் செயும்" எனவும், [2]"பரப்பிரம மிவனென்றும் பரமசிவன்றானென்றும் பரஞானமிவனென்றும் பராபரன்று னென்று - மரன்றருஞ்சீர் நிலையெல்லா மிவனேயென்று மருட்குருவை வழிபடவே யவனிவன்று னுயே - யிரங்கிய வாரண மாமை மீனண்டஞ்சினையை யியல்பினெ டும் பரிசித்து நினைத்தும் பார்த்தும்-பரிந்தி வைதா மாக்குமா போற்சிவமே யாக்கும் பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துந்தானே" எனவும் வருவற்றானும் அறிக.

இப்பிரபந்தம், இவ்வாசிரியர்களின் அற்புதங்களுட் பலவற்றை எடுத்துக் கொண்ட செய்யுட்கு இணங்குமளவு சுருங்கச்சொல்லல் முதலிய அழகுநிரம்பத் தொகுத்துவிதத்தலால், சுருங்கியதோர் தோற்றமுடைத்தாய் விளங்கினும், உரை செய்வான்புகும் நுண்ணறிவாளர்க்கெல் லாம் பொருளகலங்காட்டி அணிபெற விரிந்து நிற்றல் பற்றி, திராவிடபாஷ்ய கர்த்தரென வியக்கத்தக்க பெரியாரும் இதயத் தமைத்துப்பேணிய தெய்வீக முடையதென, அறிஞர்பலரால் அறிந்து வைத்தும், இதற்கு ஒருவாறு துணிந்தெழு திய இவ்வுரையில், இன்னும் ஆங்காங்கு விரித்துரைக்கற்பாலன மிகப்பலவுளவா கவும், அவற்றை விரிவஞ்சிவிடுத்தமை யின், விரித்தவைகொண்டு விரியாதவற் றையும் உய்த்துணர்ந்து, முரண்பாடின்றி அறிஞர் பெரிதும் சுகிப்பாராக. சுபம்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனருக்கு வெண்பாவும், திருநாவுக்கரசு நாயனருக்கு கட்டளைக்கலித்துறையும், சுந்தரமூர்த்தி நாயனருக்கு விருத்தமும், மாணிக்கவாசக சுவாமிகளுக்கு அகவலுமாக அருளிச் செய்த நால்வர் நான்மணிமாலை விருத்தி யுரையோடு முற்றுப்பெற்றது. (௪0)

திருச்சிற்றம்பலம்.

1. சங்கற்பநிராகரணத் திருக்குறள்.
2. சிவஞானசித்தி பன்னிரண்டாஞ்சூத்திரம் -எ.

## சிவப்பிரகாச சுவாமிகள் துதி

### (சீகாளத்தி புராணம்)

புனையெழில் வடிவினுளோர் போதுமகட் கண்ட் மைந்தர்
மனமெனப் புலவர் நெஞ்ச மருளுமின்றிழ்ப்பா மாலை
சினவிடை யவற்கே சாத்துஞ் சிவப்பிரகாச னென்னு
முனைவனெம் மடிகள் பாத முளரிகள் சென்னி சேர்ப்பாம்.

---

சைவசமய குரவர்கள் திருவடி வாழ்க
சிவப்பிரகாச சுவாமிகள் திருவடி வாழ்க.



13-11-61-ல் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வைத்தீசுவரன் கோயிலில்
இலவச சித்த வைத்தியசாலையை அமைச்சர் துவக்கிவைத்தபோது ஆணையர் தொடக்கவுரை ஆற்றுதல்.

## தாயுமானவர் பாடல்

எத்தனைப் பிறப்போ எத்தனை இறப்போ
எளியனேற் கிதுவரை அமைத்த(து)
அத்தனை எல்லா மறிந்தநீ அறிவை
அறிவிலி யறிகிலே னந்தோ
சித்தமும் வாக்குந் தேகமு நினவே
சென்மமு மினியெனு லாற்று
வைத்திடிங் கென்னை நின்னடிக் குடியா
மறைமுடி யிருந்தவான் பொருளே.

[வேதத்தின் முடியாயுள்ள ஒப்பற்ற தனிப்பொருளே! இந்த ஏழையேனுக்கு அமைத்தது எத்தனை பிறப்போ? எத்தனை இறப்போ? எல்லாம் அறிந்த நீ அறிந்திருப்பாய். அறிவில்லாத யானே தெரிவன்? ஐயோ! மனம் வாக்கு காயம் இம்மூன்றும் நின்னதாயுள்ளன. இனிப் பிறத்தலும் என்னால் முடியாது. (ஆதலின்) எளியனை நினது அடிமைக் குடியாகக் கொண்டருள்வாயாக.]

## அடியவர் திருநட்சத்திரங்கள்

பிலவ—மார்கழி

**சைவம்**

7உ—சடைய நாயனார்
14உ—இயற்பகை நாயனார்
17உ—மானக்கஞ்சாற நாயனார்
22உ—சாக்கிய நாயனார்
29உ—வாயிலார் நாயனார்

**வைணவம்**

20உ—தொண்டரடிப்பொடியாழ்வார்



திருவீழிமிழலை—வௌவால் நத்தி மண்டபம்

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras-34.
Printed at Paari Achakam, 127, Broadway, Madras-1.